
ஜூலை 12 - 18, 2004 24 பக்கங்கள் 16.00
July 12 - 18, 2004
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THINAKKURAL? — no

வார மலர்

பொதுசன நூலகம்
12 JUL 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்




# கிழக்கிலிருந்து கொழும்புவரை...

# கட்சி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டிருக்கும் கருணா விவகாரம்

கடந்த முதலாம் திகதியன்று நோர்வே தரப்பினர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பின்பு அங்கு பேசப்பட்ட விடயங்களை கொழும்பு சென்று ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தெளிவாக தெரிவித்த பின்னர் நோர்வே சென்று விட்டனர்.

கிளிநொச்சியில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் பேசும்போது கருணாவை மறைமுகமாகப் பாதுகாத்துக் கொண்டு விடுதலைப்புலிகளுடன் நல்லெண்ணத்தை அரசாங்கம் பேண முயற்சிப்பது சாத்தியப்படாது எனத் தெரிவித்திருக்கிறார்.

கருணாவை அரசு தொடர்ந்து பாதுகாத்து வருவது பற்றிய விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி இல்லாமல் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடர்வது சாத்தியம் இல்லை என்று அச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தெளிவாகத் தெரிவித்து விட்டார்கள்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி கருணாவிடம் இருந்து மீண்டும் திரும்பி வந்துள்ள பெண் புலித்தளபதிகள் தெரிவித்துள்ள தகவல்களும் சமீபத்தில் கிழக்கில் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட கருணாதரப்பின் 7 உறுப்பினர்கள் தெரிவித்துள்ள தகவல்களும் ரணிலின் ஆட்சிக் காலத்தில் இருந்தே புலிகளை ஒடுக்குவதில் அரசும், எதிர்க்கட்சியும் மும்முரமாக செயற்பட்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளன.

## அரசும் எதிர்க்கட்சியும் மறுப்பு

கிளிநொச்சியில் தமிழ்ச் செல்வனைச் சந்தித்த மறுநாள் நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்த ஜனாதிபதி கருணா விடயத்தில் அரச தரப்பினரோ அல்லது இராணுவத்தரப்பினரோ சம்பந்தப்படவில்லை என்றும் அவ்வாறு தொடர்புபட்டிருந்தமை தெரிய வந்தால் அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

பதிலுக்கு ரணிலும், மகேஸ்வரன் எம்.பியும் நோர்வே தரப்பிடம் தமது கட்சி கருணா விடயத்தில் எந்தச் சம்பந்தமும் கொண்டிருக்கவில்லை என்றும் அலிஸாகிர் மௌலானா சம்பந்தப்பட்டிருப்பது அவரது தனிப்பட்ட விவகாரம் என்றும் கூறி விடுதலைப்புலிகளை சமாதானப் படுத்த முயற்சித்திருக்கிறார்கள்.

ஆனால், இவ்விடயத்தில் விடுதலைப் புலிகளும் பிடி கொடுக்காமல் இவ்வறான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன என்றும் இவைபற்றி இப்போது எந்தக் கருத்தையும் கூற விரும்பவில்லை என்றும் கூறியதுடன் நிறுத்திக் கொண்டு விட்டார்கள்.

## அரசும் எதிர்க்கட்சியும் ஒற்றுமை

கடந்த 3 ஆம் திகதியன்று புலனாய்வுக்குப் பொறுப்பாக இருந்தவர் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அலிஸாஹிர் மௌலானாவை எம்.பி பதவியில் இருந்து நீக்கி தமது கை சுத்தமானது என்று காட்ட ரணில் முயற்சித்ததன் பின்பு, இப்போது ஜனாதிபதியும் புலனாய்வுக்குப் பொறுப்பானவரை பதவி நீக்கியதன் மூலம் தானும் புலிகள் விடயத்தில் சுத்தமானவர் எனக் காட்ட முயற்சித்திருக்கிறார்.

கருணாவிடயத்தில் ஜனாதிபதியும் - எதிர்க்கட்சியும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டிருந்தமை பற்றிய தகவல்கள் பரஸ்பரம் இருதரப்புக்களுக்கும் தெரிந்திருந்த போதும் இது பற்றி ஒருவரை யொருவர் ஆதார பூர்வமாக காட்டிக் கொடுக்காது இருப்பது இங்கு கவனத்திற்குரிய விடயம்.

## கட்சி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டுள்ள கருணா

கருணா கொழும்புக்கு கூட்டிவரப்பட்டமை, பின்னர் அவர் ஹில்டன் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டமை, நுகேகொடையில் உள்ள வீட்டுக்கு பின்னர் மாற்றப்பட்டமை மற்றும் கருணாவுக்கான இராணுவப் பாதுகாப்பு, புலனாய்வு அதிகாரிகள் கருணாவை சந்தித்துப் பேசியமை, பிந்தியதாக கருணா கட்சி ஒன்றை ஆரம்பித்து புலிகளுக்கு எதிராக அவரைப் பயன்படுத்துதல் இந்த எல்லா விடயங்களிலும் அரசும் எதிர்க்கட்சியும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

தமது கட்சி நலன் களுக்காக தமக்கு எதிரான கட்சியின் செயற்பாடுகள் மீது குற்றம் காணும் ரணிலும், ஜனாதிபதியும் கருணா விடயத்தில் தாம் தொடர்புபட்டுள்ளமை தொடர்பாக வாய்மூடி மௌனியாக இருக்கின்றனர்.

உண்மையில் அரசும் - எதிர்க்கட்சியும் கருணாவிடயத்தில் இணைந்துதான் செயற்படுகின்றன. இங்குதான் இந்த இரு கட்சிகளினதும் மூலமாக சிங்கள ஆளும் வர்க்கத்தின் நலன்கள் தொழிற்படுகின்றன.

விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் ஆயிரக்கணக்கான படையினரைப் பறிகொடுத்து சிங்கள தேசியவாதத்துக்கு தீனி போடுவதன் மூலம் தமது அதிகாரத்துவ நலன்களை காப்பாற்றி வந்த ஆளும் வர்க்கத்துக்கு பிந்தியதாக விடுதலைப்புலிகளின் கொழும்பை நோக்கிய நகர்வுகள், முன்னெடுப்புக்கள் ஆளும் தரப்பின் இருப்பையே கேள்விக்குறியாக்கிவிட்டன.

இதன் பின்பு, யுத்தத்தைக் காரணம் காட்டி, ஆயுதக் கொள்வனவுகள், அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலை அதிகரிப்புக்கள், தென்னிலங்கைக்கான அபிவிருத்திகளை



ரணில்

மட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முடியாத அளவுக்கு நிலைமைகள் தலைக்கு மேல் சென்று விட்டதன் பின்பு, புலிகளை எப்படியாவது ஒடுக்குவதன் மூலமே தமது இருப்பை தக்க வைக்க முடியும் என்ற முடிவுக்கு, ஆளுந்தரப்பினர் வந்து விட்டார்கள்.

முல்லைத்தீவு, ஆனையிறவு, பூநகரி ஆகிய முகாம் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான படையினரை பறி கொடுத்த பின்பு கடைசியாக கட்டுநாயக்கவிமானத்தளம் மீதான தாக்குதல் மூலம் கொழும்பின் உயர் பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளான நிலையில் இப்போது சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு புலிகளை ஒடுக்குவதற்கு வசதியாக கருணா கிடைத்திருக்கிறார்.

இதில் அரசியல் நலன்களுக்கும் மேலாக இராணுவத்தின் நலன்களே மேலோங்கியிருக்கின்றன எனக் கூற முடியுமாயினும், இப்போதைய போர்நிறுத்த கால சூழலும் கூட சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஆபத்தானதாகவே தென்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், விடுதலைப்புலி உறுப்பினர்களை கொழும்பில் சுதந்திரமாக நடமாட ரணில் அரசு அனுமதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதன் பின்னர், இப்போது கொழும்பின் நிர்வாகத்தை சீர்குலையச் செய்யுமளவுக்கான தாக்குதல் பலத்தை புலிகள் கொழும்பில் கொண்டிருக்கின்றார்கள், என்ற சந்தேகம் கலந்த பயப்பீதி ஆட்சியாளர்களை வேறு குழப்பிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமை யானது ஆட்சியாளர்களை மட்டுமல்ல, அவர்களின் பின்னால் உள்நாட்டையும், வெளிநாட்டையும் தொடர்பு படுத்திய ஆளும் வர்க்கத்தின் சுதந்திரமான செயற்பாடுகளும் கூடவே ஆட்டம் கண்டிருக்கின்றன. அவர்களின் இருப்புக் கும் வாழ்வுக்கும் புலிகள் அச்சுறுத்தலாக இருக்கிறார்கள்.

எனவே ரணிலின் பின்னால் உள்ள சிங்கள தேசியவாதிகளும் கூடவே ஜனாதிபதியின் பின்னால் உள்ள சிங்கள ஆளும் வர்க்கமும் கருணாவை விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருப்பி விட வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள். இதன் மூலம் குறிப்பாக வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதை குழப்புவதில் அரசு கவனமாக இருக்கிறது.

கொழும்பை நோக்கிய புலிகளின் சுதந்திரமான செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கும் இதற்கும் மேலாக வடக்கு கிழக்கில் தமிழ் தேசியவாதத்தை முன்நிலைப்படுத்தி சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளை. வடக்கு கிழக்கின் சுயாதீன வெகுஜன அமைப்புக்கள் மேற்கொள்வதை தடுப்பதற்கும் கருணாவின் பக்கபலத்தை அரசு எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

எனவே, பல ஆயிரம் சிங்கள இராணுவத்தினரின் பலத்துக்கு மாற்றாக கருணா என்ற தனிமனிதனை அரசு நம்புவதாகத் தெரிகிறது.

## கருணா விடயத்தில் ஜே.வி.பியும் - ரணிலும்

114 உறுப்பினர்களின் கையெழுத்து மகஜரை சபாநாயகரிடம் சமர்ப்பித்து நாடாளுமன்ற பலத்தை நிரூபிக்க எதிர்க்கட்சி முயலுவதை அவதானித்துள்ள ஜே.வி.பியினர் ரணிலின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற மோசடிகளை கிளறுவதன் மூலம் ரணிலை அச்சுறுத்த முனைவதாக தெரிகிறது.

அதுமட்டுமன்றி, கடந்த 3 ஆம் திகதி ஜே.வி.பியினர் ஊடகவியலாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கருணாவை சரியாகப் பயன்படுத்துவதில் ஆட்சியாளர்கள் தவறிழைத்து விட்டனர் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

அதாவது, விடுதலைப்புலிகளிடமிருந்து வெளியேறிய கருணாவை நாட்டுக்குப் பயன்உள்ள வகையில் பயன்படுத்தவில்லை, இது விடயத்தில் பாரியதவறை அரசு இழைத்துள்ளது என்கிறது ஜே.வி.பி. இன்னும் கூறினால், புலிகளிடமிருந்து கருணா பிரிந்ததன் பின்னர் கிழக்கில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் கொலைகள் என்பன போதாதென்பது ஜே.வி.பியின் கருத்து.

கருணா வெறுமனே தனிக்கட்சி அமைத்து செயற்படும் முயற்சிகள் கூட ஜே.வி.பிக்கு அவ்வளவு திருப்தியாக இல்லைப்போல் தெரிகிறது.

## கருணா தொடர்பாக ஹெல உறுமய

புலிகளுடனான கருணாவின் முரண்பாடு சந்தேகத்துக்கிடமானது; பின்னர் எப்படியாவது பிரபாகரனும் கருணாவும் ஒன்று சேர்ந்து விடுவார்கள் என்று கூறியுள்ள ஹெல உறுமயவினர் கொழும்பை நோட்டமிடவே கருணா வந்திருப்பதாகவும் கூறியுள்ளனர்.

கடந்த வாரம் இவ்வாறு கருத்துக் கூறிய ஹெல உறுமய, கடந்த 3 ஆம் திகதியன்று தனது கருத்தியை மாற்றி, கருணாவை பாதுகாத்த இராணுவத்தினர்க்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

அவர்களது கருத்தின்படி, கருணா விவாகாரம் மறைப்பதற்கோ மறுப்பதற்கோ உரிய விவகாரமல்ல, அதனை அரசு வெளிப்படையாக ஒத்துக் கொண்டு இதில் சம்பந்தப்பட்டவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பது ஹெல உறுமயவின் கருத்தாகும்.

## பிந்திய நிலைமைகள்

தற்போது நிலவும் சமாதான சூழலில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் என்பதற்குப் பதிலாக, விடுதலைப்புலிகளை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் அரசு ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது.

கடந்த 5 ஆம் திகதியன்று கரும்புலிகள் தினத்தை விமர்சையாக கொண்டாடுவதற்கான ஏற்படுகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ள நிலையில் புலிகளுக்கான எதிர்ப்பிரசார நடவடிக்கைகளிலும் அரசு ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது.

"சமாதானத்தை விரும்பும் பல்கலைக் கழக மாணவர் குழு" என்ற பெயரில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கி முனையிலேயே விடுதலைப் புலிகளை ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தொனியிலான சுவரொட்டிகள் அரசாங்க அச்சகமொன்றில் அச்சிடப்பட்டமை தெரியவந்திருக்கிறது.

புலிகளுக்கெதிரான இந்தப் போஸ்டர்களை வெளியிடுவதன் மூலம் கருணாவுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை தீவிரப்படுத்துவதில் அரசு ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது.



சந்திரிகா

இதேபோன்று, மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் தற்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஊடகங் களுக்கு தகவல் வெளியிடுவதாகவும், சிறையில் அவருக்கு தொலைத் தொடர்பு வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் புலிகள் அரசை குற்றம் சாட்டியுள்ளனர்.

மோசடிக் குற்றம் சாட்டப்பட்டு தம்மால் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சச்சி மாஸ்டர் என்பவரே தற்போது மாறன் என்ற பெயரில் தொலைபேசி வாயிலாக பேட்டிகள் வழங்கி வருவதாக புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

பிந்தியதாக வெளிவந்துள்ள இந்தச் செய்திகள் விடுதலைப்புலிகளை வலிந்து சண்டைக்கு இழுக்கும் முயற்சிகளாகவே தென்படுகின்றன. கருணாவிடயத்தில் அரசு எந்தவிதத்திலும் சம்பந்தப்படவில்லை என நோர்வே தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் அடித்துக் கூறியுள்ள ஜனாதிபதி அவ்வாறு யாராவது தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறி நான்கு நாட்களுக்குப் பின் மேற்படி புலிகளுக்கு எதிரான அரசின் திட்டமிட்ட விஷமப் பிரசாரத்துக்கான முயற்சிகள் அம்பலத்துக்கு வந்திருக்கின்றன.

தன்னாட்சி அலகின் அடிப்படையிலான பேச்சுக்கு ஒரு போதும் ஆதரவளிக்கப் போவதில்லை என்பதை மீண்டும் ஒரு முறை ஜனாதிபதிக்கு ஜே.வி.பியினர் வலியுறுத்தியதன் பின்பு, சமாதானப் பேச்சுக்கள் மூலமாகவன்றி, மறைமுகமான சக்திகளைக் கொண்டு புலிகளை பலவீனப்படுத்தும் முயற்சிகளிலேயே ஜனாதிபதி கவனமாக இருக்கிறார். அவரது முயற்சிகள் நடைபெறப்போகும் மாகாணசபை தேர்தலுக்குப் பின்பு உத்வேகம் பெறுமா அல்லது தளர்ந்து போய் விடுவாரா என்று தேர்தல் முடிவுகளிலேயே தங்கியிருக்கிறது.

-சாலையூரான்-


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ.45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |



# அரசியல் அம்பலம்

## சின்ன மீன்களைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கவா?

''சின்ன மீனைப் போட்டால் தான் பெரிய மீனைப் பிடிக்கலாம். சில்லறையைப் போட்டால்தான் நோட்டு நோட்டாய் எண்ணலாம்'' என்று குசியாகப் பாடினார் அந்த ரேஷ் ஓடுபவர்.

''என்ன ரேஷ் டிக்கட் ஏதும் விழுந்து விட்டதோ நோட்டு நோட்டா எண்ணலாம் என்று பாடுறீங்க'' என்றார் நண்பர்.

''இல்லை சார் போனவாரம் கம்பளையில் ஒரு மீட்டிங் நடந்தது. அரசாங்கத்தின் பெரிய புள்ளியின் வீட்டில் தடல்புடலான விருந்து'' என்று வாய் சப்பினார் ரேஷ் ஓடுபவர்.

''நீங்களே பச்சைக் கூட்டில் அடைப்பட்டுக் கிடக்கிறீர்கள்! எப்படி அரச புள்ளி வீட்டில் விருந்து நடந்தது?'' என்றார் நண்பர்.

''அப்புறானே சத்தியமா சொல்றன், விருந்து நடந்ததுதான். முக்கியமான விடயம் சம்பந்தமாகப் பேசினோம்'' என்று அடித்துச் சொன்னார் ரேஷ்.

தம்பியும் கடைசியாக தாகசாந்தி செய்து இருந்ததால் நண்பருக்கும் வசதியாகிவிட்டது. ரேஷ் ஓடுவது போலவே உழறத் தொடங்கிவிட்டார்.

''ஆமாம் சார். பழையபடி நீல மேகத்துக்குள் வந்து சேர்ந்து கொள்ளும் படி ஒரேகரைச்சல். இது சம்பந்தமா பெரிய தலைவரிடம் பேசி எப்படியாவது சரிக்கட்டும்படி கேட்டனர். அதற்கு உபகாரமாக மீண்டும் பொலிஸ் பந்தாவோட ஒரு மினிஸ்டர் போஸ்ட் தாறதாவும் சொன்னாங்க'' என்றார்.

''என்ன ஐயா ஒங்க தலைவர் தான்'' நான் எதையும் ஏற்க மாட்டேன். சிஷ்யப் பிள்ளைகளுக்குத் தான் கொடுப்பேன், என்று கூறிவிட்டாரே'' என்றார் நண்பர்.

''சரியாச் சொன்னீங்க சார்! அப்படி அவர் ஏத்துக்கிட்டா இந்தச் சண்டையே வந்திருக்காதே!'' என்றார் ஓட்டக்காரர்.

''என்ன சொல்றீங்க சண்டையா?'' என சீண்டிவிட்டார் நண்பர்.

''ஆமாம் சார். கிடைக்கப் போவதோ ஒன்றரை போஸ்ட்டு. இதை எப்படிங்க ஏழாகப் பிரிப்பது. அது நீதான் ஆள் ஆளுக்கு ஒரே போட்டி. ஒருத்தருக்குத் தெரியாமல் ஒருத்தர் தலைவர்கிட்ட காவடி எடுக்கிறாங்க.

''நான் பாருங்க எத்தனை ஹோட்டல், எப்படி எப்படி எல்லாம் கவனித்து பரிகாரம் பண்ணி இருக்கேன். என் மேல் தம்பியாருக்கு ஒரு பாசம் தான். எப்படியோ அரை போஸ்டாவது கிடைக்கும். ஆனால் மற்றவர்கள் மத்தியில் தான் இழுபறி ஏற்பட்டுள்ளது'' என்று நீட்டி முழக்கினார்.

எது எப்படியோ சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப்பிடிக்கதுடிக்கிறாங்க. ஆனால் இந்தப்பசங்களோ வயிற்றில் இருக்கும் பிள்ளைக்குப் பெயர் வைத்ததோடு உனக்கு எனக்கு என்று அடிபட்டு துடிக்கிறாங்க. இது எப்படி இருக்கு?

## எதிரிக்கு எதிரி நண்பன் தானே

இப்போது அரலி மரத்தடியில் குடியேறி இருக்கும் கதிர்காம மஹிந்தன் மிகவும் கோபத்துடன் காணப்பட்டார்.

''என்ன ஐயா! இப்போது நாட்டின் இரண்டாவது மூத்த குடிமகன் ஆகிவிட்டீர்கள். நீங்கள் ஏன் கோபமாக இருக்க வேண்டும்'' என்று ஆரம்பித்தார் நண்பர்.

''சார் எல்லோரும் நினைப்பது போல் நான் சந்தோஷமாக இல்லை. இரண்டாவது முதல் மகன் என்று கூறிக்கொண்டு நான் செய்வது பியோன் வேலை தானே?'' என்று அப்பட்டமாகவே கூறினார் கதிர்காம மஹிந்தன்.

''என்ன ஐயா அப்படிக்கூறுகிறீர்கள்? நாட்டையே கதி கலங்க வைக்கவிருந்த சுகாதார ஊழியர்களின் போராட்டத்தையே சிம்பிலாக முடித்து சாதனை படைத்துவிட்டீர்கள். எல்லோரும் உங்களைப் பாராட்டுகின்றனர்'' என ஒருகிலோ ஐஸை தலையில் வைத்தார் நண்பர்.

''சார் எனக்கு ஏற்கனவே தடிமல் பிடிச்சிருக்கு. மேலும் ஐஸ் வைக்கிறீர்கள்'' என்று தமாசாகக் கூறிய அரலிமரத்தார்'' இந்த ஆஸ்பத்திரி விடயத்தில் தான் எனக்கு முதலாவது குழி வெட்டப்பட்டுள்ளது'' என்றார்.

''இது ரொம்ப அநியாயமாக இல்லையா இருக்கு. ஆளாளப்பட்ட அமைச்சர்களும் , தலைவர்களும் தீர்க்க முடியாத காரியத்தை நீங்கள் செய்துவிட்டீர்கள். பெருமைப்படுவதை விட்டு குழி வெட்டி விட்டார்கள் என்று அலுத்துக்கொள்ளலாமா?'' என சீண்டிவிட்டார்.

''உள்ளுக்குள்ள விசயம் தெரியாம பேசுறீங்க சார். வருடக்கணக்கில் தீர்க்க முடியாத விடயத்தை இரண்டு வாரத்தில் தீர்ப்பதாக உத்தரவாதம் அளிக்க வைத்து விட்டார்கள். இது நடக்கக் கூடிய விசயமா? இந்தப் போராட்டத்தின் பின்னணியில் போஸ்டர் காரங்கதான் இருக்காங்க. அதுதான் பெரிய தலையிடி'' என்று மீண்டும் புலம்பினார் அலரிமரத்தார்.

''என்ன ஐயா அவர்களும் உங்க வீட்டுக்குள்ளேயே தானே இருக்கிறார்கள். அவர்களைப்பத்தி ஏன் கவலைப்பட வேண்டும்'' என மீண்டும் சீண்டினார் நண்பர்.

ஐயோ சார். அங்க தான் ஆபத்தே இருக்கு. ஆரம்பம் முதலே போஸ்டர்காரவுங்களுக்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம். இப்ப ஆஸ்பத்திரி விடயத்தில் வகையாக மாட்டிவிட்டார்கள்.

நாள் போகப்போக அது தான் நடுக்கமாக இருக்கு.'' என்றார் அரலி மரத்தார்.

''என்னங்க நீங்க. இதுக்குப்போய் கவலைப்படுறீங்க. அதி உயர் மன்றத்திலேயே அடித்துப்புரண்டு கொள்கிறார்கள். மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். இப்ப என்னடா என்றால் சமாதான நாயகன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையை ரத்துச்செய்யும்படி இரண்டு பேரும் ஒன்றாக கோர்ட்டுக்குப் போய் உள்ளனரே. தெரியாதா?'' என நண்பர் சுட்டிக்காட்டினார்.

அது தான் சார். எதிரிக்கு எதிரி நண்பன் என்பது உறுதியாகிப் போச்சு'' என்றார் அரலிமரத்தார்.

''அப்படீன்னா ஒரே வீட்டில் இருப்பவர்கள் எதிரியாகிவிட்டனரோ'' எனக் குத்திக் காட்டிவிட்டு கிளம்பிவிட்டார் நண்பர். இந்தக்கதை எப்படி இருக்கு?


சுவிஸில் உங்கள் அபிமான சுடர் ஒளி விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

சாரதி பயிற்சி நிலையம்
ACHALA LEARNERS
(Specialist Driving Traning School)
- பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்கள்
- மாணவர்களுக்கு ஒரு நாளில் அனுமதிப்பத்திரம்
- தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிட வசதி
அச்சலா லர்னர்ஸ்
100/G ஹில் வீதி, தெஹிவளை
தொலைபேசி: 011 5533228-9
Mobile: 0777-388422 / 0777-797429

நீங்க கொம்ப்யூட்டர் Accountant ஆகணுமா?
Batch Starts on 14th & 17th July
Tally படிங்க
Authorised Tally Academy
CSC Computer Education
No : 200, 2nd Floor,
George R de Silva Mawatha,
Kotahena. Colombo 13.
Tel : 4613225, 2587099

MICRO PC SYSTEMS
அதிநவீன புத்தம் புதிய கணனிகள்
Visit our showrooms for best pricing
warranty 3 Years warranty
ரூ 37,000 /= தொடக்கம்
AMD/Intel P4 Computers
Also Avilable All Computer accessories
Special offer
HP Deskjet 450 (Mobile printer) 4800 dpi colour 8-9 page/min. USB & Parallel — 13,500/= +VAT
invent Lap-top printer
Deskjet
HP Deskjet 1180c (A3 printer) 1200 optimized dpi colour 8 pages per min. USB — 25,250/= +VAT
HP Deskjet 3550 2400 optimized dpi colour 10-14 pages per min. USB — 4,900/= +VAT
HP PSC 1350 Print-Scan-Copy 17 pages per min. scan: 600x2400 dpi — 14,500/= +VAT
Laser Printers-Mono & color
HP 1010 12 pages per min. 600 dpi USB — 18,250/= +VAT
HP 1300 19 pages per min. 1200 dpi USB/Parallel — 34,950/= +VAT
HP Color Laserjet 1500 series 16 pages per min 600 dpi — 78,000/= +VAT
Projectors
135,000/= onwards
1500 ANSI lumens 800x600 dpi 16.7 million colours
1700 ANSI lumens 1024x768 dpi 16.7 million colours
buy with HP warranty card 1-3 years
Open on sundays & Poya days 9am to 1pm.
We undertake
PC REPAIRS UPGRADES
MONITOR UPS PRINTER POWER SUPPLY SCANNER
HP PRINTER REPAIRS
Mobile Service
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து திருத்தித் தரப்படும்
உங்கள் அருகில் உள்ள கிளையை அணுகுங்கள்
வெள்ளவத்தை: 15. 36th Lane, Wellawatte. 011-4513235 011-4516764
கொட்டாஞ்சேனை: 82, New Chetty St, Kotahena. 011-4613617 011-4619673
யாழ்ப்பாணம்: 175/3 Kasthuriyar Rd, Jaffna. 021 2225893 071 2374181
Business Partners Web: www.mipaq.com E-mail: micropc@dialogsl.net
வவுனியா 37. 1st Cross St, Vavuniya. Tel: 024 222 2606
திருகோணமலை 148, Main Street, Trinco. Tel:026 222 7521

பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்
தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/- தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/-
தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்
மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/-





ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 2421398

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)
இளம் சமுதாயத்ினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் சோர்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்வேறு சரும நோய் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்
Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)
மனித உறுப்புக்கள் அனைத்திலும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.
வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு
எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
கொழும்பில்...
ஜூலை 21 - 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205
கல்முனையில்...
ஜூலை 31, ஆகஸ்ட் 01 ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205
வவுனியாவில்...
ஜூலை 30, 31 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205
யாழ்ப்பாணத்தில்...
ஜூலை 13 - 16 வரை
A.S.N கற்றலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

ஜூலை 12 – 18, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## விளைவுக்கு அரசே பொறுப்பு

பொதுத் தேர்தல் முடிவடைந்து மூன்று மாதங்கள் கடந்து விட்டன. மாகாணசபைத் தேர்தல்களும் முடிவடைந்து விட்டன.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவில் தோற்றதுடன் அரசினால் அவசரமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் இன்னும் ஓர் அங்குலம் கூட நகரவில்லை.

மாகாணசபைத் தேர்தலின் பின்பு அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகிவிடும் என்று அரச தரப்பினால் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால், அதற்கான அறிகுறி எதுவுமே தற்பொழுது தென்படவில்லை.

சமாதான முயற்சிகள் முற்றாகக் குழம்பிப் போகும் நிலைமையே காணப்படுகிறது.

கடந்த வாரம் அடுத்தடுத்து இடம்பெற்ற மூன்று சம்பவங்கள் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கிவிட்டிருக்கின்றன.

கரும்புலிகள் தினமான 5 ஆம் திகதி மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிராயுதபாணியாகச் சென்ற விடுதலைப்புலிகள் இயக்கப்போராளிகளைக் குறிவைத்து ஏறத்தாள ஒரே சமயத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் வைத்து துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்த தாக்குதல்களில் வந்தாறு மூலையில் போராளி ஒருவர் மரணம் அடைந்தார். மற்றொருவர் காயம் அடைந்தார்.

மட்டக்களப்பு நகரப் பகுதியில் நடந்த மற்றொருதாக்குதலில் நகர அரசியல் பொறுப்பாளரும் மற்றும் போராளி ஒருவரும் காயம் அடைந்தனர்.

6 ஆம் திகதி ஹிங்குராகொடவில் பௌத்த விகாரை ஒன்றுக்குள் ஆயுதங்களுடன் மறைந்திருந்த கருணா தரப்பினர் 14 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஆயுதங்களுடன் கைதாகவில்லை என்றும் ஆயுதங்கள் புறம்பாகவே கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டு இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடுவிக்கப்பட்ட பின்பு எங்கே சென்றார்கள்? அடுத்த தவணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராவார்களா? என்பது குறித்து எதுவும் தெரியவில்லை. நீதிமன்றத்தில் இருந்து படையினரே இவர்களை கூட்டிச் சென்றிருக்கின்றனர். ஆகவே கருணா குழுவைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்த மிகவும் திட்டமிட்டுக் காரியங்கள் ஆற்றப்படுகின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

கருணாவை ஒழித்துக்கட்டும் போரை கிழக்கில் விடுதலைப்புலிகள் ஆரம்பித்த சமயம் கருணாதரப்புக்கு ஆதரவாக படையினரை அரசு ஈடுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்தவர்தான் அந்த விகாரையில் கருணா தரப்புக்கு அடைக்கலம் கொடுத்திருந்த பௌத்த பிக்கு. அந்த விகாரை கைக்குண்டு வீச்சுக்கு உள்ளாகியதும் பௌத்த பிக்கு படுகாயம் அடைந்ததும் அந்த விவகாரம் எவ்வளவு பாரதூரமானது என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

மட்டக்களப்பில் இந்த வாரம் இடம்பெற்ற இந்த சம்பவங்களை அடுத்து 7 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்புச் சம்பவம் நாடு முழுவதையும் அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்பு இடம் பெற்ற மிகப் பெரிய சம்பவம் இதுவாகும்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக புலிகளின் நான்கு அடிப்படை விடயங்களை ஏற்றுக் கொண்டு எழுத்தில் உத்தரவாதம் அளிப்பதற்கு ஜனாதிபதி பின்னடித்து வருகிறார். அதேசமயம் கருணா குழுவினரைப் பயன்படுத்தி புலிகளை பலவீனப்படுத்தவும் காரியங்கள் கச்சிதமாக நடைபெற்று வருகின்றன. இதனால் நாடு 1994 ஆம் ஆண்டு நிலைக்கு பின்நோக்கிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, விளைவுகளுக்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.



கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பு

# கிழக்கிலிருந்து கொழும்புவரை

# நிழல் யுத்தம்

அசோகவனத்தில் இருந்த போது சீதை சாபம் இட்டாரா? இந்த அழகிய சிறிய தீவில் சமாதானத்துக்கு எப்போதும் கேள்விக்குறியாகிறதோ? துப்பாக்கிச் சத்தங்கள் இன்றி நீடித்த சமாதானத்தின் நீண்ட தேன்நிலவுக் காலத்தின் முடிவுரைக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டாயிற்றா என்று இப்போது சந்தேகம் எழுகிறது.

சுமார் இரண்டுவருட காலத்தின் பின்னர் தலைநகரை அதிரவைத்துச் சிதறிய தற்கொலையாளியின் குண்டுடன் சமாதானம் குறித்துஎஞ்சியிருந்தநம்பிக்கைகளும்சிதறின.

இதுவரை கிழக்கில் மையங் கொண்டிருந்த நிழல் யுத்தம் மெல்லத் தலைநகர் கொழும்பையும் தாக்கி அதிரவைத்துள்ளது.

ரணில் பிரதமராகப் புலிகளுடன் கையெழுத்திட்டுக் கொண்டு வந்த யுத்த நிறுத்தத்தின் பின்னர் துளிர்த்த அமைதி நிலையில் கருணா விவகாரத்தால் கந்தகநெடி வீச ஆரம்பித்தது. அரச இராணுவமும் அதன் புலனாய்வுப் பிரிவும் கருணா விவகாரத்தைக் கையாண்ட விதத்தால் கிழக்கை கந்தக வாடை கடுமையாகத் தாக்கிற்று.

அப்போதே அங்கு ஒரு நிழல் யுத்தம் ஆரம்பித்து விட்டது. சில மாதங்களின் பின்னர் விடுதலைப்புலிகள் அதனை உறுதிப்படுத்தினார்கள். கருணா விவகாரத்தைப் பயன்படுத்தி அரச படைகள் ஓர் இருண்ட யுத்தத்தைக் கிழக்கில் நடத்துகின்றன என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

கிழக்கில் கடந்த சில மாதங்களாகவே இந்த இருண்ட யுத்தம் தொடர்ந்தது புலி உறுப்பினர்கள், பத்திரிகையாளர், அரசபுலனாய்வாளர்கள் என்று 10 பேருக்கும் மேற்பட்டோரை அது பலியெடுத்தது.

கிழக்கில் இருந்து கருணா வெளியேற்றப்பட்டதன் பின் புலிகளின் உறுப்பினர்கள் மீது கை வைக்கப்பட்டதன் பின்னணியில் யார் இருந்தார்கள் எவர் இதனைச் செய்தார்கள் என்ற பக்கச்சார்பற்ற தகவல்கள் எவையும் இல்லை. இயல்பாக கருணா தரப்பு மீது சந்தேகம் விழுந்தது. இந்தச் சந்தேகத்தைப் பயன்படுத்தியே வேறு யாரும் தாக்குதல்களை நடத்தும் சாத்தியமும் இருந்தது. இந்த சம்பவங்கள் குறித்து விசாரித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்னும் விசாரித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதையெல்லாம் யார் செய்தார்கள் என்று பாவம் அவர்களுக் குப் புரியவில்லை; புரிந்தாலும் சொல்வதற்கு ஆதாரமில்லை.

ஆனால், இதன் பின்னணியில் யார் இருந்திருப்பார்கள்; இத்தகைய செயல்களால் யாருக்கு நன்மை என்று சாதாரணமாக மக்களுக்குப்புரிந்தது. முடிவு என்னவாகுமோ என்று அவர்கள் கிலிகொண்டார்கள்.

யார் செய்தார்கள் என்று கை சுட்டிக் காட்ட நேரடி ஆதாரம் இல்லை என்றாலும் புலிகளுக்கு எதிராகத்தான் இந்த நிழல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்குப் போதிய எல்லா ஆதாரங்களும் உண்டு.

கடந்த மாதம் மட்டக்களப்பு தன்னா முனையில் புலிகளின் இரு உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மோட்டார் சைக்கிளில் சென்ற அவர்கள் சூடுபட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த காட்சி தமிழ் மக்கள் மூச்சுக் காற்றில் சூடேற்றிற்று. அடுத்த சில நாள்களில் அரசபுலனாய்வாளர்கள் இருவர் கொல்லப்பட்டார்கள்.

அரசபுலனாய்வாளர் கொலைகளுக்கு யார் காரணமானவர்கள் என்பதற்கும் சாட்சிகள் இல்லை. கண்காணிப்புக்குழுவும் எவரையும் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் தாக்குதல் நடத்தப்பட்ட விதமும் பயன்படுத்தப்பட்ட ஆயுதமும் உயிரிழந்தவர்கள் அரசபடையினர் என்ற விடயமும் சந்தேகப் பார்வையைப் புலிகள் மீதே திருப்பின. பழிவாங்கும் தாக்குதலாக இருக்கும் என்று சாதாரண மக்கள் தங்களை நியாயப்படுத்திக் கொண்டனர்.



மட்டக்களப்பு, தன்னா முனையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்.

ஆனாலும், இன்றுவரை இந்தத் தாக்குதலுக்கும் யார் காரணகர்த்தாக்கள் என்று தெரியாது. ஆரம்பிக்கப்பட்ட நிழல் யுத்தத்துக்குப் பதிலடி என்பது மட்டும் நிச்சயம்.

எதிர்த்தரப்புக்களை திடீரென்று மறைந்து தாக்குவது என்ற ரீதியில் சென்ற இந்த நிழல் யுத்தம் அதற்கும் ஒரு படி மேலே போய் பத்திரிகையாளர் ஜீ.நடேசனின் உயிரையும் காவு கொண்டது. அத்துடன் நின்றுவிடாது மேலும் ஒரு புலி உறுப்பினர் உயிரையும் பறித்தது. இருவரை இரத்தம் சிந்த வைத்தது.

புலிகளுக்கு எதிராகக் கிழக்கில் தீவிரம் பெற்ற இந்த நிழல் யுத்தத்துக்கான பதிலடி போன்று தோன்றும் தாக்குதல் கடந்த வாரம் தலைநகர் கொழும்பை அதிர வைத்தது. பெண் தற்கொலைக் குண்டுதாரியே குண்டை வெடிக்க வைத்தார் என்று பொலிஸார் கூறினர். அவரின் இலக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதான் என்றார்கள்.

இலக்கு தான் தான் என்று அமைச்சரும் 'பெருமை'யுடன் மார் தட்டிக் கொண்டார். தற்கொலையாளியால் தன்னைக் கொல்ல முடியவில்லை என்று அப்படியொரு புளகாங்கிதம் அவருக்கு.

அமைச்சர் தான் இலக்கு என்று பொலிஸாரும் அரசும் சொன்னாலும், அதற்குக்காரணமானவர்கள் புலிகள்தான் என்று அரசு குற்றஞ்சாட்டவில்லை. தேர்தல் காலத்தில் போர் தொடங்கிவிடுமோ என்ற அச்சத்தை ஏன் மக்கள் மனங்களில் ஏற்படுத்த வேண்டும் என்று அரசு நினைத்திருக்கலாம். அத்தகைய நினைப்பு அரசுக்குப் பாதகமானதும் கூட.

நிழல் யுத்தத்தில் பிரதான பாத்திரம் ஏற்றிருக்கும் கருணாவுக்கும், அமைச்சர் டக்ளஸுக்கும் தொடர்பு இருக்கின்றன என்பதும் கவனத்துக்குரியது.

இலக்கு வென்றாலும் கிழக்கிலிருந்து நிழல் யுத்தம் தலைநகர் வரை விரிந்து விட்டது என்பது தெளிவு. சமாதான முயற்சிகளில் இப்போதைய போக்கு விடயங்களுக்கான எச்சரிக்கை மணியாக வேறு இது இருக்கலாம்.

இந்தத் தாக்குதல் சமாதானத்தை சீர்குலைக்கும் என்றோ, இது அரசுக்கு எதிராக நடத்தப்பட்டது என்றோ கருத்து ஏற்படாமலிருக்க அரசு பிரயத்தனப்படுகிறது. தன் மீது குறிவைத்தவர்கள் புலிகள் தான் என்று தனது அமைச்சர் ஒருவர் கூறிய போதும் அரசு புலிகளை நோக்கி இந்த விடயத்தில் சுண்டுவிரல் கூட நீட்டவில்லை.

தாக்கப்படுபவர்கள் யார் என்று மட்டுமே தெரிகின்றது. தாக்கியவர்கள் யார்? தெளிவாக எதுவும் தெரியாது. இந்த நிலைமை நீடித்தால் எங்கு போய் முடியும்?

இரண்டு தசாப்த காலமாகத் தொடர்ந்தது இந்த யுத்தம். இப்போதுதான் ஒரு நீண்ட இடைவெளி – அமைதி – ஏற்பட்டது. அப்பாடா என்று மக்கள் சற்று நிமிர்ந்து பெருமூச்சு விடுவதற்குள் இதோ மீண்டும் துப்பாக்கிச் சத்தங்களும் குண்டுச்சிதறல்களும்.

இரத்தமும் சதையுமாக சமாதானம் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறது.

நீண்ட யுத்தத்தால் தமிழ் மக்கள் வதங்கிப் போனார்கள். போரை அவர்கள் விரும்பவில்லை. சிங்கள மக்களும் கூட சமாதானத்துக்குத் தானே வாக்களித்தார்கள். அப்போ, யாருக்கு இங்கே போர் தேவை?

அரசியல் சுயநலம் போரால் கிடைத்த லாபம், பேரினவாதம் என்பனதான் இன்னும் இரத்தப் பசியெடுத்து அலைகின்றன.

சமாதானப் பேச்சுக்களில் அரசுக்கு அக்கறையைக் காணவில்லை. மறுபுறத்தில் நிழல் யுத்தம் விரிகிறது. முடிவு நான்காம் கட்ட ஈழப் போரின் ஆரம்பமா என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து சமாதானத்தை மீண்டும் அதன் தடத்துக்கு (Track) கொண்டு வரப்போபவர் யார்?

பேச்சை மீள ஆரம்பிப்பதற்கும் நிழல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அரசு என்ன செய்யப் போகிறது?

இவற்றுக்கான பதிலில் தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

- அன்பன்

# ஓயாத தலைவலியும் அதற்கான காரணிகளும்

*கேள்வி:- பெண். வயது 62. மல வாசலூடாகசளிபோன்றதிரவம்போகின்றது. அடிக்கடி மலம் போவது போல் உணர்வு. போனால் சளி தான் போகும். வயிற்றில் எதுவித நோவோ, குத்தோ இல்லை. எவ்வளவோ தடவை மருந்தெடுத்தும் பலனில்லை. பரிகாரம் கூறவும்.*

பதில்:– உங்கள் குணம் குறிகளை நோக்குமிடத்து உங்களுக்கு ஏற்பட்டுள்ளது சீழ் மூலம் ஆகும். மலக்குடலை அடுத்துள்ள திசுக்களின் உள்ளே ஒரு தொற்று ஏற்பட்டு அது சரியான சிகிச்சை இல்லாமல்நாட்பட்ட(CHRONIC) புண்ணாக மாறி இப்படி உள்ளது.

மேலும் அமீபா நுண்ணுயிர் தொற்றினால் மலக்குடலில் அமீபா புண்கள் உண்டாகியும்இவ்விதம் நேரலாம். புற்றுநோய்க்கட்டிகள் மலக்குடலிலோ அல்லது குதத்திலோ ஏற்பட்டு அவை கூட இவ்வாறு குணங்களைத் தரும்.

நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய காரியம். ஒரு சத்திரசிகிச்சை வைத்தியரை கட்டாயம் பார்க்க வேண்டும். அவர் உங்களுக்கு PROCTOS COPY, SIGMOIDOS COPY என்ற மலக்குடலில் குழாய்விட்டு நேரே நிதானிக்கும் முறைகளில் உங்கள் குடலில் ஏதாவது நோய் உள்ளதா என்பதை கண்டறிவார். அதன் பின்னர் நோய்க்கேற்ற வகையில் மருத்துவம் செய்யலாம்.

*கேள்வி:- பெண். வயது20. சிறு வயதிலிருந்தே தலைவலி உண்டு. இப்பொழுது வரவர அதிகமாகின்றது. சகல விதமான வைத்தியங்கள் செய்தும் பலனில்லை. பரிகாரம் கூறவும்.*

பதில்:– தலைவலிக்கு பல காரணங்கள் உண்டு. கண்களில் ஏற்படும் கோளாறுகள், பற்களில் ஏற்படும் கோளாறுகள், காதில் ஏற்படும் நோய்கள், SINUSITIES எனப்படும் பீனிச நோய்கள் இது தவிர தலைக்குள் ஏற்படும் கட்டிகள், MIGRAINE எனப்படும் ஒற்றைத்தலைவலி, கழுத்து எலும்புகளில் ஏற்படும் இறுக்கம்(CERVICAL SPONDYLOSIS) என்பன பெரும்பாலான காரணங்களாகும்.

நீங்கள் ஒரு நரம்பு விசேட வைத்தியரை(NEUROLOGIST) அணுகி ஆலோசனை பெற வேண்டும். நரம்பு மண்டல நோயில்லாவிடின் கண் வைத்திய நிபுணரிடம் கண்களைப்பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

சிறு வயதிலிருந்தே உங்களுக்குத் தலைவலி இருப்பதால் அநேகமாக இது ஒற்றைத் தலைவலியாக இருக்கலாம். இந்த MIGRAINE-ஒற்றைத் தலைவலியை நிரந்தரமாக தீர்க்க ஆங்கில வைத்தியத்தில் தீர்வு இல்லை. ஆயுள்வேத முறைகளில் எண்ணெய், பத்தியம், மாத்திரைகள் மூலம் ஒரு சிலர் முற்றாக குணமடைந்துள்ளனர்.

*கேள்வி:- ஆண். வயது 51. பதினாறு வருடம் கால், கை விறைப்பு இருந்தது. திடீரென்று மருத்துவ பரிசோதனையில் இரத்த அழுத்தம் என்று கண்டறிந்து மருந்து உபயோகித்து வரும் பொழுது பாரிச வாதம் போல் கால் ஒன்று வழங்காமல் போய்விட்டது. இரத்தத்தில் கொழுப்பு என்றும் கண்டறிந்தார்கள். இன்னும் முற்றாக சுகம் வரவில்லை. மூட்டுக்கள் எல்லாம் வலிக்கின்றன. கால்வீக்கம் உள்ளது. நடக்க முடியாமல் உள்ளது. பரிகாரம் கூறவும்.*



பதில்:– உங்களுக்கு இரத்த அழுத்தத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கால் தசைகள் வலு விழந்து இந்நிலைக்கு ஆளாகி விட்டீர்கள். போதாமைக்கு கொலஸ்ரோல் இரத்தத்தில் உள்ளது. வயதாகும்போது வலுவிழந்த தசைகள் மீண்டும் பழைய நிலைக்கு வருவது அரிது. என்றாலும் மனச்சோர்வடையாமல் எண்ணெய் மசாஜ் செய்து ஓரளவு பலன் பெறலாம்.

அத்துடன், நீங்கள் மூட்டுவாத நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள். இதுவும் வயோதிபத்தின் சிக்கல்களில் ஒன்று. இதற்கு சில CELECOXIB ரக மாத்திரைகள் பெரும் பலனைத் தரும். தகுந்த வைத்தியரிடம் ஆலோசனை பெற்று மருந்தை உபயோகிக்கவும்.

*கேள்வி:- வயது 25. ஆண். எனது ஒரு மார்பு பெண்களின் மார்பைப் போல் பெருத்து இருக்கிறது. தொட்டால் வலிக்கிறது. இதற்கு என்ன சிகிச்சை செய்யலாம்?*

ஆண்களும் பெண்களும் இயற்கையில் வித்தியாசமாக படைக்கப்பட்டிருந்தாலும், இருவரினதும் உடலில் ஆண், பெண் ஹார்மோன்கள் இரண்டும் உள்ளன. ஆண்களிடம் ஆண்களுக்குரிய ஹார்மோன்கள் ANDROGEN-அதிகமாகவும், பெண்களுக்குரிய ஹார்மோன்கள் OESTROGEN-குறைவாகவும் இருப்பதால் ஆண்மைக்குரிய பண்புகள் ஓங்கியிருக்கின்றன. பெண்களிடம் இந்நிலை மாறி இருக்கும். சில வேளைகளில் ஆண்களிடம்பெண்களுக்குரிய ஹோர்மோனின் அளவு கொஞ்சம் கூடியிருந்தால் ஆண்மைக்குரிய பண்புகளுடன் சில பெண்மைக்குரிய பண்புகளும்வெளிக்காட்டும்.

இதன் ஒரு வெளிக்காட்டுதலே ஆண்களில் சிலருக்கு மார்பகம் பெருத்துக் காணப்படுவது. இதனை GYNAE COMASTIA என்று கூறுவர். இது ஒரு நோயல்ல. இதனை சத்திர சிகிச்சை மூலம், மார்பில் உள்ள அதிகப்படியான கொழுப்புக் கலன்களை அகற்றி நோயைக் குணப்படுத்தலாம். இது தவிர ஈரல் நோயுள்ளவர்களுக்கும் சில வகையான ஹோர்மோன் குளிகைகளை நோய்களுக்காக உபயோகிப்பவர்களுக்கும் (உதாரணமாக புரெஸ்டேட் சுரப்பியின் புற்றுநோய்க்கு ஈஸ்ரொஜின் குளிகைகள் உபயோகிப்பவர்களை கூறலாம்.) மார்பு பெருக்கம் ஏற்பட சந்தர்ப்பம் உண்டு.

எமது பாட்டிமார் அந்தக்காலத்தில் ஆண் குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் மார்பைக் கசக்கி WITCH MILK என்று ஒரு வகைத்திரவத்தை வெளியேற்றுவார்கள்.

இவர்கள் இப்படிச் செய்வது பின்னர் ஆண்களின் மார்பு பெண்களின் மார்பகம் போல் பெருத்துப்போகாமல் இருக்கவே என்று ஒரு நம்பிக்கை இருந்தது. இப்பொழுது இப்படி நடப்பதில்லை. காரணம் குழந்தையின் மார்பைக்கசக்கும் போது அதில் தாக்கம் ஏற்பட்டு சீழ்க்கட்டுக்கள் உருவாகி அறுவைச்சிகிச்சை வரை போயிருந்த சந்தர்ப்பங்கள் அதிகமானவை.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

மேலும் மக்கள் இப்படிச் செய்வது ஒரு குருட்டு நம்பிக்கையின் அடிப்படையில் தான் என்ற எண்ணம் பரவியதும் ஒரு காரணமாகும்.

*கேள்வி:- வயது 18. ஆண். மாணவன். எனது முகத்தில் சிறிய சிறிய வளர்ச்சிகள் வந்துள்ளன. சவரம் செய்யும்போது அவை தாக்கப்பட்டு சில வேளைகளில் இரத்தம் வருகின்றது. பாலுண்ணி என்று எனது நண்பர்கள் சொல்கிறார்கள். இவற்றை எப்படி சுகமாக்குவது?*

பதில்:–இதனை VERUCCA VULGARIS என்று அழைப்பார்கள். இது ஒரு வைரஸ் தொற்றுண்ணி.பெரிய தீங்கு எதுவும் தராது. இதனை மின்சார சுட்டெரித்தல் (ELECTRIC CANTERISATION)அல்லது இரசாயன மருந்துகள் மூலமாக சுட்டெரித்தல்(CHEMICAL CANTERISATION) மூலம் அகற்றலாம். சரும நோய் வைத்தியர் வெளிநோயாளர் பிரிவிலேயே இதனைச் செய்து முடிப்பார். சுட்டெரித்தலுக்குப் பின்னர் ஒரு சில காலத்துக்கு அந்த இடத்தில் வடுக்கள் இருக்கலாம். காலகெதியில் அவை மறைந்துவிடும்.

****

# கை கொடுத்த தெய்வம்


பிரசாத் தன் பெற்றோருடன் அமர்ந்திருந்தான். தேநீர் உபசரிப்புகளுக்குப் பின் பெண் அழைத்து வரப்பட்டாள். தன் தாயின் உதவியுடன் விந்தி விந்தி நடந்து வந்தவளை பிரசாத் கருணையுடன் பார்த்தான். அவள் அனைவருக்கும் வணக்கம் கூறினாள். பார்ப்பதற்கு அழகான தோற்றத்தினைக் கொண்டிருந்த அவளின் ஒரே குறை ஊனம். சிறுவயதில் ஏற்பட்ட சிறுபிள்ளை வாதம் அவளின் ஒரு காலை பதம் பார்த்துவிட்டது. மற்றும்படி நன்றாகப் படித்தாள். சங்கீதம் பயின்றாள். சமைக்கக் கற்றுக்கொண்டாள். ஆனால் இதெல்லாம் ஒரு பெண்ணுக்கு திருமணத் தகுதியாக அமையுமா? அவளின் ஊனம் அவளின் திருமணத்துக்கு மிகப்பெரும் தடையாக இருந்தது.

பிரசாத் பெண்ணின் பெற்றோரைப் பார்த்தான். "எனக்கு உங்கள் மகளை மணக்கப் பூரண சம்மதம். சீதனம்,நகை,நட்டு என்று எதுவும் தேவையில்லை. நான் கைநிறையச் சம்பாதிக்கிறேன். என்னால் என்னை நம்பி வருபவளை கடைசிவரை கண் கலங்காமல் காப்பாற்ற முடியும். திருமணத் தேதியை நிறைவு செய்ய வேண்டியது மட்டும் தான் இனி உங்கள் வேலை."

பிரமிளா பிரமிப்புடன் அவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள். இதுவரை பத்துக்கு மேற்பட்டவர்கள் அவளைப் பெண் பார்த்துவிட்டு சென்றிருக்கிறார்கள். ஆனால் வந்தவர்களில் அநேகமானோர் அவளின் ஊனத்துக்கு விலை பேசினார்களேயன்றி அவளின் நிலை பற்றி கவலை கொள்ளவில்லை.

பிரசாத் பெற்றோர்களுடன் புறப்படத் தயாரானான். பிரமிளாவின் பெற்றோர் அவனை கையெடுத்துக் கும்பிட்டார்கள். இரண்டு நாட்கள் ஓடின. பிரசாத் அன்று வேலை முடிந்து அலுவலகத்திலிருந்து வெளியே வந்தான். அப்போது அவனின் நெருங்கிய நண்பர்களிலொருவனான பாலன் அவனை நெருங்கி வந்தான். "பிரசாத் நான் ஒரு வாரமா ஊரில இல்லை. நேற்றுத் தான் வந்தேன். என்ன? உனக்கு திருமணம் நிச்சயமாயிடுச்சுப்போல. பிரமளா எனக்குத் தூரத்துச் சொந்தம் தான். என்ன இந்தத் திடீர் முடிவு?"

பிரசாத் அவனை அழைத்துக்கொண்டு அந்த ஹோட்டலுக்குப் போனான்.




"என்னப்பா நான் பேசிக்கிட்டிருக்கேன். நீ ஒண்ணுமே சொல்லாம என்னவெல்லாமோ ஓடர் செய்யிறே? அவ்வளவு சந்தோஷமா உனக்கு? பிரமிளா என்ன தான் சொக்குப் பொடி போட்டா"?

பிரசாத் புன்னகையுடன் அவனைப் பார்த்தான்.

"இந்தத் திருமணம் எனக்கு மனமகிழ்ச்சியையும் ஆத்ம திருப்தியையும் கொடுத்திருக்குது... அதனால தான் ஒத்துக்கிட்டேன்..."

"நீ ஒரு தியாகியடா... உனக்கு மாலையிட பலபேர் நான் நீன்னு போட்டியிட நீயோ ஒரு அடலைக்கு, ஊனமுள்ள பெண்ணுக்கு வாழ்வு கொடுக்க முடிவு செஞ்சிருக்கே. இதுக்காக உன்னை தீவிரமா காதலிச்சு வந்த உன் அலுவலகத்தில வேலை செய்யுற கவிதா வையே கைவிட்டிட்டியேடா..."

"பாலா... நீ நினைக்கிற மாதிரி நான் செஞ்சது தியாகம் இல்லை. பிராயச்சித்தம்..."

"என்னது பிராயச்சித்தமா... என்னடா உளர்றே...?

"நான் உளறலை. உண்மையைத் தான் சொல்லுகிறேன். தயவுசெய்து இதை யார்கிட்டேயும் சொல்லிடாதே. உனக்கு என் தம்பி மணாளனைப்பத்தித் தெரியும் தானே? பத்து மாதத்துக்கு முன்னால கார் விபத்தொன்னுல காலமான அவனுடைய டைரியொன்றை போன மாதம் வாசிச்சேன். பேராதெனிய பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனான அவன், முதலாண்டு மாணவனா புதுசா வந்த விக்னேஷ் என்பவனை அளவுக்கதிகமாப் பகிடிவதை செஞ்சதால அவனோட உடல் நிலை பாதிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு போயிருக்காங்க. அங்கே விக்னேஷ் இறந்துட்டான். அப்புறம் பொலிஸ் விசாரணை அது இது என்று வந்தப்ப என் தம்பி ரொம்ப ஈஸியா தப்பிச்சிட்டானாம். ஆனா விக்னேசோட இறுதி ஊர்வலத்துல கலந்து கொள்ள அவனோட வீட்டுக்குப் போன போது தான் அந்தக் குடும்பத்தின் பரிதாப நிலையைப் பார்த்திருக்கான். விக்னேஷ் அவங்களுக்கு ஒரே மகன். ஏழ்மை நிலையில இருக்கிற அவங்களுக்கு எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமா இருந்தவன் தான் விக்னேஷ். அது மட்டுமல்ல அவனின் அக்கா பிரமிளா பிறவி ஊனமுற்றவள். அவள் எதிர்காலமும் விக்னேஷின் மரணத்தால் கேள்விக்குறியாயிடுச்சு. என் தம்பி தான் செய்த தவறுக்காக மிகவும் வேதனைப்பட்டிருக்கிறான். ஒழுங்கான சாப்பாடு, தூக்கமில்லாமல் நடைப்பிணமாய், பித்துப்பிடிச்சவன் மாதிரி இருந்தப்போ நாங்கள் எவ்வளவோ கேட்டுப்பார்த்தோம். அவன் எதுவும் சொல்லேல்லை. கடைசியில கார் விபத்துல உயிரை விட்டுட்டான். என் தம்பி செய்த தப்புக்கு பிராயச்சித்தமா நானே பிரமிளாவுக்கு வாழ்வு குடுக்க முடிவு செய்தேன். என்னோட அப்பா, அம்மா எனக்கு பூரண ஆதரவு கொடுத்தாங்க. ஏதோ அதுக்கெனா பிறந்த என்னால செய்யக்கூடிய ஒரு சின்ன உதவி..." பிரசாத் சொல்லிக் கொண்டே போக பாலன் கண்களில் வடியும் கண்ணீருடன் பிரமிப்போடு அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

# வத்தகப்பழம் என்றால் கோடையில் குதூகலம்




கோடை காலம் வந்துவிட்டால் நாவறண்டு போகாமல் இருக்க நீர்ச்சத்துள்ள பழவகைகளை உண்பது மனிதர்களின் வழக்கம். அதிலும் வத்தகப்பழம் என்றால் கோடையில் அனைவருக்கும் குதூகலம் தான். சீனர்களுக்கும் கோடைக்காலம் என்றால் வத்தகப்பழம் மீது ஆசை பிறந்துவிடும். சாங்காய் நகர சந்தையில் வத்தகப்பழம் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டிருக்கும் காட்சி.

# வீனஸ் சிலை அழகை தடவிப்பார்க்க ஆசை



வீனஸ் சிலையைப் பண்டைய சிற்பிகள் நிர்வாண கோலத்தில் செதுக்கினார்கள். கலையழகு மிக்க வீனஸ் சிலைக்கு என்றுமே மதிப்பு அதிகம். ஏதென்ஸ் நகரத்தில் கண்பார்வையற்றவர்களுக்காகவே ஒரு நூதன சாலையை நடத்துகிறார்கள். கண்ணால் பார்க்க முடியாதவர்கள் இந்த நூதன சாலைக்கு வந்தால் அங்குள்ள காட்சிப் பொருட்களைத் தடவிப்பார்த்தே ரசிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த நூதனசாலைக்கு வந்த பார்வையற்ற ஒரு பெண் வீனஸ் சிலையை ஆசையுடன் தடவிப் பார்க்கும் காட்சி இது.

# குஞ்சுப் பறவையின் பசி தீர்க்கும் அம்மா



பினமிஸ்போ எனப்படும் நாரை இனப்பறவைகள் நீர்நிலைகளிலேயே தங்கள் முழுநேரத்தையும் செலவிடுகின்றன. சன்டியாகோ மிருகக் காட்சிச் சாலையிலுள்ள வாவி அண்மையில் முற்று முழுவதாகவே புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. நீர் முற்றாக மாற்றப்பட்டது. மீனினங்களும் பெருமளவில் விட்டு வளர்க்கப்படுகின்றன. அந்த வாவியில் வாழும் ஒரு நாரை தனது குஞ்சுக்கு உணவூட்டும் காட்சி இது.

மசாலா மிக்ஸ்

# நீலவர்ண ரோஜாப்பூ ஏற்படுத்தும் பரபரப்பு



வாசனை மிக்க ரோஜாப்பூ பலவேறு நிறங்களில் [illegible] மனதைக் கொள்ளை கொள்கிறது. ஆனால் நீலவர்ணத்தில் மாத்திரம் ரோஜாப்பூப்பதில்லை. அந்த நீண்ட காலக்குறை தற்போது தீர்ந்திருக்கிறது. ஜப்பானிய நிபுணர்கள் நீண்ட பரிசோதனைகளை நடத்தி உலகில் முதலாவது நீலவர்ண ரோஜாக்களை வளர்த்தெடுத்திருக்கின்றனர். நீலநிறத்தில் பூக்கும் சாதாரண மலர்களிலிருந்து நீலவர்ணத்தைப் பிரித்தெடுத்து ரோஜாச்செடிக்கு செலுத்தி இந்த நீலவர்ண ரோஜாக்களை உருவாக்கியிருக்கின்றார்கள் நிபுணர்கள்.

# 4 பேர் குடியிருக்க கார் வடிவில் வீடு!



விதம் விதமாக வீடுகளைக்கட்டி வாழ்வதில் அக்கறை கொண்டவர்கள் உலகில் இன்று வாழ்கிறார்கள். சல்ஸ்பெர்த் நகரில் வாழும் மன்பிரட் வொத்வரிட் என்னும் கட்டட நிபுணர் கார்வடிவில் ஒரு வீட்டை நிர்மாணித்திருக்கிறார். வீதியோரமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்தக் கார் வடிவிலான வீட்டைக் காண்பவர்கள் வாகனங்களை நிறுத்தி வீட்டை ஆராய்ந்து பார்த்து படம் பிடித்துவிட்டுச் செல்கிறார்கள்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜூலை 5, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் விஜயகாந்த். சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. நீ.சுரேஸ், மட்டக்குளி, கொழும்பு 15. 2. சி.தேவி, பிரதான வீதி, கண்டி. 3. கே.சிவபாலன், கண்டி வீதி, நாவற்குழி. 4. இ.துரைராஜ், யாழ்ப்பாணம். 5. அ.ஸ்ரீதேவி, வாழைச்சேனை.

சரியான விடையைக் கண்டுபிடித்து, எழுதி அனுப்பியவாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

சின்னத்திரை நாடகத்தொடர் ஒன்றின் மூலம் மிகவும் பிரபல்யமானவரும், திரையடங்களில் நடித்துள்ளவருமான அண்மையில் திருமணமானஇந்த நடிகை யார்?

இந்த முகத்திற்குரிய நடிகையை கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் எங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# அன்றும் இன்றும் என்றும் எல்லையற்ற இன்பத்திற்கு...




# பிளேக் லேபல்

## எல்லையற்ற இன்பத்திற்கு

நாடெங்கும் அனைவரின் மனதையும் கவரும்... பிளேக் லேபல்.
வீட்டுக்கு வீடு எல்லையற்ற இன்பத்தைப் பகிர்ந்தளித்து
என்றும் முன்னணியில் திகழ்கின்றது.

இன்டர்நஷனல் டிஸ்டிலர்ஸ் லங்கா லிமிட்டட்

# கலைந்து போன கனவுகள்

– எஸ்.என்.முகுந்தன் –



காலைக் கதிரவன் தன் செவ்விதழ்க ளால் பூமியை முத்தமிடும் ஆவலுடன் கிழக்கு வானில் விரைந்து வந்து கொண்டி ருந்தான். புல்வெளிகளிலே தற்காலிக மாகத் தங்கி முகாமிட்டிருந்த பனித்துளி கள் பகலவன் வரவினைக் கண்டு பயந்து உருகிக்கொண்டிருந்தன.

தனக்கு அருகில் வைக்கப்பட்டு இருந்த மேசைக் கடிகாரத்தின் அலறலைக் கேட்டு திடுக்கிட்டு கண் விழித்தாள் காருண்யா. கண்களைக் கசக்கியபடி கடிகாரத்தை பார்த்தவளின் நெற்றியில் தற்காலிக ஒரு வியப்பு ரேகை படர்ந்து மறைந்தது.

ஏனெனில் கடிகார முட்கள் 6.30 ஐக் காட்டிக் கொண்டிருந்தன. அம்மாடியோவ் இன்று இவ்வளவு நேரம் தூங்கிவிட் டோமே என்று எண்ணியபடி அவ சரமாக எழுந்தவளின் வயது 20 என்பதனை அவளின் அழகிய வதனம் எடுத்துக் காட்டியது.

பல் துலக்கியபடி பாத்ரூமை நெருங் கியவளை ''ஏம்மா காருண்'' என்ற தாய் மீனாட்சியின் குரல் தடுத்து நிறுத்தியது. என்னம்மா? என்றாள் மெதுவாக. ரீ ஆறி விடப் போகின்றது சீக்கிரமாக வா என் றாள் மீனாட்சி. இதோ வருகிறேன் என்ற வள் அவசரமாக குளித்து விட்டு வெளியே வந்தாள்.

ரேபிள் மீதிருந்த ''ரீ''யினை குடித்துக் கொண்டிருந்தவள், வெளியே ஹோலில் அன்றைய தினசரி பத்திரிகையைப் படித் துக் கொண்டிருந்த தந்தை சிதம்பரத்தின் இருமல் சத்தத்தைக் கேட்டு என்னப்பா இன்றைக்காவது ஹொஸ்பிட்டல் போய் மருந்தெடுக்கலாமில்லையா? என்று கேட்ட படி அவரிடம் சென்றாள்.

ஆமம்மா என்றவர். ''காருண்'' வாச லிலே என்ன சைக்கிள் சத்தம் என்று கேட் டார். வெளியே வந்தவள் வாசலில் தபால் காரன் நிற்பதைப் பார்த்ததும் என்ன கண் ணன் அண்ணே உள்ளூரா ? வெளியூரா ? என்று கேட்டபடி அவரை அணுகினாள்.

வெளியூர்க் கடிதமம்மா என்றபடி அவர் கொடுத்த கடிதத்தின் முகவரியில் இருந்து அது லண்டனில் இருக்கும் தனது தமையன் ஸ்ரீகாந்தின் கடிதம் என்று அறிந்ததும் அவ சரமாக அதனைப் பிரித்தாள்.

அதனைப் படித்தவளின் முகத்தில் மகிழ்ச்சி மலர்கள் மலர்ந்தன. யாருடய கடிதமம்மா ? என்றபடி வந்த தந்தையிடம் அண்ணா தானப்பா என்று பூரிப்புடன் கூறியபடி சமையலறையில் நின்ற மீனாட் சியை நோக்கி அம்மா... அம்மா... என் றழைத்தபடி காலில் தடுக்கிய பொருட் களையும் பொருட்படுத்தாது ஓடினாள்.

''என்னடி குழந்தை மாதிரி கத்து கிறாய்?''

அம்மா இன்று எத்தனையாம் 'திகதி? என்று கேட்டால் காருண்யா சரியாக தெரிய வில்லை. அது சரி என்ன விடயமென்று சொல் என்றாள் மீனாட்சி. அண்ணா இங்கு வருகின்றானாம் என்றாள் அவள்.

மகன் வருகின்றானாம் என்பதை கேட்ட மீனாட்சி மனதில் அலைகள் தடம்புரண்டு பாய்ந்தன. மகிழ்ச்சியில் அவளுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

அன்றைய திகதியை அறிய வரவேற் பறைக்குள் சென்றாள் காருண்யா. மேலே மாட்டியிருந்த கலண்டரில் ''சாமி'' திரைப் படத்திற்காக விக்ரமிடமிருந்து தற்காலிக மாக வாங்கிய தாலியுடன் சிரித்தாள் த்ரிஷா.

ரீப்போ மீது ஏறி அதனைக் கழற்றி அன்றைய திகதியை அறிந்தவள் மீண்டும் கையில் இருந்த கடிதத்தைப் புரட்டினாள். அதில் 5 ஆம் திகதி இரவு 10.30 விமானத் தில் வருவதாக அவன் எழுதியிருந்தான். இன்னும் மூன்று நாட்களே இருக்கின்ற தப்பா என்றாள் தந்தையை நோக்கி.

அவன் எப்போதும் ஒரு முடிவு எடுத் தால் உடன் செய்யாமல் இருக்க மாட்டான் என்றார் அவர். மகன் ஸ்ரீகாந்தை எட்டு வரு டங்களின் பின்பு காண்பதில் அவருக்கென்ன ஆவல் இல்லையா ? ஆனால் அதனை வார்த்தையில்வெளிக்காடடவில்லை.

அவரது நினைவுகள் சில வருடங்கள் முன்னே சென்றன. அப்போது ஸ்ரீகாந் திற்கு வயது பதினாறுஇருக்கும். காருண்யா அவனுக்கு நான்கு வயது குறைந்தவள். சிதம்பரம் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தார்.

ஈழத்து இந்துக்களின் தனிச்சிறப் புடைய யாழ்நகரில் சிதம்பரத்துக்கு சொந்த மாக வீடு இருந்த தாலும் செலவுக்கு மேலதிகமாக சம்பளமும் கிடைத்ததாலும் சிறப்புடன் வாழ்ந்து வந்தது நால்வரைக் கொண்ட அக் குடும்பம்.

அக்காலப் பகுதியில் தான் இனப்பிரச் சினையின் இன்னல்களால் தன்மானத் தமிழனின் பாரம் பரிய யாழ் மண் பேரின வாதிகள் வசமாகியது. இடம்பெயர்ந்த மக்களுடன் இணைந்து இலங்கைத் தலை நகர் கொழும்பை வந்தடைந்தவர்கள் ஆரம்பத்தில் பட்ட துன்பங்கள் சொல்லி யடங்காது.

சிதம்பரத்தின் கையில் இருந்த பணம் கற்பூரமாய் கரைந்தது. இந்நிலையில் நண்பன் ஒருவரின் உதவியுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவன மொன்றில் சிதம்பரத்திற்கு வேலை கிடைத்தது.

இந்நிலையில் தான் ஸ்ரீகாந்தினை எப்படியா வது வெளிநாட்டிற்கு அனுப்பி விட முடிவு செய் தவர், சிறிது சிறிதாக சேமித்து வைத்த பணத்தை வங்கியிலிருந்து எடுத்து நண்பனின் உதவியு டன் ஸ்ரீகாந்தை வழியனுப்பினர்.

மகனை பிரியும் போது மீனாட்சியினதும், காருண்யாவினதும் கண்களில் இருந்த சோகத்தை அவரால் இன்னும் மறக்க முடியாது. உலகிலே கொடியது இதுவல்லவா?

அன்றும் வழமை போல் விடிந்தது. நாட்காட்டி ஐந்தாம் திகதி வெள்ளிக்கிழமை என காட்டி யது. அயர்ந்து தூங்கிய காருண்யா அதிகாலை யிலேயே எழுந்து விட்டாள். மகிழ்ச்சி ஆரவார மாக காணப்பட்டது அந்தவீடு.

ஆனால் இந்த மகிழ்ச்சிக்கு ஆயுள் சில மணித்தியாலங்கள் தான் என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. சூரியன் மறைந்து நேரம் இரவு ஒன்பது மணி ஆகியதும் மூவரும் விமானநிலையம் செல்ல ஆயத்தமாகினர். காருண்யா ஓர் அழகிய வயலட் கலர் சல்வாருக் குள் தன்னை நுழைத்துக் கொள்ள மீனாட்சி காஞ்சிபுர புடைவைக்கு மாறினாள்.

ஏற்கனவே தயாராகிவிட்ட சிதம்பரம் காரை நோக்கிச் சென்றார். முன்னே சென்ற மீனாட்சி காருண்யாவை நோக்கி ஏய் 'காருண்' நாங்கள் திரும்பி வர இரண்டு மணித்தியாலமாவது ஆகும் அதனால் 'டைகரை' திறந்து விடு என்று கூறி னார்.

சரி என்றபடி நாயின் கூண்டினை நோக்கிச் சென்றாள் காருண்யா. அவளைக் கண்டதும் அடைக்கப்பட்டு நின்ற பெரிய கரு நிறமுள்ள அல்சேஷன் வகையைச்சேர்ந்த நாய் வாலை ஆட்டியபடி விசுவாசமாய் கத்தியது.

ஆமாம் அந்த நாய் அந்த வீட்டிற்கு இரண்டு வருடங்கள் என்றாலும் வயதுக்கு மீறிய வளர்ச்சியும் விசுவாசமும் கொண்ட. அதன் கூறிய பற்கள் பார்ப்போரை பயம் கொள்ள வைக்கும்.

தனக்கு தற்காலிகமாக விடுதலையளித்த அவள் மீது பாய்ந்து அன்பினை வெளிப்படுத் தியது அந்த ஐந்தறிவு ஜீவன்.

அவசரமாக வெளிக்கதவை பூட்டிவிட்டு காரிற்குள் புகுந்து கதவை மூடினாள் காருண்யா. புதுத் துள்ளலுடன் புறப்பட்டது அந்த புதிய மாருதிக் கார்.

அன்று இரவு 10.30க்கு வரவேண்டிய பிளைட் அதற்கு முன்னதாகவே கட்டுநாயக்கா விமான நிலைய ஓடுபாதையைத் தொட்டது. தாய் மண் மீது தடம் பதித்த ஸ்ரீகாந்தின் உட லில் அவனை அறியாமலே உற்சாகம் பாய்ந்தது.

சிறிது நேரம் அங்கு நின்ற வனின் கைக்கடிகாரம் 9.10 இனைக் காட்டியது. அவன் மனதில் திடீரென அந்த யோசனை தோன்றியது. தன்னைத்தேடி வீட்டுக்காரர் கள் இங்கு வருவதற்கு முன்பே வீடு சென்று அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி தர வேண் டும் என எண்ணியவன் ஆட் டோவை பிடித்து வீடு நோக்கி பயணித்தான்.

வீட்டின் கதவைப் பார்த்த தும் அது பூட்டியுள்ளது என் பதை அறிந்த ஸ்ரீகாந்த் உள்ளே சென்று இருப்போம் என்றுஎண்ணிதான்கொண்டு வந்த பயணப்பெட்டிகளை கதவின் மேலாக உள்ளே போட்டு விட்டு மதில் மீது ஏறி 'தொம்' எனக் குதித்தான்.

அந்த சத்தத்தால் தாவி எழுந்த டைகர் குரைத்தபடி அவனை நோக்கிப் பாய்ந் தது. எப்படி தப்பலாம் என்று அவன் யோசிப்பதற்கு முன்ன தாக அவன் மீது பாய்ந்து அவன் கழுத்துப் பகுதியில் தன் கூறிய பற்க ளைப் பதித்தது டைகர்.

கீழே விழுந்த ஸ்ரீகாந் திமிறிக் கொண்டு எழுந்திருப்பதற்குள் மீண்டும் அவன் முகத் தில் தன் குரூரமான நகங்களால் கிழித்தது அது.

உடலில் இருந்த இரத்தம் வேகமாக வெளி யேற கொஞ்சம் கொஞ்சமாக இவ்வுலகில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்தது அந்த இளம் மொட்டு. இந்த வீட்டின் அங்கத்தவன் என்பதை அருகே நின்ற நாயும் அறியவில்லை.

ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் தாம் தேடிச் சென்ற விமானம் ஏற்கனவே வந்து விட்டதால் ஸ்ரீகாந் வரவில்லையே என்ற கவலையுடனும், ஏமாற்றத்துடனும் வீட்டிற்கு திரும்பிய மூவரையும் வரவேற்பதற்காக ஆசையுடன் தான் வாங்கி வந்த பொருட்க ளின் நடுவே அசைவற்றுக் கிடந்தது ஸ்ரீகாந் தின் உயிரற்ற உடல்.

# பறந்து மறையும் பட்சிகள்

இறைவன் சிருஷ்டியில் பல அற்புதங் களை எம்மால் காணக்கூடியதாக இருக்கி றது. மனிதனைப் படைத்த இறைவன் அவன் ஆளுமைக்கு உட்பட்டதாக பல உயி ரினங்களைப் படைத்து உலாவ விட்டி ருக்கின்றான். நீர்ப்பரப்பை நிறைக்கும் மீன்கள் போன்ற உயிரினங்கள் தொடக்கம், தரைப்பரப்பை நிறைக்கும் விலங்கினங் கள் வரை, ஆயிரமாயிரம் உயிரினங்கள் மனிதனது உணவு என்ற வடிவத்தில் மாமிசமாகி தினம் தினம் கொல்லப்பட்டு வருகின்றன. பல மனிதர்களது பேராசை, இறைச்சி என்பதை விட ஒரு படி மேலே செல்லத் தொடங்கி விட்டதால் இன்று பல உயிரினங்கள் அழிவது என்பது அன்றாட நிகழ்வுகளாகிவிட்டது.

இங்கே பறவைகளை எடுத்துக்கொண் டால், அவை காலத்துக்குக் காலம் அடியோடு அழிந்து கொண்டு போவதை அறியக்கூடி யதாக இருக்கிறது. ஒரு புள்ளிவிபரத் தின்படி 1600ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையிலான கால கட்டத்தில் 100க்கு மேற்பட்ட பறவை இனங்கள் அடி யோடு அழிந்துவிட்டன.

இந்த அழிவு என்பது நின்றுவிட வில்லை. இன்றும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றது. பசிபிக் பிராந்தியத் தீவுகளான ஹவாய், குவாம் போன்றவை பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஹவாயில் முன்பிருந்த பறவைகளில் 70 சதவீதமானவை அழிந்துவிட்டன. அடுத்து மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கும் குவாம் தீவு, தனது 60 வீதமான பறவை இனங்களைஇழந்து நிற்கின்றது.



புள்ளிவிபரங்கள் எம்மைப்பயமுறுத்து கின்றன என்பதில் சந்தேகமே இல்லை. புள்ளிவிபரங்கள் புள்ளினங்களின் நிலையை நன்றாகவே படம்பிடித்துக் காட்டுகின்றன. உலகில் மொத்தமாக உள்ள 10 000 பறவை இனங்களில், 1211 இனங்கள் இன்று அழியும் நிலைக்கு வந்துள்ளன என்று எச்சரிக்கின்றார்கள். இதில் 11 இனங்களைத் தவிர, மற்றைய எல்லா இனங்களுமே அழிந்துபோக மனிதன் தான் காரணமாக இருந்து வரு கின்றான் என்பது வேதனைக்குரிய விடயம் தான்.

உலகெங்கும் பறவைகளைப் பாதுகாக்க வென்று பல அமைப்புகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இப்படியான ஒரு உலக அமைப்பு தன் அறிக்கையில், 400 பறவை இனங்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டியது மிக அவசியமாகிறது என்று சுட்டிக்காட்டி இருக் கிறது.

நேரத்தோடு உதவி கிடைத்தால், அடியோடு அழிந்துபோய்விடுவதில் இருந்து இவற்றை காப்பாற்றி விடலாம் என்று இந்த அமைப்பு கூறுகிறது. தென் ஆபிரிக்க துறைமுக நகரமான நுரசடியாவில் உலகெங்கும் உள்ள பறவை இனங்களில், எட்டிலொரு வீதமான பறவைகள் முற்றாக அழிந்துபோய்விடும் நிலைக்கு வந்துவிட்டதை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஜனப் பெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க, மனிதனது தேவைகளும் அதிகரித்தபடி தான் இருக்கின்றன. இதன் காரணமாக பறவைக ளின் இருப்பிடங்கள் அழிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்படுவதால், அகதிகளாகி விடு கின்றன இந்தப் பறவைகள். ஆபிரிக்காவில் பாதிக்கு மேற்பட்ட பிராந்தியம் இப்படியான தொரு நிலமைகளினால் தன்னிடமுள்ள பறவைகளில் பாதிக்கு மேற்பட்ட தொகையை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கி வருகின் றது. அதேபோல் ஐரோப்பாவிலும் விவசாயத்தை பெருமளவில் மனிதர்கள் மேற்கொள்ள ஆரம்பித்து இருப்பதால், கடந்த 40 வருடங்க ளில், முன்பிருந்த தொகையில் மூன்றி லொரு பகுதிப் பறவைகளை இந்தக்கண்டம் இழந்து நிற்கின்றது.

இன்னொரு பசிபிக் தீவான வானுவாது வில் சிறிய கோழியை ஒத்த மேகாபோட் என்ற பறவை இனம் இருக்கிறது. இது உலகில் எந் தப்பகுதியிலுமே காணப்படாத ஒரு பறவை இனம் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இதன் முட்டைகளை அளவுக்கு அதிகமாக மக்கள் எடுத்துவிடுவதால், இந்த இனம் அழிந்துவிடும் அபாயம் வந்திருக்கி



றது. எனவே முட்டைகளைச் சேகரித்து இவை அழிந்துவிடாமலிருக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்


அழிவு என்பதை நிறுத்தவே முடியாதா? ஆசைகளே இந்த அழிவுகளுக்குக் காரணி கள் என்பதில் சந்தேகமே இல்லை.

# மத்திய அரசை நெருக்கும் முயற்சியில் பி.ஜே.பி

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பதவியேற்ற பின்பு நடக்கும்லோக்சபாவின் முதல் பட்ஜெட் கூட்டத்தொடர் அமளி துமளிகளுக்கிடையில் நடைபெற்று வருகிறது.

கூட்டரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிக்கும் சிலர் கிரிமினல் வழக்குகளில் குற்றச் சாட்டப்பட்டவர்கள். இவர்களை அமைச்சர்களாக தொடர விட முடியாது என்பதே பி.ஜே.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் வாதம்.

லோக் சபா தேர்தல்களில் எதிர்பாராத விதமாக மண் கவ்விய பின்னர் பி.ஜே.பி கட்சிக்குள்ளேயே பூசல்கள் வெடித்துள்ள நிலையில் உற்சாகமிழந்த கட்சித் தொண்



அத்வானி

டர்களை ஊக்கப்படுத்த ஏதோ ஒரு விடயம் பி.ஜே.பி க்கு தேவைப்படுகிறது. சோனியா காந்தி பிரதமராக பதவிஏற்றால் அவர் இத்தாலியர் எனச்சொல்லி போராட்டங்களில் ஈடுபட பி.ஜே.பி திட்டமிட்டிருந்தது. அதன் மூலம் தொண்டர்களை உற்சாகமூட்டி மீள ஒன்று திரட்டலாம் என கட்சி நம்பியது. ஆனால் சோனியா பிரதமர் பதவியை உதறி எறிந்ததால் அந்த உத்தி சரிவரவில்லை. இப்போது ஊழல் மற்றும் கிரிமினல் பேர்வழிகளை அமைச்சர்களாக்கியதாக அரசை நெருக்குகிறது பி.ஜே.பி.

## பிரச்சினைக்குரிய லல்லுவின் கட்சி

ஆளும் கூட்டணியில் முக்கிய பங்காளிக்கட்சியான லல்லு பிரசாத் யாதவின் கட்சியில் தான் பிரச்சினைக் குரியவர்கள் உள்ளனர். லல்லுவே கோடிக்கணக்கான ரூபாய் மாட்டுத்தீவன ஊழலில் குற்றஞ் சாட்டப்பட்டு அதன் காரணமாக பீகார் முதல்வர் பதவியை விட்டு விலகி தனது மனைவியை முதல்வராக்கி வேடிக்கை காட்டியவர். இவர் பி.ஜே.பி யின் பரமவைரி. அதைவிட பி.ஜே.பியின் பிரதான பங்காளியாக ஜோர்ஜ் பெர்னாண்டஸின் முதல் எதிரி. இதை விட இவரது கட்சியைச் சேர்ந்த கடத்தல், கற்பழிப்பு என குற்றங்கள் சாட்டப்பட்ட சிலருக்கு மத்திய இணை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. முஹமட் தஸ்லிமுதீன் என்ற இத்தகைய அமைச்சர் 1996இல் தேவகவுடா அரசில் கூட அமைச்சராக்கப்பட்டு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர்.

இந்தப்பின்னணி உடைய ஒருவரை காங்கிரஸ் கட்சி அமைச்சராக்கியது லல்லுவின் அழுத்தத்தினாலேயே. காங்கிரஸ் கூட்டணியின் மொத்தம் 214 எம்.பிக்களில் 21 எம்.பிக்கள் லல்லுவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் காங்கிரஸுக்கு வேறுவழி இல்லை. தவிரவும் லல்லு சோனியா காந்தியின் ஆதரவாளர், பி.ஜே.பியின் பிரதான எதிரி என்பதால் காங்கிரஸை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பவர். சோனியாவை பிரதமராக்கியே தீருவேன் என சூளுரைத் தவரும் இவரே. ஆக லல்லுவை எதிர்த்துக் கொண்டு காங்கிரஸ் பதவியில் இருக்கவே முடியாது. இது பி.ஜே.பிக்கு நன்கு தெரியும். எனவே தான் லல்லுவின் கட்சியினரை குறிவைத்து பி.ஜே.பியினர் தாக்குதல் நடத்தப்படுகிறது.

## காங்கிரஸின் சமாளிப்பு

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இவ்விடயம் எழுப்பப்பட்டபோது பதிலளித்த காங்கிரஸ் தலைவர்கள் பி.ஜே.பி அரசிலும் அயோத்தி மசூதி இடிப்பு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் இருந்ததாகக் கூறினர். மசூதி இடிப்பில் கிரிமினல் சதி செய்ததாக அத்வானி, மூத்த தலைவர் முரளி மனோஹர் ஜோஷி ஆகியோர் மீது சி பி ஐ குற்றம் பதிவு செய்திருந்தது உண்மை தான். ஆனால் பி.ஜே.பி பதவியிலிருந்தபோது சாதுரியமாக அத்வானி மற்றும் ஜோஷி மீதான கிரிமினல் சதிக்குற்றங்களைத் தவிர்க்கும்படி சி பி ஐக்கு உத்தரவிடப்பட்டது. சிபிஐயின் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாக அப்போது எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பின.

உண்மையில் அத்வானியும், ஜோஷியும் கிரிமினல் சதி குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட வேண்டியவர்கள் தான். ஆனால், பதவியில் பி.ஜே.பி இருந்ததால் அக்குற்றச் சாட்டுகள் தவிர்க்கப்பட்டன. ஆக காங்கிரஸின் வாதம் யாதெனில் பி.ஜே.பி முறைகேடாக சிபிஐ விசாரணையில் தலையிட்டு கிரிமினல் குற்றங்களை தவிர்த்ததேயன்றி அத்வானி கிரிமினல் தான் என்பதே.

அன்று கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டிருப்பின் அத்வானி துணைப்பிரதமர் பதவியைத் துறக்க நேரிட்டிருக்கும். அப்படியிருக்க, தஸ்லிமுதீன் போன்றோரின் குற்றம் அத்வானியின் குற்றத்தை விட பெரிதல்ல என்பதே லல்லு மற்றும் காங்கிரஸின் வாதம்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இதுவிடயத்தில் உரக்கக் குரல் கொடுத்துள்ளார். பி.ஜே.பியின் தீவிர இந்துவாதிகளால் கட்சிக்குள் ஓரங்கட்டப்பட்டிருக்கும் வாஜ்பாய், தமது குரலை காட்டுவதன் மூலம் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்க தாம் இன்னமும் தயாரில்லை என்பதையே காட்டியுள்ளார். இரண்டு நாக்குகளில் பேசுவதில் வல்லவரான வாஜ்பாய், குஜராத் வன்முறைகள் பி.ஜே.பியின் தோல்விக்கு காரணமல்ல என்று வேறு அந்தர்பல்டி அடித்துள்ளார். பகிரங்கமாக பி.ஜே.பியின் தோல்விக்கு குஜராத் வன்முறையே காரணம் என்று சொன்ன வாஜ்பாய் இப்போது நேர்மாறாகப் பேசியுள்ளார்.

பிரதமராக இருந்தபோதும் முதல்நாள் ஒரு கோணத்திலும், மறுநாள் நேர்மாறான கோணத்திலும் பல தடவைகள் பேசிய வாஜ்பாய் இந்திய வாக்காளரின் அபிமானத்தை படிப்படியாக இழந்துவருகிறார். மறுபுறம் பிரதமர் பதவியை ஏற்கமறுத்தமை காரணமாக சோனியாவின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது.

## ஆளுநர் நீக்கமும் பி.ஜே.பியின் எதிர்ப்பும்

இது தவிர 4 மாநிலங்களின் ஆளுநர்களை மத்திய அரசு பதவி நீக்கியது குறித்தும் பி.ஜே.பி எதிர்ப்புக்காட்டியுள்ளது. சாதாரணமாக மத்திய அரசு மாறும்போது முன்னைய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகிவிடுவார்கள். இம்முறை பதவி விலகுமாறு கோடி காட்டியும் பி.ஜே.பியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலக மறுத்ததால் பதவி நீக்கப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் தீவிர இந்து அமைப்பான ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர்கள் என்பது காங்கிரஸின் குற்றச் சாட்டு. மாநில ஆளுநர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர். மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படுபவர்கள். அரசியல் சாசன



மன்மோகன் சிங்

ரீதியாக பெரிய அதிகாரங்கள் இவர்களுக்குக் கிடையாது. ஆனால் மாநில அரசு ஒன்றை மத்திய அரசு கலைக்க நினைத்தால் (356 சட்ட மூலத்தைக் கொண்டு) அதற்கு ஆளுநரின் பரிந்துரை முக்கியம். எனவே தான் ஆட்சிகளைக் கலைக்க முன்னோடியாக ஆளுநர் மாற்றம் இடம்பெறுகிறது என்பது பி.ஜே.பியின் குற்றச்சாட்டு.

எஸ். சுரேந்திரஜித்

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.20 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா அன்பு மடல் 5.45 |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | குட்டி சுட்டி | ஒரு கதையின் கதை |
| 8.30 | சிறுவர் நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் 9.55 இயற்கையுடன் ஒரு நிமிடம் | கொமடி டைம் 9.55 இயற்கையுடன் ஒரு நிமிடம் | 9.55 இயற்கையுடன் கொமடி டைம் ஒரு நிமிடம் | 9.55 இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன் ஒரு நிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆட்டலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவிமர்சனம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | விரியும் சிறகுகள் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | (தித்திக்குதே) |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | ஒருகதையின்கதை | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | ஹி—மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | விக்கிரமாதித்தன் | ஓப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | மிஸ்டர் பீன் அன்பு மடல் 5.45 | "24" |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் | இசைத் தென்றல் | ஸ்டாருடன் ஒரு நாள் | "24" அன்பு மடல் 5.55 |
| 6.00 | களம் | இளைய கானம் | ஓப்போடு | பாடல்கள்/இளந்தளிர் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் | திமி தக்க தா | மின்னல் |
| 6.30 | குங்குமம் 6.55 இயற்கையுடன் ஒரு நிமிடம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அக்சன் சீரியல்) | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செப்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |


# யாழ் - மலையக கட்சிகள் மத்தியில் சொற்போருக்கு வழிசமைத்திருக்கும் மாகாணசபைத் தேர்தல் பிரசாரம்

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே 'சிறுபிள்ளைத்தனமான' அரசியல் சர்ச்சைக்குள் சில தமிழ் அரசியல் வாதிகள் ஈடுபட்டுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த - அதாவது யாழ்ப்பாணத்தை தமது பிறப்பிடமாகவும் சொந்த இடமாகவும் கொண்ட இரண்டு அரசியல்வாதிகள் வடக்கு- கிழக்குக்கு வெளியே இயங்கிவரும் இரண்டு தமிழ் அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாகவோ நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருக்கும் 'சொற்போர்கள்' பற்றி யாழ்ப்பாணம் அக்கறை காட்டுவது தவிர்க்க முடியாததாகிறது.

### மனேகணேசனும் மகேஸ்வரனும் சொற்போரில்

நடந்து முடிந்த 13 ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தவரான தியாகராஜா. மகேஸ்வரனுக்கு மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவரான



மகேஸ்வரன்

வடக்கு-கிழக்கு மாகாணத்தவர் அல்லாத தமிழரான மனோ கணேசனுக்கும் 'எக்கச்சக்கமான' கசப்புணர்வுகளை எஞ்சவிட்டுச்சென்றுள்ளது.

அத்தேர்தலில் குதிப்பதற்காக மேல்மாகாண மக்கள் முன்னணி ஐ.தே. கட்சியுடன் ஒரு விதமான புரிந்துணர்வுக்கு வந்திருந்தது. ஐ.தே.க வின் யானைச்சின்னத்தின் கீழ் மேல் மாகாண மக்கள் முன்னணித்தலைவர் மனோ கணேசனும் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர் தி. மகேஸ்வரனும் கொழும்பில் வேட்பாளர்களாகக் குதித்தனர்.

இருவரும் தத்தமக்குள்ளேயும் மிகக் குரோதமாகப் போட்டியிட்டனர். ஏனைய தமிழ் வேட்பாளர்களுடன் ஏட்டிக்குப் போட்டியாக நின்றனர்; வென்றனர் இருவரும் தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஏன் தாக்கித்துக் குரோதப்பட்டு குழம்பித்தடுமாறியபடி உள்ளனர்? நடைபெறும் மாகாண சபைத் தேர்தலிலும் குரோதம் தொடர்கிறது.

### ஈழவேந்தனின் மலை முழக்கம்

நடந்து முடிந்த 13 ஆவது நாடாளு மன்றப் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியின் நியமன எம்.பீ.யாக விளங்குபவர் மா.க. ஈழ வேந்தன். இவர் அரசியலுக்கு தேவையான விடயங்களைக் கற்றவர்; அனுபவசாலி; முதுமை, முதிர்ச்சி உள்ளவர்; முதுமையிலும் இளமைத்துடிப்போடு அரசியலில் உழைக்கும் மனவலிமை உள்ளவர்.

அவருடைய பாஷையிலேயே அவரைப்பற்றிச் சொல்வதானால் 'நல்லவர், வல்லவர்'.

ஆனால் ஈழவேந்தன் மலையக மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசார அரங்குகளில் அக்கட்சியை ஆதரித்து வாக்களிக்கும் படி மலையகத் தமிழர்களிடம் கோரி தனது தமிழ் முழக்கத்தை செய்துள்ளார்.

நடைபெறும் மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார அரங்குகளில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் ஈழவேந்தனை பிரசாரத்துணைக்கு அழைத்ததும் அதனை ஈழவேந்தன் ஏற்றுக் கொண்டு மேடையில் தோன்றி மலையகமக்களுக்கு அரசியல் தெளிவு ஏற்படுத்த முனைந்ததும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்காரர்களினால் எப்படிப் பார்க்கப்படுகிறது என்பதே எழுந்துள்ள சர்ச்சைகளுக்குக் காரணமாகிறது.

இலங்கையின் மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்துக்குப் பொறுப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய இருகட்சிகள் தொடர்பாக ஈழவேந்தனால்; ஈழவேந்தன் அங்கத்துவம் பெற்றிருக்கும் தமிழரசுக் கட்சியினால்; தமிழரசுக்கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏகோபித்த பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளால்; அதன்வழி வடக்கு - கிழக்கில் உள்ள 90% இற்கும் மேற்பட்ட தமிழ் வாக்காளர்களால் நடுநிலையான போக்கு கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் தேவை உள்ளதா?

### இருவரும் முதலாளிகளே!

முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் வடக்கு -கிழக்கின் போராட்ட சக்தியையும் அரசியல் அபிலாஷைகளையும் மிகவும் பரந்து பட்ட அளவில் பலசந்தர்ப்பங்களில் ஆழ நீளமாக விளங்கிவைத்திருப்பவர்.

அவரது குடும்பப் பின் புலத்திலிருந்து அரசியல் பின்புலம்வரை பார்த்தால் ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட மக்களுக்கு உழைக்கும், குரல் கொடுக்கும் சோஷலிஸ்ட் அல்ல அவர் என்பதும், அவரது பொருளாதாரம் வர்த்தக நடவடிக்கைகள் சார்ந்தது என்பதும் அவர் இயல்பாகவே ஒரு முதலாளி என்பதும் அவரது அரசிலும் கூட முதலாளித்துவக் ஜனநாயகவாத அரசியல்தான் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்கும் விடயங்கள்.

ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கக்கூடிய குடும்பப்பாரம்பரியம் யாழ்ப்பாணம் காரைநகரைச் சொந்தமாக கொண்டிருந்த அவரது குடும்பத்தினரிடம் இல்லை என்பதற்காகவோ, அவர் அங்கத்துவம் பெற்று அரசியல் நடத்தும் அல்லது நடத்திய கட்சி ஒரு முதலாளித்துவக்கட்சி என்பதனாலோ மகேஸ்வரன் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களை தொடர்ந்து திட்டமிட்டு ஒடுக்கி அடக்கி வருகிறார் என்று கூறுவதற்கு முனைவதும் சரியல்ல.

அவர் ஒரு வெறும் வியாபாரியல்ல. அவர் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தரம் வரை கற்றவர். நிதிமுகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம் தொடர்பாக அனுபவமுள்ளவர். மனிதாபிமானி

முதலாளித்துவம் தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்கி அடக்கும் என்பது பல நூற்றாண்டுகளாக நிரூபிக்கப்பட்ட நடைமுறை. அவ்வளவு பெரிய உலகளாவிய வர்க்கச்சிந்தனைக்குள் மூழ்கியோ, ஏன் இலங்கை முழுமைக்குமான தமிழ், சிங்கள உழைக்கும் வர்க்கத்தை முதலாளித்துவம் ஒடுக்கி அடக்குகிறது . என்ற மேம்பாடான வர்க்கச் சிந்தனைக்குள் மூழ்கியோ தியாராஜா மகேஸ்வரன், மனோ கணேசன் ஆகியோரின் சரிகள் எவை, பிழைகள், எவை, தவறுகள் எவை என்று ஆராய்வதும் பொருந்தமல்ல. ஏனென்றால் இருவரும் வர்க்கரீதியில் முதலாளிகளே.

### 'தியாகங்கள்' பலியிடப்படுகின்றன

அகில இலங்கை ரீதியில் சர்வதேச முதலாளித்துவ முறைமையை ஏற்றுக்கொண்ட அரசியல் சக்திகளின் மோதல்களின் விளையுள் விசைக்கு ஈடுகொடுத்து சமாளித்துக் கொண்டு - இன்னொருவகையில் சொன்னால் 'கொண்டும் கொடுத்தும்' தந்திரோபாய நலன் சார்ந்த வகையில் யுக்தியை வகுத்துக் கொண்டும் தான் தமிழரின் விடுதலை அரசியல் நகர்கிறது.

வர்க்க விடுதலைக் கோட்பாடுகளைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் விலகிச் செல்வோம். சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்ட வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் ஆயினும் சரி , அப்பிராந்தியத்துக்கு வெளியே வாழும் தமிழராயினும் சரி, மனோ - மகேஸ் சொற்போர்களை ஆரோக்கியமாகப் பார்க்கமாட்டார்கள்.

மகேஸ்வரன் அரசியலிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கிக் கொள்ளப் போகிறார் என்று அண்மையில் செய்திகள் வெளியாகின. நடைமுறையில் அது எவ்வாறு அமையுமோ தெரியவில்லை.

ஆனால் அகில இலங்கை ரீதியாக தமிழர் ஒற்றுமை மிகவும் வேண்டப்படும் இத் தருணத்தில் இருவரும் ஒருவர் மற்றவர் மீது வசைமாரி பொழிவதும் அச்ச உணர்வுகளை வெளியிடுவதும் துன்பங்களையும் குரோதங்களையும் நகர்த்திவிடுவதும் தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு உகப்பானவை அல்ல.

மனோ கணேசன் மேல் மாகாணத்தின் கொழும்பில் அரசியல் செய்ய முடியும் என்றால், மகேஸ்வரனாலும் அதைச் செய்ய முடியும். நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பின் பரிபாஷையே ஜனநாயக ரீதியாக முடியும் என்கிறது.

ஆனால் வடக்கு கிழக்கில் தியாகிக்கப்பட்ட ஒரு இலட்சம் உயிர்கள், பல்லாயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள், இன்னும் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதி மிக்க இழந்துபோன அபிவிருத்தி இவற்றையெல்லாம் மனோ கணேசனா(?) மகேஸ்வரனா(?) நன்கு விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்?

இவர்கள் இருவரினதும் சர்ச்சைகளில் 'தியாகங்கள்' பலியிடப்படுவதை தமிழர் விரும்பவில்லை என்பதை மனோகணேச னும், மகேஸ்வரனும் அறிவார்களா?

நீங்கள் உங்கள் நோக்கங்களுக்காக வாதாடி சொற்போராடி மோதுங்கள். யாரும் கவலைப்பட மாட்டார்கள்.

ஆனால் அழிந்து சிதைந்து போயுள்ள மக்கள் சமூகத்தை அடகுவைத்து அரசியல் குதர்க்கம் விளைவிக்காதீர்கள் என்பதே யாழ்ப்பாணத்தின் படித்தவர்களினதும் பாமரச்சனங்களினதும் அபிப்பிராயமாக உள்ளது. இதனை மகேஸ்வர - கணேசன் கள் தயவுடன் விளங்கிக்கொள்வார்களாக!

### மலையக பிரபாகரன் - ஈழவேந்தன் முகஸ்துதி

அதே வேளை எங்கள் ஈழவேந்தன் ஐயா அவர்கள் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனை 'மலையகத்துக்கு ஒரு பிரபாகரன்' என்று ஒரு போடு போட்டுள்ளார். இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கார ராக உள்ள எம்.பி.வீ.புத்திரசிகாமணி கொதிப்படைந்து போயுள்ளதாகத் தெரிகிறது.

பதுளை லுணுகலையில் நடைபெற்ற இ.தொ.கா வின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் (மாகாண சபைத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்) கலந்துகொண்டு உரையாற்றிய புத்திரசிகாமணி இலங்கையின் நவீன வரலாற்றின் கறை படிந்த பக்கமொன்றைபுரட்டிக்காட்டிப் பேசியுள்ளார்.

கடும்வாதாட்டக்காரன் என்று பெயர் பெற்றிருந்த அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் 1947இல் மலையக மக்களின் உரிமைப் பறிப்புக்கு சிங்களத்துக்கு ஒத்து ஊதினார் என்ற பாணியில், புத்திரசிகாமணி பேசியுள்ளார்.

மலையகத்தில் பலம் வாய்ந்த அரசியல் சக்தியாக இ.தொ.கா திகழ்கிறது என்றும் அதனைச் சிதைப்பதற்கு ஈழவேந்தன் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிமார் மலையகத் துக்குள் ஊடுருவுகின்றனர் என்றும் புத்திரசிகாமணி கொதிப்பாகப் பேசியுள்ளார்.

பிரபாகரனின் போராட்டத்தை இ.தொ.கா ஆதரித்தே வந்துள்ளது என்றும் அந்த எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

### மூஞ்சூறுகளும் விளக்குமாறுகளும்

மனோ?மகேஷ் சர்ச்சையை, முதலாளிய தொழிலாளிய வர்க்கச் சிந்தனைகளுக்கு ஊடாகப்பார்க்க விரும்பாமல் வசதியாக விலகியது போன்றே இ.தொ.கா- மலையக மக்கள் முன்னணி சர்ச்சைகளையோ, ஈழவேந்தனின் கருத்துக்களையோ வர்க்கப் பார்வைக்கூடாகப் பார்க்க முடியாது விலக வேண்டியுள்ளது.

அடக்கி ஒடுக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு இரண்டு கட்சிகளுமே சரியான பொருளாதார, அரசியல் தீர்வுகளுடன் பிரதிநிதித்துவத்தை வழங்கவில்லை. ஏதோ கதைக்கிறார்கள் ; ஏதோ செய்கிறார்கள். தமிழில் ஒரு பழமொழி உள்ளது.



மனோகணேசன்

'மூஞ்சூறு (சிறியவகை எலி) தன்னையே கொண்டு போய்ச் சேர்க்க முடியாது தவிக்கின்றது. பிறகேன் விளக்குமாத்தையும் காவிச் செல்ல முனைகிறது' என்று அர்த்தம் தரும் பழமொழியே ஞாபகத்துக்கு வருகிறது.

எவ்வாறு தமது சொந்த மக்களின் விவகாரங்களில் இரு மலையகத் தமிழ் கட்சிகளும் நடந்து கொள்கின்றனவோ அவ்வாறே ஈழத்தமிழர் விவகாரங்களிலும் தத்தமக்கு வசதியாக ஏதோ கதைக்கிறார்கள் ; ஏதோ செய்கிறார்கள்.

ஆட்சி அமைக்கக் கூட்டுச் சேரும் விடயத்தில் மலையகத் தமிழ் மக்களின் நலன்களையே தாம் கருத்தில் கொள்வதாகவும் வடக்கு- கிழக்கு தமிழர் பிரச்சினையை தமது பிரச்சினைக்குள் கொண்டு வந்து சேர்த்துக் குழப்புவது சரியல்ல என்றுதான் ஆறுமுகன் தொண்டமான் அடிக்கடி கூறிவருகிறார், அது உண்மையும்தான்.

சமூக அரசியல் விடுதலை தவறிக் கெட்ட.... மக்களாக மலையக மக்கள் இன்றும் வாழ்வதற்கு காரணமான அதே தலைவர்களிடம், தம்மையே காவிச் செல்ல முடியாத மூஞ்சூறு போன்று அவலப்படும் தலைவர்களிடம் ஈழத்தமிழர் விவகாரத்திலும் பங்களிப்புச் செய்யுங்கள் என்று அரசியல்ரீதியாக கேட்பது புத்திசாலித்தனமானதல்ல.

இ.தொ.கா. விலிருந்து மலையக மக்கள் முன்னணி சற்று வேறுபட்டிருப்பினும் , ஈழவேந்தன் விபரித்த அளவுக்கு சந்திரசேகரன் இல்லை என்பதை யாழ்ப்பாண மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர், இரு மலையகக் கட்சிகள் விடயத்திலும் மிகவும் கவனமாகவும் நுணுக்கமாகவும் கருத்துக்களைத் தெரிவிப்பது ஈழவேந்தன் போன்ற முதிர்ச்சியுள்ள அரசியல்வாதிகளுக்கு தமிழ்மக்களால் உணர்த்தப்படும் மற்றொரு முக்கிய விடயமாகும். நடுநிலைமையே நல்லதுபோன்றுள்ளது.

-யாழ் ஆத்மா-

# நெட் கற்பனை




பேரழகன் என்ற திரைப்படத்தில் நடிகர் சூர்யா முன்னே துருத்திய பற்களுடனும் பரட்டைத் தலையுடனும் கூனனாக வேடமேற்று நடித்திருந்தார்.

அந்த வித்தியாசமான வேடம் பலரையும் கவர்ந்தது. அதே வேடத்தில் திரையுலகில் தற்போது முன்னணியில் இருக்கும் விஜய், அஜீத், பிரசாந்த், மாதவன், ஷாம் ஆகிய கதாநாயகர்கள் நடித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?

ஒரு கணினி கற்பனையாளரால் வர்ணிக்கப்பட்ட தோற்றங்களையே அருகில் காண்கிறீர்கள்.

# நெட் குறும்பு




ஐயய்யோ. இத்துணூண்டா இருந்து கொண்டு இவருக்கு இது தேவையா.? மாட்டிக்கிட்டார். ஐஞ்சை – பத்தைக் கொடுத்து சமாளிக்க வேண்டியது தானே....! அது கூட தெரியாமல்... காட்டிய இடத்திலே கையெழுத்துப் போடுகிறார்... பாவம் கம்பி எண்ணப்போகிறார்...

# சத்தமில்லாமல் சிரியுங்கள்




குறிப்பு: வர வர செல்போன்கள் சிறுத்துக் கொண்டே போகின்றன. எதிர்காலத்தில் சொல்போன்கள் தொலைந்தால் இப்படித்தான் தேட வேண்டி வருமோ....?

# கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தைப் பாருங்கள். சதுரத்துக்குள்ளே குறுக்காகவும், நெடுக்காகவும் சில கோடுகள் இருக்கின்றன. படத்தைப் பார்க்கும் போது அந்தக் கோடுகள் எல்லாம் கொஞ்சம் வளைந்திருப்பது போல் தெரிகின்றன. ஆனால் அவை உண்மையிலேயே வளைவுகளே அல்ல.... எல்லாமே நேர் கோடுகள்தான்... என்கிறோம் நாம். நம்புகிறீர்களா? நம்பவில்லை என்றால் அடிமட்டம் ஒன்றை எடுத்து அந்தக் கோடுகளில்வைத்துப் பாருங்கள்... உண்மை புரியும்.

## ஜோக்

கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் கணவர். அவர் அருகே கவலை தோய்ந்த முகத்துடன் மனைவி. கணவரின் நோயை பகீரதப் பிரயத்தனம் செய்து ஓரளவு குணமாக்கி இருந்தனர் டாக்டர்கள்.

இப்போது அவர் கொஞ்சம் குணமடைந்து விட்டார். எனவே அவரை வீட்டுக்கு அனுப்புவதென முடிவு செய்தனர் டாக்டர்கள்.

வீட்டுக்குச் சென்றால் கையைக் காலை ஆட்டி எந்த வேலையும் செய்யக்கூடாதென கண்டிப்பான உத்தரவுடன் கணவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். வீட்டுக்கு செல்வதற்கு முன்னால் நீண்ட மருந்துப் பட்டியல் ஒன்றைக் கணவரிடம் கொடுத்து ''இவைகளை தவறாமல் போடுங்கள்... கண்டிப்பாக கை - கால் ஆட்டி எந்த வேலையும் செய்யாதீர்கள் கட்டிலிலேயே படுத்திருந்த ஓய்வெடுங்கள்'' என்று ஆலோசனை கூறினர்.

ஆலோசனையை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த நோயாளியான கணவர். டாக்டரை கிட்டே வரும்படி அழைத்து. அவர் தந்த மருந்துச் சீட்டை திரும்பவும் அவரிடமே கொடுத்தார். கொடுத்து விட்




டுச் சொன்னார். ''டாக்டர்.. நீங்கள் சொன்னது போல் நான் ஓய்வு எடுக்க வேண்டுமென்றால் எனக்கு எந்தவிதமான மருந்துகளும் தேவையில்லை... எனது மனைவிக்குத்தான் நீங்கள் மருந்து கொடுக்க வேண்டும். அவளுக்கு நன்றாக நித்திரை வரக்கூடியதாக மருந்து கொடுங்கள் அப்போதான் நான் ஓய்வு எடுக்க முடியும்'' என்றார்.

# ஒளிந்திருக்கும் ஓவியம்

கீழே உள்ள படத்தின் முதலாவது ஓவியத்தையும் - கடைசியாகவுள்ள ஓவியத்தையும் பாருங்கள். முதலாவது படம் ஒரு ஆணின் முகத்தைக் காட்டுகிறது. அதே படம் கொஞ்சம் கொஞ்சமாக முகத்தை சுழித்து கொள்வது போல் தொடர்ந்து வரும் படங்கள் வரையப்பட்டுள்ளன. அந்த முகச்சுளிப்பானது எட்டாவது படத்தில் ஒரு பெண் முகத்தை கைகளால் பொத்தியபடி பின்புறமாக பார்த்துக் கொண்டிருப்பது போல் உருமாறி இருக்கிறது. பாருங்கள் தெரிகிறதா?





# 'செவ்வேல்'

'செவ்வேல்' என்றொரு படம் சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

அகத்தியனின் 'ராமகிருஷ்ணா' படத்தின் ஹீரோ ஜெய் ஆகாஷ், அதிரடி அக்ஷன் ஹீரோ ஆவார். இந்தப் படத்தில் அவரது அப்பாவாக ராஜ்கிரண் நடிக்கிறார். அப்பா வேடமானாலும் ஹீரோவுக்கு நிகராக கதையில் இவர் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

நி[illegible], சாவி[illegible] [illegible] லோ என்ற இரண்டு இலங்கைத் தமிழர்கள் இணைத் தயாரிப்பாளர்களாக இருந்து உருவாக்கும் செவ்வேல் படத்தின் தயாரிப்பாளர், ஒளிப்பதிவாளர், கதை– திரைக்கதை, வசனம், இயக்கம் என்று பல பொறுப்புக்களைச் சுமப்பவர் பிரிமூஸ். 15 ஆண்டுகளாகப் பல்வேறு ஒலிப்பதிவாளர்களிடம் உதவியாளராக பணியாற்றியவர். ராஜ்கிரண் நடித்த ஜங்ஷன் படத்தின் ஒளிப்பதிவாளர். இயக்குநராகும் தனது லட்சியத்தை செவ்வேலில் சேலாக்கும் பிரிமூஸ் மிக யதார்த்தமான படம். சினிமாத்தனமில்லாமல் அதேசமயம் சினிமாவுக்குத் தேவையான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய படம் இது என்கிறார்.


கலாபவன்மணி, இளவரசு, செந்தில், அலெக்ஸ் உட்பட பலர் பங்கேற்கும் செவ்வேல் படத்துக்கு இலங்கை, பிரான்ஸ், இத்தாலி போன்ற வெளிநாடுகளில் பெரும்பாலும் படம் பிடிக்கப்படப் போகிறது!

ராஜ்கிரண் 'போலீஸ்'க்கு என்ன அர்த்தம் என்று கேட்டால் படத்தின் மொத்த விஷயத்தையும் இந்தப் படம் முடிந்ததும் அதை விளக்கமாகச் சொல்றேன்'' என்று கண்சிமிட்டுகிறார் தயாரிப்பாளர் – கம் – இயக்குநர் பிரிமூஸ்.

# 2010இல் சிம்பு சூப்பர் ஸ்டார்

சென்னை ஜூலை 2– சி[illegible] நடித்த மன்மதன் என்ற புதிய படத்தின் பாடல் கெசட் வெளியீட்டு விழா சென்னை ஆல்பட் தியேட்டரில் நடந்தது. விழாவில் க[illegible]து கொண்டு கெசட்டுகளை வெளியிட்டு இலட்சிய தி.மு.க தலைவர் விஜய் டி. ராஜேந்தர் பேசினார் அப்போது அவர் கூறியதாவது:–

தன்னம்பிக்கைக்கு உதார[illegible] இந்த ராஜேந்தர். 1980 இல் ராஜேந்தர் உதயம். 2004 இல் சிம்பு விஜயம். என் மகன் சிம்புவை சூப்பர் ஸ்டாராக்க வேண்டும் என்[illegible] [illegible]ணர்வோடு தான் அவனை நானும் எனது மனைவியும் வளர்த்தோம்.



நான் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து வந்தவன் தான் . ஆனால் இப்போது ஆன்மீகத்தில் கலந்து விட்டேன். 25 வருடமாக ஜோதிட ஆராய்ச்சி [illegible] வருகிறேன், எனக்கு எது எப்போது நடக்கும் என்று தெரியும். [illegible] சூப்பர் ஸ்டாராக வருவான் என்பது எனக்கு முன்பே தெரியும். [illegible] தான் அவனது படத்தில் ஐ ஆம் லிட்டில் ஸ்டார் ஆவேன்; நான் [illegible] ஸ்டார் என்று பெயர் வைத்தேன். பிறகு நானே அவனை காதல் அழிவதில்லை படத்தின் மூலம் கதாநாயகனாக்கினேன். இன்றைக்கு அவன் வளர்ந்திருக்கிறான். இதைப் பார்த்து சிலர் பொறாமைப் படுகிறார்கள். கையை ஆட்டுவது ஸ்டைலா என்று கேட்கிறார்கள். பிறகு காலை ஆட்டுவதா ஸ்டைல்?

ரஜினிகாந்த் அபூர்வராகத்தில் நடிக்கும் போது அவரை யாரும் சூப்பர் ஸ்டார் என்றார்களா? விதையைப் பார்த்து யாரும் விலாசம் சொல்ல முடியாது. வளரும் முன்பே தட்டிவிடும் உலகம் இது. வரும் 2010 இல் என் மகன் சிம்புதான் சூப்பர் ஸ்டார். வாழ்க்கையில் நான் மூன்று கைகளை நம்புகிறேன். ஒன்று கடவுள் நம்பிக்கை, மற்றது தன்னம்பிக்கை அடுத்து பத்திரிகை.

நானும் திரை உலகத்தில் நிமிர்ந்து நிற்கிறேன் . வீராச்சாமி படத்தில் நான்தான் கதாநாயகன். சேரன் காலத்திலும் இருப்பேன், என் பேரன் காலத்திலும் இருப்பேன். அடுத்து என் மகன் குறளரசன் வரப்போகிறான். வந்து கலக்கப் போகிறான்.

இவ்வாறு விஜய் டி.ராஜேந்தர் பேசினார்.

விழாவில் நடிகர் சிம்பு, நடிகைகள் மந்திரா பேடி, யானாகுப்தா, தயாரிப்பாளர், சங்கத் தலைவர் முரளிதரன், டைரக்டர்கள் சேரன், ரமணா, இசை அமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா, மன்மதன் பட இயக்குனர் ஏ.ஜே. இ. முருகன், ஒளிப்பதிவாளர் ராஜசேகர், கதாசிரியர் பாலகுமாரன் உட்பட பலர் பேசினார்கள். விழாவில் நடிகை ஜோதிகாவும் கலந்து கொண்டார்.

முடிவில், படத்தின் தயாரிப்பாளர் இந்தியன் தியேட்டர்ஸ். க.கிருஷ்ணகாந்த் நன்றி கூறினார்.





அபிலாஷ்

# 'ரோஜா ம[illegible]

ஹேடகித்ரா சினிகம்பைன[illegible] வழங்கும் R.அன்பரசுவின் [illegible] படத்தில்,

அபிலாஷ் – சிந்தூரி

புதுமுகம் அபிலாஷ் கதாநாயகனாக நடிக்க, பாய்ஸ், என்ன[illegible] தாவுது மனசு போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்த சிந்தூரி[illegible] உடன் ஜோடி சேர்கிறார்.

தேவ குரு

'பத்திகிச்சி' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான தேவ [illegible] வில்லன் தோற்றத்தில் காட்சி அளிக்கிறார்.

கதை

விபத்தில் கால் ஊனமான வாலிபன் விரக்தியின் விளி[illegible] இளம் பெண்ணை சந்திக்கிறான். அவளின் கனிவான அன்பி[illegible]



அபிலாஷ் – சிந்தூரி

வயப்படுகிறான்.

இதனால் ஏற்படும் விளைவுகளை விளக்குவதே இத் திரை[illegible]

இக்கதையை வசனம் எழுதி திரைக்கதை அமைத்து இயக்[illegible] [illegible]. யா[illegible]ரிதேஷ் இசையமைக்கிறார். எடிட்ட[illegible] தொகுப்பைக் கவனிக்க, [illegible] [illegible]மைக்கிறார். முத்[illegible] [illegible] பாடல்கள் எழுத, நடனத்தை [illegible] முருகேஷ் அமைக்கிறார்கள். [illegible] சபாபதி, இணை இயக்[illegible] [illegible]ரிப்பு, R. அன்பரசு[illegible] [illegible]

'ரோஜ[illegible]



## ...மகள்'

...ன்பரசுவின் 'ரோஜா மகள்' திரைப்...

...ய்ஸ், என்னவோ புடிச்சிருக்கு, தத்தித் ...த்த சிந்தூரி இப்படத்தில். அபிலாஷ...

...மான தேவ குரு மூற்றிலும் மாறுபட்ட

...யின் விளிம்பில் இருக்கை... ஒரு ...யான அன்பினால் அவள் பே... ...தல்



## ...ா மகள்'

...தே இத் திரைப்படம்.

...மைத்து இயக்குகிறார் C.N.சந்தோஷ் ...ார். எடிட்டர்D.S.R. சுபாஷ் படத் ...த்தூர் ... சண்டைக் காட்சிகளை ...ருத்திய... ...ளையகம்பன் ஆகியோர் ...டனத்தை ராம்யாதவ், வாசு, ராம் ...க்கிறார்கள். தயாரிப்பு மேற்பார்வை ...ணைஇயக்குனர் மணிபா... தயா... R .அன்புரசு, J. வெங்கட்ரா...

அம்பிகா/ நிழல்கள்ர...

இதில் அம்பிகா, ... ரவி, K.விஜய... Dr.சர்மி... சமிதா, ...யா ...றாசன் மற்றும் ...பலர் நடிக்கின் ...றார்கள்.

# சீ...! சீதாவா?

கொள்ளை அழகு: கொண்டை மீன் கண்கள் என்று சீதாவின் பேரழகில் சொக்கிப் போனவர்கள் ரசிகர்கள் மட்டுமா? ஆஹா! எத்தனை அழகு என்று ராத்தூக்கம் கெட்ட தயாரிப்பாளர்கள் கோடம்பாக்கத்தில் ... ...ண்டு. ஆசைப்பட்ட பலபேரில் ஒரு தயாரிப்பாளர் மீது மட்டும் ... ...சொல்தான் ... — சீதா உற... ...ந்தது. பார்த்த... பிரிந்த ... ...றவையான சீதா மனம் போனபடி சிறகடித்தார். அந்தத் தயாரிப்பாளரை சந்திப்பதும் அவரோடு போட்டில் பாட்டிகளில் கலந்து கொள்ளுவதும் தொடர்கதை ஆனது. அவரோடு அடிக்கடி வெளிமாநிலங்களுக்குப் பறந்து சென்று தன்னை மறப்பதும் சீதாவுக்குப் பிடித்த பொழுதாகிவிட்டது.

அப்படித்தான் கடந்த வாரம் அந்தத் தயாரிப்பாளரோடு பெங்களூர் பறந்தார் சீதா. பெங்களூர் நகரின் சினிமா ஏரியாவான காந்தி நகரிலுள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் அறையெடுத்து ஆசையோடு தங்கினார் சீதா. அன்று இரவு அந்த ஹோட்டலில் உள்ள பாருக்குச் சென்று தயாரிப்பாளரோடு தாகசாந்தி செய்தார். நேரம் போகப் போக போதையும் ஏறிக் கொண்டே போனது. கண்ணாபின்னாவென்று பிதற்றத் தொ...ய சீதாவைக் கட்டுப் படுத்த முயன்றார் தயாரிப்பாளர். அது எரிச்சல் ...ட்ட சேலையை மடித்துக் கட்டிக்கொண்டு சென்னை குடிசைவாசிப் பெ...ள் பாணியில் சகட்டு மேனிக்கு அசிங்க அசிங்கமாகப் பேச பார் சிப்பந்திகள் அதிர்ந்து போனார்கள்.

ஆசை ஆசையாக் கூட்டிப் போன தயாரிப்பாளருககு சீதா பண்ணிய ரகளையில் போதை போயே போச்சு.



த்ரிஷா

# த்ரிஷா த்ரிஷாதான்

தெலுங்கில் 'வருஷம்' படத்தில் அதிகம் தாராளம் காட்டியிருக்கிறார், த்ரிஷா. 'வருஷம்' படத்தை இப்போது தமிழில் எடுக்கப் போகிறார்கள் . த்ரிஷாவே நடிக்கிறார்.

தெலுங்கில் காட்டிய கவர்ச்சியைத் தமிழிலும் காட்டுவேன் .ரசிகர்களுக்குள் பாகுபாடு காட்டுவது தவறு. பாகுபாடு இல்லாமல் கவர்ச்சி காட்டினால்தான் எனக்குப் பஞ்சம் வராது என்கிறார் த்ரிஷா.



'ஷாக்' - பிரசாந்த், மீரா

# புதிய உடன்படிக்கையில் கமல்-சரிகா

'விருமாண்டி' படம் வெற்றியடைந்தாலும் சிறிது காலம் சோகமாகவே காணப்பட்டார், கமல். இதற்குக் ...ாம் ஒரு வகையில் அவரின் குடும்ப ...நிலை என்றும் கூறலாம்.

...ரன் நடிகையால் கமல் – சரிகா இடையே சில மாதத்துக்கு முன் பிரிவு ஏற்பட்டது மகள்கள் சுருதி, அட்சராவை அழைத்துக் கொண்டு படங்களிலும் நடித்தார். ''புன்னகை பூவே'' படத்தில் ஒரு பாடல் காட்சிக்கு வந்து போனார்.

...ரன் நடிகையின் திருமணத்...துக்குப் பின் இந்தத் தம்பதிகள் இப்போது ஒன்று சேர்ந்துவிட்டனர். இதன் ஒரு பகுதியாகத்தான் கமலின் மகள் சுருதி கடந்த வாரம் சென்னையில் நடந்த விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் தந்தை கமலுடன் கலந்து கொண்டார்.

சரிகாவின் சில நிபந்தனைகளுக்கு கமல் சம்மதிக்க, மகள்மாரைக் கூட்டிக்கொண்டு சென்னைக்கு வரப்போகிறார் சரிகா.

எப்படியாகிலும் உலக நாயகன் மீண்டும் தனது வித்தைகளை காட்டாது இருந்தால் சரி.

# ஆயுதம்

மார்ஸ் என்டர்டெயின்மென்ட் வழங்க சி.டி.வி. பட நிறுவனம் ஏற்கனவே மிகப் பெரிய வெற்றி பெற்ற 'ஜீன்ஸ்', 'மின்னலே', 'ஜோடி'மஜ்னு ,'காதல் கவிதை ' போன்ற படங்களைத் தயாரித்திருக்கிறது. இதைத்தொடர்ந்து இந்நிறுவனம் தயாரிக்கும் படம் 'ஆயுதம்'. இப்படத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக சினேகா நடிக்கிறார். பிரசாந்த் நடித்த ''விரும்புகிறேன்'' படத்தில் அறிமுகமான சினேகா மீண்டும் 'ஆயுதம்' படத்தில் பிரசாந்துடன் இணைகிறார்.

மேலும் வடிவேல், ஜனகராஜ், மன்சூரலிகான், மனோபாலா, பென்சட் ரவி, ராஜேஷ், கலைராணி, அஜெய்ரத்னம், ராமன்ஐயர், குண்டு ரவி, விஜிகேட்டி, பேபி காயத்ரி இவர்களுடன் மும்பையைச் சேர்ந்த ரஸ்னா முக்கிய வேடத்திலும் மீனல் ஒரு பாடல் காட்சியிலும் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவு : அரவிந்த் சிநேகன், பா.விஜய், விவேகா பாடல்களுக்கு தினா இசையமைக்கிறார். நடனம்: தருண்குமார், பிருந்தா, தினேஷ் வசனம்: கதை திரைக்கதை டைரக்ஷன் பொறுப்பேற்றிருப்பவர் எம்.ஏ.முருகேஷ். இவர் 'இன்று முதல்' என்ற வெற்றிப்படத்தை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. தயாரிப்பு: சி.டி.வி.

இப்படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது




'ஏய்' சரத்குமார், நமீதா

# கவிதைப் புனல்

## நடேசக்குயிலுக்காய் பாடுகிறேன்...

அந்தோ– உன் பேனாக்கள் கக்கிய
தீயினால் பற்றி எரிகிறதே
பாதகர் பொய்கள்!
நீ நீர்த்துளிகளுக்கு நடுவில்
நின்ற தீத்துளி–உன்
வெப்ப வீச்சுக்களால்
குப்பைகள் பல
குழிதோண்டிப்புதைக்கப்பட்டன.
துப்பாகிகளை விடவும்
பேனாக்களுக்குத்தான்வலிமை அதிகம்.
அவைகளால் உயிரை
எடுக்கவே முடியும்.
இவைகளால் எடுக்க மட்டுமல்ல
கொடுக்கவும் முடியும்.
தமிழ் தேசியம் வாழ
தன் பேனா முனையால்
உயிர் கொடுத்த இவன்
உயிர் தனை எடுக்க–அந்த
துப்பாக்கிக் குண்டுகளுக்கு
எப்படி மனம் வந்ததோ?
சிலர் உயிர் இருக்கும்போதே
வாழ்ந்தது இல்லை.
நீயோ–உயிர் பிரிந்த பின்னும்
வாழ்ந்துகொண்டிருக்கிறாய்...
உந்தன் எழுத்துக்களை
எழுத்துக்களால்
எதிர்கொள்ள முடியாமல்
கழுத்தறுத்த காடையர்கள்
அஃறினை உயர்திணைக்குள்
அடங்காத வர்க்கங்கள்.
நீ பசித்த வயிற்றுக்கு
பால் கொடுத்தவன்.
எங்களினம் நோயுற்ற போதெல்லாம்
இரவும் பகலும்
எழுத்தால் மருந்தளித்த
விளக்கேந்திய பெருமாட்டி.
பிரதேச வாதமெனும்
பார்த்தினியச் செடியொன்று
உருவெடுத்த காலமெல்லாம்
உன் பேனாக்களின்மைத்துளிகள்
இங்கே புல்நாசினிகளாய்
புது வடிவம் எடுத்ததே!
எங்களுக்குத் தெரியும்–நீ
துப்பாக்கிகளுக்குப்பயந்தவனல்ல – நீயே
ஒரு துப்பாக்கியாய் வாழ்ந்தவன்.
இனத்துக்காகவே
எந்நேரமும் பாடித்திரிந்த
எங்கள் நடேசக்குயிலே–உன்பாடல்கள்
காலத்தால் கரையாத
கருத்துச் சித்திரங்கள் செய்திகள்
எனும் தேனை
சேகரித்த தேனியே! –உன்
செய்திகள் எங்களுக்கெல்லாம்
தேனாய் இனித்ததால்
தினமதை உண்டோம்.
சேகரித்த செய்திகளால் பொய்த்
தோலுரித்த வீரன் நீயடா...
நிலவு தேய்வதில்லை.
தெரியாமலே போவதுண்டு–நீ
வளர்பிறையாய் வலம் வருவாய்.
ஓ பாதகர்களே,
நன்றாகப்புரிந்துகொள்ளுங்கள்.
நாங்கள் மதம் பிடித்த யானைகளையே
சங்காரம் செய்வோம் கோயில்
யானைகளை குறி
வைக்க மாட்டோம்–இவை
தொழப்பட வேண்டியவை.
அவை தொலைக்கப்பட வேண்டியவை.
உந்தன் எழுத்துக்களை
ஏந்தி வரும் பத்திரிகையதை
உயிரற்றதுனதுடல் தாங்கிநின்ற
காட்சி – எரிமலைக்கண்களில்
நீர் மழை சுரக்க வைத்ததடா.
மீன் பாடும் தேன் நாட்டுக்கு
தமிழ்த் தீன் போட்ட தாயடா நீ!
வீண் போகாது–உன்
விளைச்சல்கள் அறுவடை நாள்
அழகாகும் நடேசா.
உறைவாள் தனைவிட– உன்
கட்டுரை கூரானது.
பெற்ற மண்ணை தாயாய் தரிசித்ததால்
கடைசிக்கணத்திலும்
அதனையே அணைத்தாயோ?
நெஞ்சில் வீரமொடு நடக்கிறோம்
அந்த வாரமலர்களை
வாங்கிடும்போதெல்லாம்
ஈரமாகிறதுநெஞ்சு.
இருப்பினும் நடக்கிறோம்
இவை தொடர்கதை என்பதால்
நிச்சயம் விரைவில்
முடிவுரை முடிப்போம்.

*யோ.புரட்சி.*

## இனிவரும் காலம்....

எங்கே போகிறது
எம் இனிய தேசம்...?
அபிவிருத்தியும்
முன்னேற்றமும்
கேள்விக் குறியோடு
வியந்து பார்க்க
பாதாளம் நோக்கி
விரைகிறது எம்தேசம்.
போர் ஓய்ந்த
பின்னும் தொடரும்
படுகொலைகள்...
சமாதானப் பறவையின்
சிறகை வெட்டி
ருசி பார்க்க முனையும்
இனவாத வல்லூறுகள்...
நித்தம் நிகழும்
அரசியல் பழிவாங்கல்கள்...
பாலியல் உறவுகள்...
தனிநபர் கடத்தல்கள்...
பந்தயம்
கட்டித் தொடரும்
நிர்வாண ஓட்டங்கள்...
எங்கே போகிறது
எம் இனிய தேசம்...?

*தமிழின் தோழி*
*யாழ்.பல்கலைக்கழகம்*

## பவனித் தேர் !

ஆலய வாசல் தேடி
ஆரமுதே நீ செல்ல -உன்
வெண்ணிலா
முகம் தேடி
வெண்முகிலாய்
நான் வர...!
பச்சையில் ஆடை போட்ட
பவனித்தேர்
வருவது கண்டு
பக்தனான
உள்ளம் கொண்டு
அருள் வேண்டி
ஓடி வந்தேன்.
பாசமலரே உன்னை
பரிணமிக்க
செய்த அன்னை
படர் கொடியாய்
உன்னுடன் !
தோழிகளை
தூது விட
தோழிகளும்
இல்லையடி !
கார்த்திகைப்
பூ முகம் தனில்
கார் முகிலாய்
என்ன வெறுப்பு !
நேற்று நடந்த தவறுகள்
கனவாகப் போகட்டும்.
வான் நிலவே...!
உன் வதனத்தை மட்டும்
ஒழித்து விடாதே அன்பே!

*ந.வசந்தன்.*

## வா தமிழா!

''ஆயிரம் ஆட்சியாளர்கள்
அரியணை ஏறி
ஆண்ட பரம்பரை எம்மை
அடக்கி ஆள்வதே
அவர்களின் திண்ணம்''
மாண்டு கிடக்க நாம்
என்ன மடையர்களா
''மீண்டெழுவோம்
வா தமிழா எம்மை நாமே
ஆள்வதற்கு''
''தியாகதீபம் கூறியதை
மீண்டும் எதிரொலிப்போம்
மக்கள் புரட்சியால்
மண்பிடிக்க வந்தவனை
மண்டியிட வைப்போம்''
''தமிழ் ஈழமதில் சுதந்திரமாய்
தலை நிமிர்வோம்''
புறப்பட்டு வா தமிழா

*பா.பிரதீபன்*
*செட்டிகுளம்.*

## கல்யாண மாலை

காத்திருந்தாள்
கன்னியவள்
வேதனம் உயர்ந்த
தாலிதனை
வேண்டிய போது
வேண்டிய நகைகளுடன்
வேறானசீதனமும்
வெவ்வேறாய் எதிர்பார்க்க
காத்திருந்த
கன்னியவள் கல்யாணமே
மாலையாகியது

*சுஜாதா*
*ஆவரங்கால்.*

## மலர்ந்து விடு சமாதானமே !

ஓ ! சமாதானமே
உயிர்த்தெழுந்து விடு
இராவணின்
இலங்காபுரியில் !
மரிக்காமல் – நீ
மறு ஜனனம்
எடுத்து விடு
யேசு கிறிஸ்துவாக
பரிவட்டம்–ஒன்று
போட்டு
தர்மத்தை அடைய
அபயம்
கொடுத்துவிடு
கௌதமன் கொண்ட
ஞானமாக !
போதனைகள்
புரிந்து விட–நீ
புதுப் பிரசவமொன்றில்
கருவாகி விடு
நாயகமான
நபிகளாக !

*யாழ்தங்கை*

## வாழ்தலுக்காய்...

மீண்டும் அவர்கள் -எம்
முதுகில் ஏறி
சவாரி விடுவதற்கு
கடிவாளங்களை
பறித் தெடுப்பதற்காய்
கனவு காண்கிறார்கள்.
ஆனால் எம்முடைய
தோள்கள்
வலியனவாகவும்
கரங்கள்
பலமானதாகவும்
இனியும் குனிந்து போகாத
குறீயிடுகளாய்
பிச்சைப்
பாத்திரங்களுடன்–உனது
தலைவாசலுக்கு
வரவில்லை.
தன் மானத்தின்
நிமிர்வுடன்
எங்களின்
அலறல்களுக்கு
மத்தியில்
திருடப்பட்டவைகளை
அப்படியே
திருப்பித் தரும்படி
காலங்கள் தந்த
காயங்களின் பேரால்
பிரகடனம் செய்கின்றோம்.
சல்லிகள் இல்லாமல்
செல்லரித்துப் போன
உங்களின்
சல்லி முட்டிகளை -எம்
இனத்தின் பெயரால்
நிரப்பிக் கொள்வதாயின்
நியாத்தின் நிழலில்
மானத்தின்
பாதங்கள் வழியே -எம்
இனத்தின் வாழ்தலுக்காய்
மீண்டும்
போர்ப் பிரகடனம்
செய்வோம்
விடியல் ஒன்றின்
பிரசவிப்பிற்காய்!

*முகிலா.*

## வெண்புறாவுக்கு ஓர் மடல்

நீ !
அவர்களின் ஆயுதம்.
எங்களின் உயிர்.
உன்னை
நேசிப்பவர்கள் நாங்கள்.
உழைக்கும் வர்க்கம் அவர்கள்
உன் பெயரால்
எம்மை தாலாட்டும்
புத்தி ஜீவிகள் அவர்கள்.
ஏமாளிகள் நாங்கள்
ஏமாந்து கொண்டே
இருக்கிறோம்.
நாலு கால் சதிரை
ஒரு முறைதான் தேவை.
ஒன்பது பரம்பரைக்கு
சேமித்துக் கொள்கிறார்கள்.
அவர்களின்
இலக்கு சரியென்று
நினைக்கிறேன்.
அது தான் உன்னை துரத்தும்
முயற்சிகள் நடக்கிறது !
சமாதான தேவதையே...
எங்கள் உயிரே... !
உன்னுடல் தானே
நாங்கள்– உயிரே
எங்களை விட்டுப் பிரிந்திடாதே !

*தமிழ்ப்பிரியன்.*
*வடசெக்கோட்டை.*

## ஏன் ? ? ?

பிரளயங்கள் கொந்தளித்துவெடிக்கின்றன.
பாசத்தோடும் நேசத்தோடும் பலர் அதன் வழியே
போகின்றனர்–நானோ
தனிமையில் நின்று
பார்த்துக்கொண்டிருக்கிறேன்.
என்னை இப்போ கூப்பிடமாட்டார்களாம்.
ஏன் என்கிறீர்களா?
என் கையில் பேனா இருப்பதால்!

*சாமினி மேத்தா.*

## என்றென்றும்..

தூங்க மறக்கா
இரவுகள் கூட
ஒரு நாள்
தூக்கத்தை
அடையலாம்.
வீச மறக்கா
தென்றல் கூட
ஒரு நாள்
வீசுவதை நிறுத்தலாம்.
ஆனால்...
உன் மீது
நான் கொண்ட
நேசம் மட்டும்
என்றும் என்றும்
என்றுமே...!

*நிலா,*
*கொழும்பு.*

## துரோகி

நேற்றுவரை
தலையாட்டி
கல்லறைகளை
உருவாக்கி
இன்று...
தெருநாயாக
அலைகிறாய்
யாரையாவது
மீண்டும் குதறி
செம்மணிகளை
உருவாக்கி
உயிர் வாழத்துடிக்கும்
உன்னைப் போன்ற
ஈனப்பிறவிகள்
ஒழிக்கப்படும்வரை
தமிழன்னை
உறங்காதிருப்பாள்.

*பா.திவாகரன்*
*மாத்தளை*

## கணவனுக்குக் கடிதம்

கால் இருந்தால் தான்நடக்கலாம்.
கையிருந்தால் தான்அணைக்கலாம்.
குழந்தையிருந்தால் தான்
மழலை கேட்கலாம்.
வாலிருந்தால் தான்
நாயும் வாலை ஆட்டலாம்.
அன்புக்கணவரே
பாவம் நீங்கள்.
இதயமேயில்லாதிருக்கும்
உங்களை எப்படி என்னை
காதலிக்கச் சொல்ல முடியும்?

*எஸ்.உதயச் செல்வன்,*
*நீர்கொழும்பு.*

## உறவுகள்

உறவுகளினால்
மரணித்துப்போன
என் உணர்வுகள்–இன்றும்
உயிர் வாழ்வதும் –ஏனோ
சொந்தங்களினால். களித்திருப்பேன்
என்று எண்ணிய என் இதயம்.
கண்ணீர் சிந்தும்
என்று நானறியேன்
உங்கள் இம்சைகளை
மறப்பதற்காய்
என் விழிகளை
மூடினேன்– அங்கேயும்
உங்கள் இம்சைகளே

*எல்.சுசி,*
*ஆனைவிழுந்தான்*

## வாடகை இருப்பு

அகிலம் இறைவனது.
மாளிகை - அதில்
மனிதனது இருப்பு.
வாடகை இருப்புக்குள்ளும்
தேடல்களும், மோதல்களும்
குறைந்த பாடில்லை !
வருத்தங்கள் தரும்
வன்முறைகள்
திருத்தங்கள்
உருவாகத் தடைபோடுது...!
வனத்தில் வாழ்கின்ற
விலங்கினம் கூட
இரைகளைமட்டும் தேடும்
தேசத்தில் வாழ்கின்ற
நம்மினம்
நம்மை இரையாக்குது!
சனநாயகம் பாடி -சிலர்
பண நாயகமாகின்றார்!
பரிதாப
அரசியல் கண்டு -எம்
கண்களும்
நீர் வீழ்ச்சியானது.!

*சேரன் சிவலிங்கம்*

## உன்னை நான்...

என் மனதில்
வாணவேடிக்கைகளின்
ஜாலம்... ஆயிரம்
மத்தாப்புக்களின்
வெளிச்சம்...
இதயத்தின் படபடப்பு...
துடிப்பு...
என் கண்களில்
மின்னலின் வெளிச்சம்...
உறுதிப்படுத்துகின்றன
இவை.. உன்னைத்தான்
காதலிக்கிறேன்
என்பதை!
ஆம் அன்பே,
காதலிக்கிறேன்
உனை நான்.

*என்.சுந்தராராஜன்*
*கிழக்குப்*
*பல்கலைக்கழகம்.*

யாழ்ப்பாணம்

# ஹக்கீமுக்கு மற்றொரு சவால் இ.தொ.காவின் முஸ்லிம் பிரிவு

இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்திகளாகத் திகழ்கின்ற பிரதான சிறுபான்மைக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையே முறுகல் நிலை உருவாகி வருகிறது.

இந்த இரு கட்சிகளிடையே கடந்த பொதுத் தேர்தலின்போது ஆரம்பமான முறுகல், இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. தற்போது இரு கட்சி முக்கியஸ்தர்களும் பொது மேடைகள், மற்றும் செய்தி ஊடகங்கள் வாயிலாக பகிரங்கமாகவே ஏச்சுப்பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இலங்கையின் பிரபல்யமிக்க முன்னணி சிரேஷ்ட சட்டத்தரணியும், இங்கிலாந்துக்கான இலங்கைத் தூதுவருமான பாயிஸ் முஸ்தபாவின் புதல்வரான சட்டத்தரணி பைஸர் முஸ்தபாவின் அரசியல் பிரவேசமே முஸ்லிம் காங்கிரஸுக்கும் தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையே பகைமை ஏற்படக்காரணமாயிற்று.

இப்பகைமை நீடிக்குமா? அல்லது நிவர்த்தியடையுமா? என்பதை இப்போதைக்குச் சொல்ல முடியாது. இருகட்சிகளினதும் தலைமைகள் இப்பிரச்சினையை அணுகும் முறைகளிலேயே அவற்றின் எதிர்கால உறவு தங்கியிருக்கிறது.




### அஷ்ரப்–தொண்டமான் உறவு

முஸ்லிம் காங்கிரஸினதும், தொழிலாளர் காங்கிரஸினதும் ஸ்தாபகத் தலைவர்களான எம்.எச்.எம்.அஷ்ரப், எஸ்.தொண்டமான் ஆகியோர், தமக்கிடையேயான உறவை காலத்துக்குக் காலம் பலப்படுத்தியே வந்திருக்கின்றனர். அவர்கள் இருவரும் தங்களது அறிவு – ஆற்றல் – அநுபவம் – ராஜதந்திரம் போன்றவற்றைப் பகிர்ந்து கொண்டு, அவற்றைத் தத்தம் சமூகங்களின் உயர்ச்சிக்காகவும். எழுச்சிக்காகவும் கண்டு பயன்படுத்திக் கொண்டனர்.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஆட்சியில் அமர்த்தி, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பங்காளிக் கட்சிகளாகத் திகழ்ந்த முஸ்லிம்காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் ஊடாக வடக்கு – கிழக்கு முஸ்லிம்களினதும், மலையகத் தமிழர்களினதும் உரிமைகளையும், சமூக, பொருளாதார அபிவிருத்திகளையும் அடைந்து கொள்வதில் மறைந்த தலைவர்களான எம்.எச்.எம். அஷ்ரப், எஸ்.தொண்டமான் ஆகியஇருவரும் ஒன்றிணைந்து – முனைப்புடன் செயற்பட்டு வந்தனர்.

அதேவேளை, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னோடியாக, வடக்கு – கிழக்கு நிர்வாகத்தை பத்து வருடங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் அமரர் தொண்டமான் முன்வைத்து – வலியுறுத்தியபோது, மர்ஹூம் அஷ்ரப், வடக்கு – கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு நிலையைக் கருத்திற் கொண்டு, அமரர் தொண்டமானுடன் முரண்பட்டார்.

ஆனால், அப்பிரச்சினையை அவர்கள் இருவரும் உடனடியாகவே பேசித்தீர்த்துக் கொண்டனர். இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாயினும், இடைக்காலத் தீர்வாயினும் அது வடக்கு – கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை உள்ளடக்கியதாகவே அமையும் எனவும், அதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் தான் பேச்சு நடத்துவார் எனவும் அமரர். தொண்டமான், மர்ஹூம் அஷ்ரபிடம் உறுதி அளித்தார்.

அதேபோன்று, மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக, தான் பக்கபலமாக இருப்பார் என மர்ஹூம் அஷ்ரப் உறுதியளித்தார். பொதுவாக வடக்கு – கிழக்கு முஸ்லிம்களினதும், மலையகத் தமிழர்களினதும் உரிமைகள் மற்றும் தேவைகளை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு அஷ்ரப் – தொண்டமான் ஒப்பந்தம் ஒன்றினூடாக அவர்கள் கைச்சாத்திட்டனர்.

சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களான அவ்விருவரும் புரிந்துணர்வுடன் கூட்டிணைந்து செயற்பட்டதனாலேயே சந்திரிகா அரசை ஆட்டிப்படைக்க முடிந்தது. சிறுபான்மையினரின் தேவைகளை உரிமையோடு கேட்டுப்பெற முடிந்தது.

### புதிய தலைமைகளின் சுயநலம்

எனினும், பெருந் தலைவர்களின் மறைவுக்குப் பின்னர், அரியாசனங்களில் அமர்ந்து கொண்ட புதிய தலைவர்களான ரவூப் ஹக்கீமும், ஆறுமுகன் தொண்டமானும் குறுகிய அரசியல் லாபங்களை அடைந்து கொள்வதிலேயே முனைப்புக் காட்டி வருகின்றனர்.

அதனாலேயே பெருந் தலைவர்களால் இணைக்கப்பட்ட இ.தொ.கா – மு.கா. உறவில் இன்று பாதிப்பேற்பட்டு – ஒருவரையொருவர் சீண்டும் நிலைக்குச் சென்றிருக்கிறது. அதனால் சிறுபான்மைச் சமூகங்கள் பலிக்கடாவாகும் நிலை தோன்றியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் இ.தொ.கா. சார்பில், கண்டி மாவட்டத்தில் ஐ.தே.கா.வின் யானைச் சின்னத்தில் சட்டத்தரணி பைஸர் முஸ்தபா போட்டியிடவைக்கப்பட்டார். இதனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது சொந்த மாவட்டத்தில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது.

### ஹக்கீமின் பலவீனம்

– அஸ்லம் எஸ்.மௌலானா –

பைஸர் முஸ்தபாவுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான டிக்கட் வழங்கப்படுவதைத் தடுப்பதற்கு ரவூப் ஹக்கீம், ஐ.தே.க.தலைமையிடம் மண்டியிட்டு, மேற்கொண்ட பிரயத்தனங்கள் எதுவும் வெற்றியளிக்கவில்லை.

இ.தொ.கா.விடமும் ரவூப் ஹக்கீம் கேட்டுப் பார்த்தார் – பைஸர் முஸ்தபாவின் தந்தையார் பாயிஸ் முஸ்தபாவிடமும் அவர் கோரிக்கை விடுத்தார். ஆனால், ஹக்கீமுக்கு சாதகமான முடிவு கிடைக்கவில்லை. அதனால் அவர் அம்பாறை மாவட்டத்திற்குச் சென்று போட்டியிட்டார்.

ரவூப் ஹக்கீமின் இம்முயற்சிகள் அவரது அரசியல் பலவீனத்தையே வெளிக்காட்டியுள்ளது. ஒன்று, அவர் தனது சொந்தக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸில் கண்டியில் போட்டியிட்டு தனது பலத்தை நிரூபித்துக் காட்டியிருக்கலாம். மற்றது, ஏற்கனவே தீர்மானித்தபடி ஐ.தே.க.வின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு, வெற்றியீட்டியிருக்கலாம். அதன் மூலம் பைஸர் முஸ்தபாவை தனக்குப் பின்னே தள்ளிவிட்டு – தோற்கடித்திருக்கலாம்.

இவற்றில் ஒன்றையேனும் செய்வதற்குத் துணியாத ஹக்கீம், பைஸரைத் தேர்தலில் நிறுத்தக் கூடாது என அடம்பிடித்தமை ஜனநாயக ரீதியில் ஏற்கத்தக்கவிடயமல்ல. எவர் – எதில் போட்டியிட்டாலென்ன, தனக்கு கண்டி மாவட்டத்தில் மக்கள் செல்வாக்கு இருக்குமானால், அதனை அவர் நிரூபித்துக்காட்டியிருக்கவேண்டும்.

### பைஸர் முஸ்தபா இன்னொரு மயோன் முஸ்தபா!

பொதுவாக ரவூப் ஹக்கீம், தனக்கு அல்லது முஸ்லிம் காங்கிரஸுக்கு சவால் எனக் கருதுவோரை தேர்தலில் போட்டியிட விடாது தடுப்பதையே தனது பலமாக நினைத்து தேர்தல் வியூகம் வகுப்பதை வழமையாக்கி வருகின்றார்.

அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க.எம்.பி மயோன் முஸ்தபாவை, ஐ.தே.க.வில் போட்டியிடுவதிலிருந்து இரண்டு பொதுத் தேர்தல்களில் தடுத்து – வெற்றி கண்டவர் ரவூப் ஹக்கீம். அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்துவேறு எவரும் – குறிப்பாக மயோன் முஸ்தபா – அமைச்சராக நியமிக்கப்படக்கூடாது என்பதிலும் பிடிவாதமாக இருந்து – அதனையும் சாதித்துக் காட்டினார்.

இவ்வாறே, பைஸர் முஸ்தபாவின் விடயத்திலும் ஹக்கீம் செயற்பட முனைந்து முட்டி மோதி – மூக்குடைபட்டார். தனது பலவீனத்துக்கு மற்ற அரசியல்வாதிகளை பலிக்கடாவாக்குவதும், அவர்களது அரசியல் உரிமைகளைப் பறிக்க முற்படுவதும் தனித்துவ அரசியலுக்கு ஆரோக்கியமானதா என்பதை ரவூப் ஹக்கீம் புரிந்து கொள்ளாதவரை கட்சிக்குள்ளேயும், வெளியேயும் அரசியல் நெருக்கடிகளும் பகைமையுணர்வுகளும் மேலோங்கவே செய்யும்.

அதேபோன்று, முஸ்லிம் காங்கிரஸிலிருந்து சிரேஷ்ட உறுப்பினர்களையும், தகுதியானவர்களையும் திட்டமிட்டு ஓரங்கட்டச் செய்வதற்கு ஹக்கீமின் பலவீனப்பயமே காரணமாக அமைந்திருக்கிறது எனலாம்.

### இ.தொ.கா. முஸ்லிம் பிரிவு

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் ஐ.தே.க.வின் யானைச் சின்னத்தில் முஸ்லிம்காங்கிரஸ் வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்த ரவூப் ஹக்கீம், இ.தொ.கா. சார்பில் யானைச் சின்னத்தில் முஸ்லிம் வேட்பாளர்களை போட்டிக்கு நிறுத்த வேண்டாம் என்று கோரினார். எனினும், அவரது கோரிக்கையை ஐ.தே.க. கவனத்தில் எடுக்கவில்லை.

இப்போது தேர்தல் முடிந்து விட்டகையோடு இ.தொ.காவில் பைஸர் முஸ்தபா எம்.பி.தலைமையில் முஸ்லிம் பிரிவு ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது முஸ்லிம் காங்கிரஸுக்கு – அதிலும் விசேடமாக தலைவர் ஹக்கீமுக்கு – பெரும் சவாலாக உருவெடுக்கப்போகிறது என்பதில் சந்தேகமில்லை.

இதனால் ஐ.தே.க.வின் கூட்டுக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸுக்கும் இ.தொ.காவுக்குமிடையே முரண்பாடு வலுப்பெற்று வருகிறது. சிங்களத் தேசியக்கட்சிகளான ஐ.தே.க., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. போன்றவற்றில் முஸ்லிம் அரசியல்வாதிகளும், முஸ்லிம் பிரிவுகளும் இருக்க முடியுமானால் ஏன் இ.தொ.கா.வில் மாத்திரம் அவ்வாறு இருக்க முடியாது எனக் கேள்வி எழுப்பப்படுகிறது.

எனினும், அவ்விடயம் இரு சமூகத்தினரிடையேயான உறவைப் பலமடையச் செய்ய வேண்டுமேயொழிய – சிதைவடையச் செய்யக்கூடாது என்பதில் கவனமாக இருந்து கொள்ள வேண்டும். அரசியல் வாதிகளின் தனிப்பட்ட சுயலாபங்களுக்காக மக்களை இரையாக்கி விடக்கூடாது.

### ஹக்கீமுக்கு சவால்

முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்குப் பக்க பலமாகவும், மறைந்த தலைவர் அஷ்ரஃவுக்கு அரசியல் சட்ட நுணுக்கங்கள் தொடர்பில் அறிவூட்டியவருமான பாயிஸ் முஸ்தபாவே ரவூப் ஹக்கீமுக்கு முஸ்லிம் காங்கிரஸின் ஏக தலைவர் பதவியைப் பெற்றுக்கொடுத்தவர்.

இணைத்தலைமைத்துவப் பிரச்சினையின்போது சமரசப்பேச்சுக்களில் ஈடுபட்டு, பேரியல் அஷ்ரபை இணைத் தலைவர் பதவியிலிருந்து ஒதுங்கச் செய்து, ஹக்கீமிடம் தேசியத் தலைவர் பதவியை ஒப்படைக்க வழி செய்தவர் இந்தப் பாயிஸ் முஸ்தபாதான்.

ஆனால், அவரது புதல்வர் பைஸர் முஸ்தபாவை முஸ்லிம்காங்கிரஸில் சேர்க்கும் முயற்சியில் தலைவர் ஹக்கீம் ஈடுபடவில்லை. அதனால், பைஸர் முஸ்தபா இ.தொ.கா. மூலம் அரசியலுக்குள் பிரவேசித்து – அதன் உப தலைவராகி – நாடாளுமன்ற உறுப்பினராகி – முஸ்லிம் பிரிவுக்குத் தலைவராகி – ரவூப் ஹக்கீமுக்கே சவாலாக மாறிவிட்டார்.

பேரியல் அஷ்ரப், மயோன் முஸ்தபா, சேகு இஸ்ஸதீன், ஹிஸ்புல்லாஹ், அதாவுல்லாஹ் ஆகியோர் தன்னை மேவி விடுவார்கள் என அஞ்சி அவர்களைக் கட்சிக்குள் உள்வாங்குவதை தலைவர் ஹக்கீம் எவ்வாறு தவிர்த்துக் கொண்டாரோ அது போலவே பைஸர் முஸ்தபாவையும் கட்சியில் சேர்க்கப் பின்வாங்கி விட்டார்.




அதன் பலாபலன்களை தலைவர் ரவூப் ஹக்கீம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

பேரியல் அஷ்ரபின் நுஆ, நஸீர் அஹமதின் துஆ, மயோன் முஸ்தபாவின் புதிய கட்சி, அதாவுல்லாவின் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் வரிசையில், பைஸர் முஸ்தபாவின் இ.தொ.கா. முஸ்லிம் பிரிவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு சவாலாக வந்து விட்டது எனலாம்.


## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்.



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, கால தாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூல ரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு - 11. Tel: 2384645.



படுத்த நிலை யில் காணப்படு கின்றனர். யார் இவர்கள், ஏன் ஓர் அறையில் இவ்வளவு பேரும் இருக்கின்றார்கள் என்ற கேள்விக்கு சிறுவினாடிகளுக்குப்பின்னர் விடை கிடைக்கிறது.

அந்த அறையில் இருப்பவர்கள் தமது சிறுநீரகத்தை விற்பதற்காக காத்திருப்பவர்கள். இவர்கள் எப்படி இங்கு வந்தார்கள் தமக்கு சிறுநீரகம் கொடுத்த நபரைப் பார்க்க விரும்பி அவருடைய சொந்த ஊருக்குச் செல்கிறார். சிறுநீரகத்தைப் பெற்றுக் கொண்ட டெனிஸ் நபர் தனது நன்றியை சிறுநீரகம் விற்றவருக்குக் கூறுகிறார். ''நீங்கள் ஒரு சிறுநீரகத்தோடு இருக்கிறீர்களே உங்களுக்கு கஷ்டமாக இல்லையா?'' என வினவுகிறார்.

சிறுநீரகத்தைக் கொடுத்தவரின் முகத்தில் தான் ஒரு சிறுநீரகத்தைக்கொடுத்து விட்டோமே என்ற சோகம் தெரியவில்லை. அதற்குப் பதிலாக தனக்கு 15 குரோனர்கள் மட்டில் கிடைத்ததாகவும், அதில் தான் ஒரு சிறிய கடை போட்டுள்ளதாகவும், மிகுதிப் பணத்தில் ஒரு பெரிய பவுண் சங்கிலியும், மணிக்கூடும் வாங்கி இருப்பதாகவும் கூறுகிறார். இவரின் பதில் சிறுநீரகத்தைப் பெற்றடெனிஸ்காரருக்கு பெரிய ஆச்சரியம் ஏற்பட்டது. அவருக்கு மட்டுமல்ல இதனை சிறுநீரகத்தைப் பேரம் பேசுபவர்கள், சிறுநீரகங்களை விற்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு சிறுநீரகம் மலிவான பொருளாகப் போய்விட்டது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சிறுநீரக விற்பனையில் மோசடிகள் நடைபெறுகின்றன. பெரும்பாலும் வருமானம் இல்லாத ஏழைகளே பணத்துக்காக தமது சிறுநீரகத்தை விற்கிறார்கள். புரோக்கர்களினால் இவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

இந்த மோசடிகளில் சில சந்தர்ப்பங்களில் வைத்தியர்களும் உடந்தை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் சிறுநீரகம் ஒரு வியாபாரமாக மாறிவிட்டது. ஆனால், இந்த வியாபாரத்தில் நஷ்டம் அடைபவர்கள் ஏழைகள் என்பது தான் வேதனை தரும் விடயம்.

***

கே.ஆர்.எஸ்

# விலை பேசப்படும் சிறுநீரகம்

ஐரோப்பாவில் சிறுநீரகத்துக்கு பெரிய சந்தையே உருவாகிவிட்டது. சிறுநீரகத்தின் தொழில்பாட்டை இழந்த மக்களின் தொகை அதிகரித்துக்கொண்டே போகின்றது. எனவே புதிய சிறுநீரகத்தை பெறுவதற்கான வேட்டையை பலரும் தொடங்கிவிட்டார்கள்.

சில வாரங்களுக்கு முன்னர் பரபரப்பாக டென்மார்க் ஊடகங்களில் பேசப்பட்ட விடயம் சிறுநீரக விற்பனை சம்பந்தமானது.

டென்மார்க்கில் புதிய சிறுநீரகம் தேவைப்பட்ட ஒரு நோயாளி இன்ரர்நெட் ஊடாக பாகிஸ்தானில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் சிறுநீரகம் வாங்கலாம் என்பதைத் தெரிந்து கொள்கிறார்.


தனது மனைவியைக் கூட்டிக்கொண்டு பாகிஸ்தான் செல்கிறார். பாகிஸ்தான் நகரங்களில் ஒன்றான லாகூரில் உள்ள தனியார் வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்கிறார்.

இதனை அடுத்து அந்த தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றார். மறைமுகமான கமராவினால் பிடிக்கப்பட்ட படம் ஒன்று அங்கு வைத்து அவருக்குக் காட்டப்படுகிறது. அந்தப்படத்தில், இதே வைத்தியசாலையின் இன்னொருபகுதியில் இருபதுவரையிலான சாதாரண மனிதர்கள் என்பது ஒரு புறமிருக்க, இவர்களின் சிறுநீரகத்தை பேரம் பேசுபவர்கள் இந்த வைத்திய சாலையில் கடமை புரிந்தவர்களாக இருப்பதும் காட்டப்படுகின்றது. ஒவ்வொருவரும் தலா 10,000 குரோனரில் இருந்து 15,000 குரோனர் வரை தமது சிறுநீரகத்தை விற்பதற்கு உடன்படுகின்றனர்.

டெனிஸ் நோயாளி தனது புதிய சிறுநீரகத்தை சத்திரசிகிச்சை மூலம் பெற்றுக்கொள்கின்றார். சிறந்த வைத்தியர்களால் சத்திர சிகிச்சை ஒரு பிழையும் இல்லாமல் நல்ல முறையில் முடிகிறது. டெனிஸ் நோயாளிக்கு கிட்டத்தட்ட 100, 000 குரோனர்கள் செலவாகின்றது.

புதிய சிறுநீரகத்தைப் பெற்றுக்கொண்ட டெனிஸ் நோயாளி சில காலங்களின் பின்பு அறிந்த அனைவரும் வியப்படைந்தனர். தனது சொந்த பொருளாதார நலனுக்காக அந்த நபர் சிறுநீரகத்தை விற்றதை அறிந்து கொள்ள முடிந்தது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சிறுநீரகங்கள் விற்பது இன்று சாதாரணமாகிவிட்டது. இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே இருப்பவர்களே!



# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 12-07-2004, 18-07-2004**

**பொ. சந்திரன்**

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சூரியன் சனி |
| | | | செவ் புதன் |
| | | | குரு |
| | | கேது | |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | ஆயிலியம் | புதன் |
| சுக்கிரன் | மிருகசிரிடம் | செவ் |
| புதன் | ஆயிலியம் | புதன் |
| சூரியன் | புனர்பூசம் | குரு |
| குரு | பூரம் | சுக்கிரன் |
| சனி | திருவாதிரை | புனர்பூசம் |

ஆனி 28முதல் ஆனி 03 வரை

சந்திரன் மிதுனம் முதல் கடகம் வரை

**மேடம் : அச்சுவினி, பரணி ; கார்த்திகை 1.**

ராசிநாதன் நான்காம் வீட்டில் நீசமாக இருப்பது குறை. ஆயினும் புதனின் நட்சத்திர சார்த்தில் இருப்பது ஆறுதல் உண்டு. ராசியில் ராகு இருப்பதும் மோசமான நிலைதான். எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (2,7) உரிய சுக்கிரன் இரண்டில் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. வெளியாரின் தலையீடு இருக்கக் கூடும். பத்துக்குரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ராசியைக் குரு பார்ப்பது விசேஷம். எல்லாவித தோசங்களையும் நிவர்த்தி செய்யும். குருவின் இருப்பும் மிக நல்ல பலனைச் செய்யும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

ராசிக்குரிய சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பது மிகவும் நல்ல பலனைச் செய்யும். மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராசிக்கு இருபுறமும் கெட்ட கிரகங்கள் இருப்பது மன அமைதியைப் பாதிக்கும். (2,5) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார்கள். நாலுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். சூரியன் இரண்டாம் வீட்டில் நல்ல பலனைக் கொடுக்க மாட்டார். (7,12) உரிய செவ்வாய் மூன்றில் நீசமாக இருப்பது கூடாது. ஆனால் மூன்றில் செவ்வாய் வலியவன் நல்ல பலனைக் கொடுப்பார். திருமணப் பேச்சு தட்டுத்தடுமாறி நிறைவேறும். 10க்குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது சிறப்பானது. புதன் இரண்டில் நல்ல பலனைக் கொடுப்பான். மேலும் தன் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல பலனைத் தரும். வீடு, வாகனம் லாபம் தரும். கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்புண்டு. ராசியில் சூரியன்,சனி இருப்பதும் நல்ல பலனைத் தராது. அவசரம் புத்தியைக் கெடுக்கும். மன அமைதி இருக்காது. ராகு, கேதுவுக்குள் எல்லாக்கிரகமும் அடங்குவதும் கூடாது. ராசிக்கு இருபுறமும் சுக்கிரனும், புதனும் இருப்பது ஒரு ஆறுதல் உண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் மேடம் முதல் கடகம் வரை சஞ்சரிப்பது அதாவது 10ஆம் வீடு வரை சஞ்சரிப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். 12ஆம் வீட்டைத்தவிர ராசியில் புதன், செவ்வாய் இரண்டும் ராசியில் நன்மை செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகும். இரண்டுக்குரிய சூரியன் 12இல் இருப்பது கூடாது. இருப்பினும் இரண்டில் குரு இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்கள் விசுவாசியாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. (7,8) உரிய சனி 12ஆம் வீட்டில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். இருப்பினும் இரண்டில் குரு இருப்பது நல்ல பலனைக் கொடுக்கலாம். 10க்குரிய செவ்வாய் ராசியில் நீசமாவதால் தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்புண்டு.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 11இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது விசேஷமானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ஆனால் ராசியில் குரு இருப்பது மன அமைதியைப் பாதிக்கும். சில பல தடைகளையும் கொடுக்கக்கூடும். (2,11) உரிய புதன் 12இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துககுக்கூடாது. நண்பர்களால் செலவு வர இடமுண்டு. (4,9) உரிய செவ்வாய் 12இல் நீசமாவதால் பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பழைய கடன் தீரும். எதிரிகள் நண்பர்களாவர். 10இல் சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11இல் இருப்பது விசேஷமானது. மேலும் தன் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய குரு 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் சண்டை, சச்சரவு வர வாய்ப்புண்டு. இரண்டில் கேது இருப்பதும் ஒரு காரணம். மேலும் 4ஆம், 7ஆம் வீடுகளையும் குருவையும் சனி பார்ப்பது மேலும் தீய பலனைக் கொடுக்கும். 9இல் சுக்கிரனும், 11இல் புதனுமிருப்பதால் ஓர் அளவு ஆறுதல் உண்டு. பிரார்த்தனையும் ஆறுதல் தரும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிநாதன் சுக்கிரன் தனது பிறிதொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராசியில் கேது இருப்பது சரியில்லை. மன அமைதி பாதிக்கலாம். (2,7) உரிய செவ்வாய் 10இல் நீசமாக இருப்பது கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. வெளியாரின் தலையீடுகள் இருக்கலாம். (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் 9ஆம் வீடும் சனிக்கு உகந்ததல்ல. அதே நேரம் ஆகடாதாதும் அல்ல. வீடு, வாகனம் பெரிதாக லாபம் தராது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திகரமானதாக இருக்கும். 10இல் நீசச் செவ்வாயும், புதனும் இரண்டு பேரும் 10இல் நன்மை செய்யாதபடியால் தொழில்துறையில் பெரிதாக லாபம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 9இல் நீசமாக இருப்பதும் செவ்வாய் புதனின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் 10இல் குரு மத்திம பலனைச் செய்யும். கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய சுக்கிரன் 7இல் ஆட்சியாக இருப்பதால் சுக்கிரன் 7இல் பெரிதாக வேலை செய்ய மாட்டார். அதாவது 7க்கு சுக்கிரன் நல்லவனல்ல. இருப்பினும் திருமண வாய்ப்பு உண்டு. பத்துக்குரிய குரு 8இல் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ஆனால் இருப்பிடம் சரியில்லாவிடினும் சுக்கிரன் ராசியைப்பார்ப்பது நல்லது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9இல் இருப்பது விசேஷமானது. மேலும் சுக்கிரனின் சாரத்தில் இருப்பது சுக்கிரன் உண்மையில் குருவுக்கு பகையான கிரகம். ஆகவே நட்சத்திர சாரம் இல்லாவிடினும் இருப்பு விசேஷமானதால் எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் 7ஆம் இடத்துக்கு சனி நல்லவனில்லாதபடியால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன் 8இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. 7இல் சனி, சூரியன் இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. வெளியாரின் தலையீட்டால் பிரச்சினை வர வாய்ப்புண்டு. ராசியைக்குரு பார்ப்பதால் ஆறுதல் உண்டு.

**மகரம்: உத்தரடாம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் சாரத்தை விட்டு குருவின் சாரத்தில் சஞ்சரிப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 7இல் நீசமாக இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் செலவு உண்டு. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. 7இல் செவ்வாய், புதன் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். மேலும் குரு 8இல் மறைவதாலும் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 6இல் உள்ள சுக்கிரனும்பிரயோசனம் இல்லை. 10இல் கேது இருப்பினும் பத்துக்குரிய சுக்கிரன் 5ஆம் வீட்டில் ஆட்சியாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி (5)ஐந்தில் இருப்பதால் அதை நற்கச்சனி என்பர். மேலும் ராகுவின்சாரத்தை விட்டு குருவின் சாரத்துக்கு வந்தாலும் நன்மை செய்யாது. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். நித்திரை குறையலாம். (2,11) உரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். பெற்றோருக்கு நல்லது. பத்துக்குரிய செவ்வாய் 6இல் நீசமாவதால் 6இல் செவ்வாய் பலன் செய்யும். ஆனால் நீசமானதால் பலன் செய்யாது. தொழில் துறையில் எதிர்பார்த்தலாபம் இருக்காது. ஆனால் ராசியைக்குரு பார்ப்பது விசேஷம். சகல தோசங்களையும் நிவர்த்தி செய்யும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**


(1,10) உரிய குரு 6இல் இருப்பது நல்லதல்ல. மேலும் சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் கூடாது. குருவுக்கு சுக்கிரன் பகைக்கிரகம். எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில் துறையில் பின்னடைவு இருக்கலாம். (2,9) உரிய செவ்வாய் (5)ஐந்தில் நீசமாவதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய புதன் (5)ஐந்தில் நல்ல பலனைக் கொடுக்கும். வீடு, வாகனம் லாபத்தைக்கொடுக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7ஆம் இடம் வெற்றிடமாக இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்கும். குருவையும், 10ஆம் இடத்தையும், ராசியையும் சனி பார்ப்பதால் தீய பலனையே கொடுக்கும். பிரார்த்தனையால் தீய பலனைக் குறைக்கலாம்.

# பித்தன் பதில்கள்

*அ.ரேகா, முத்தரிப்புத்துறை.*

**கேள்வி:** – சில பெண்கள் வீட்டு வேலை முடிந்த பின்னர் அக்கம் பக்கம் வீடுகளுக்குச் சென்று அரட்டை அடிக்கிறார்களே! அப்படி என்னதான் அவர்கள் கதைக்கிறார்கள் பித்தா?

**பதில்:** – வீட்டு வேலை முடிந்த பின்னர்



ஓவர்டைமில் செய்யிற கோள்மூட்டு வேலைக் கதையது.

*பா.வவி, ஆனைவிழுந்தான்.*

**கேள்வி:**– பித்தா.. உங்களைக் கவர்ந்த உலக அதிசயம் எது?

**பதில்:**– என் தாய் தான். அதிசயமென்ன உலகில் அபூர்வமானவரே அவர்தான்.

*மு.பிரதீப், பூநகரி.*

**கேள்வி:**– நான் ஒரு கலைஞன். எனக்கு எவ்வளவோ திறமைகள் இருந்தும் அது சரியான முறையில் வெளிப்படுவதில்லை. இதற்கு காரணம் அதிஷ்டம் இல்லாதவன் நான் என்பது என் தலைவிதியோ என்னவோ... இதற்கு உங்கள் பதில் என்ன?

**பதில்:**–அதிஷ்டம்தலைவிதியில்இல்லை. நம் செயலில் உள்ளது. இதை நான் சொல்லவில்லை. இங்கர்சால் என்ற அறிஞன் சொன்னது. எனவே நண்பா... ஒரு காரியம் உம்மால் முடியவில்லை என்றால் நீர் சரியாக முயற்சிக்கவில்லை என்பதே அர்த்தம். அதனால் முயற்சி செய்யும் என்னால் முடியும் என்ற நம்பிக்கையோடு.

*அ.அரவிந், மன்னார்.*

**கேள்வி:**– நடிகர் விக்ரம் முதன் முதலாக நடித்த படம் என்ன பித்தா?

**பதில்:**– 'என் காதல் கண்மணி' இப்படம் வெளியாகவில்லை.

*வீ.ரஞ்சனா, நவபுரம்.*


**கேள்வி:**– டியர் பித்தா என்னைத் திருமணம் முடித்த பின்னரே என் கணவர் லட்சாதிபதியானார். ஆனால், அவர் அதை ஒத்துக் கொள்கிறார் இல்லையே! ஏன் பித்தா?

**பதில்:**– அவர் எப்படி ஒத்துக் கொள்வார்? உம்மை திருமணம் முடிக்கமுன் உமது கணவன் கோடிஷ்வரனாக அல்லவா இருந்திருப்பார்.

*ச.இன்சிரா, சுன்னாகம்.*

**கேள்வி:**– அண்ணா.... பித்தா எனக்காக ஒரு ஜோக் பிளீஸ்?

**பதில்:**–அவள் ஊர்சுற்றுவதை பழக்கமாக கொண்டிருந்தாள். ஆயினும் டோர்ச்லைட் இல்லாவிட்டால் அவள் எங்கும் செல்வதில்லை. ஒரு நாள் டோர்ச் லைட்டைக் காணவில்லை. பற்றறிகளைக் கழற்றி விட்டு டோர்ச்சை நெருப்புக்குள் போட்டுக் கொண்டிருந்தான் மகன்.



''ஏன்டா என் டோர்ச்சை நெருப்புக்குள் போட்டாய்'' என்று உரக்கக்கத்தினாள் தாய். மகன் சொன்னான், ''பற்றறி இல்லாமல் டோர்ச்லைட் எரியாது'' என்று அப்பா சொன்னார். அது தான் உண்மையோ பொய்யோ... எனப் பார்க்கிறேன்'' என்று.

*எஸ்.கேமிலன், மல்லாகம்.*

**கேள்வி:**– அண்ணா பித்து, நடிகர் விக்ரமின் வெற்றிக்கு முயற்சியா? அதிஷ்டமா? காரணம்?

**பதில்:**– ''சேது'' படத்துக்குமுன் முயற்சி பின் அதிஷ்டம்.

*த.அஜிதா, மல்லாகம்.*

**கேள்வி:**– தண்ணீரில் கண்டம் இருக்குதென்று பலர் சொல்லுகிறார்களே? அது உண்மையா பித்தா?

**பதில்:**– யார் சொன்னது? கண்டத்தில்தான் தண்ணீரே இருக்கு.

*சி.ப்ரியா, ஆரையம்பதி*

**கேள்வி:**– பித்தா...! கூடுதலான சினிமாப் படங்களில் முடிவில் பலர் தற்கொலை செய்ய முயற்சிக்கிறார்களே! அது ஏன்?

**பதில்:**– தற்கொலை செய்ய முயற்சிப்பதாக நீர் யாரைச் சொல்கிறீர்? நஷ்டப்படும் தயாரிப்பாளர்களையா?

*வே.கனகு, வந்தாறுமூலை.*

**கேள்வி:**– பித்தா... நான் திருமணத்துக்கு முன் ஆரோக்கியமாக இருந்தேன்? ஆனால், என்று எனக்கு திருமணம் ஆச்சோ அன்றிலிருந்தே என் கழுத்து எலும்பு கூட தேய்ந்து போச்சே! ஏன் பித்தா?

**பதில்:**– மனைவி சொல்லுறதுக் கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டு இருந்தால் கழுத்து எலும்பு தேயாமல் என்ன செய்யும்.

*வி.விஜிமயூரா, யாழ்.பல்கலைக்கழகம்.*

**கேள்வி:**– பிளீஸ் பித்தா! நீங்கள் எழுதிய கவிதை ஏதாவது ஒன்று?

**பதில்:**– ஏய்! பெண்ணே
உன் கடிகார
ஓட்டத்தை நிறுத்திவிடு.
ஏனெனில்
அதன்முன் கூட
எனைக்குத்திக்கொண்டே
சுழலுதடி.



*ஆ.சகாயமேரி, கிளிநொச்சி.*

**கேள்வி:** – இன்றைய வளர்ச்சி அடைந்து வரும் நவீன யுகத்தில் பெண்கள் அதிகமாக எதிர்பார்ப்பது திருமணத்தையா? அல்லது தொழிலையா?

**பதில்:**– திருமணத்தை எதிர்பார்ப்பவர்கள் திருமணத்துக்குப் பின்னாக தொழிலை எதிர்பார்க்கிறார்கள். தொழிலை எதிர் பார்ப்பவர்கள் தொழிலுக்குப் பின்னாக திருமணத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இதற்கு மாறாக சில பெண்கள் தொழிலோடு சேர்த்து திருமணத்தை எதிர்பார்ப்பதாகவும் கேள்வி.

*பே.தெய்வநாயகி, வேப்பம்குளம்.*

கேள்வி:– மகனே பித்தா..! இன்றைய இளைஞர்கள் பெண்களையே பெரிதென எண்ணி அவர்களுக்கு பின்னாலே அலைகின்றார்களே! அவர்களுக்கு நீர் கூறும் அறிவுரை என்ன?

கேள்வி:– இளைஞனே... நீ போகின்ற பாதையில் பெண்ணினை நோக்கும் நேரம். மண்ணினை நோக்கு. வருமதியில்லாத வெகுமதியும் அங்குகிடைக்கும்.

*தி.சவரி, கொழும்பு.*

**கேள்வி:**– பித்தா நான் பிச்சை எடுத்து சீவிக்கும் ஒரு படித்த ஏழை. சில இடங்களில் நான் பிச்சை எடுக்கும் போது பலர் கோட், சூட்டுன் வருகிறார்கள். அவர்களிடம் நான் கை நீட்டி ஏதும் கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள் ''கை, கால் நல்லா இருக்கிற உனக்கு பிச்சை எடுக்க வெட்கம் இல்லையா?'' என்று இதற்கு நான் என்ன பதில் சொல்வேன் பித்தா?

**பதில்:**– அவர்கள் அப்படிச் சொன்னால் நீங்கள் இப்படிச் சொல்லுங்கள். ''கோட், சூட் போட்டு இருக்கிறீங்களே! காசு இல்லை என்று சொல்ல உங்களுக்கு வெட்கமில்லையா'' என்று.

*தெ.துர்காயினி, யா/ம.மகா.வி.*



**கேள்வி:**– பித்து... நான் எனது தந்தையிடம் சில நேரங்களில் செலவுக்காக கொஞ்சம் பணம் கேட்டால் நான் கேட்ட தொகையில் பாதியையே அவர் எனக்குத் தருகிறார் அது ஏன் பித்தா?

**பதில்:**– நீர் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்.

*எஸ்.தயா, கோண்டாவில்.*

**கேள்வி:**– டியர் பித்தா...! பெண்களின் மனதை அறியக்கூடிய கருவி ஏதும் உண்டா?

**பதில்:**– நல்ல காலம் அப்படி ஒன்று இல்லாமல் போயிட்டுது. தற்சமயம் அது இருந்திருந்தால் எத்தனையோ மனைவிமாரை கணவர்கள் விவாகரத்துச் செய்ய வேண்டி வந்திருக்கும்.

*ப.ஜானுஷன், புங்குடுதீவு.*

**கேள்வி:**– அன்பின் பித்தா ஒரு மாணவனாக இருக்கும் எனக்கு இப்போது எது? முக்கியம் காதலா? கல்வியா? எனக்கு நல்ல பதில் ஒன்று சொல்லுங்கள் பித்தா?

**பதில்:**– தம்பி காதல்தான் முக்கியம்
ஒரு ''செல்வி (Mis) மேல் அல்ல.... உன் கல்வி மேல்.

*இ.சீனிவாஸ். யாழ்ப்பாணம்.*



**கேள்வி:**– பித்தா நான் எனது பக்கத்து ஊரிலுள்ள பெண்ணைக் காதலித்தேன். தற்போது அந்தப் பெண்ணை அவ்வூரில் காணவில்லை. அத்தோடு அடிக்கடி என் கனவில் வரும் அப்பெண் இப்போது கனவில் கூட வருவதில்லை. எனக்கு இதை நினைக்கும் பொழுது கவலையாக இருக்கிறது பித்தா?

**பதில்:**– கவலைப்படாதையும் அப்பெண் இனி தன் கணவனோடு உமது கனவில் வருவார்.

*க.சயந்தினி, செல்வபுரம்.*

**கேள்வி:**– பித்தா! தமது பெண்பிள்ளைகளுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை பார்க்கும் பெற்றோர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்**–



ஊரில் எப்படித்தான் நல்லவனாக ஒருவன் இருந்தாலும் அவனை மகள் விரும்பிவிட்டால். அதற்காக சில்லெடுக்கும் பெரும்பாலான பெற்றோர் வெளிநாட்டு மாப்பிள்ளை என்றவுடன் அவன் எப்படிப்பட்டவன்? எத்தனை வயசுக்குரியவன்? என்ன தோற்றமுடையவன்? என் பனவற்றையெல்லாம் கவனத்தில் எடுப்பதில்லை. வெளிநாடு என்ற ஒன்றையே முதன்மைப்படுத்தி தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையை குட்டிச்சுவர் ஆக்கிவிடுகிறார்கள். அதாவது மாப்பிள்ளைகளை பார்க்குமிடத்திலுள்ள ''மா'' பிழைகளை (பெரியதவறுகளை) பார்க்கத்தவறிவிடுகிறார்கள்.

*வி.தீபன், நிலாவெளி.*

கேள்வி:– டியர் பித்துக்குட்டி நாம் செய்யும் தவறுகளை திருத்திக்கொண்டால் நாம் அழகாக ஆவோம் என என் நண்பன் சொல்கிறான். அது உண்மையா?

**பதில்:**– அது உண்மையே... நாம் செய்யும் தவறுகளை இனம் கண்டு கொஞ்சம் கொஞ்சமாக நாமே கட்டளை இட்டுக் கொண்டு அந்தத் தவறுகளை செய்யாதவாறு இருக்கப் பழகிக் கொண்டால் உள்ளம் அமைதியால் நிறையும். அதுவே அழகைக் கொடுக்கும்.

*ரி.றஞ்சித், கந்தரோடை.*

**கேள்வி:**– Dear பித்தா காதல் பற்றிய உமது கருத்து என்ன?

**பதில்:**– காதல் அழிவில்லாதது.
அவர் இல்லாது போனால் இவர், இவர் இல்லாது போனால் அவர்என்று காதலித்துக் கொண்டிருந்தால் காதல் எப்படி அழியும்.

*சி.வாசு, பேராதனை.*



**கேள்வி:**– நப்பாசை என்றால் என்ன பித்தா?

**பதில்:**– நூறு ரூபாய் கடன் கேட்டு கொடுப்பவர் எடுக்கும் பொழுது ஆயிரம் ரூபாய் எடுத்தால் அதற்கு ஆசைப் படுகிறோமே அதற்குப் பெயர்தான் நப்பாசை.

*மி.தெட்சணாமூர்த்தி, தொண்டமனாறு.*

**கேள்வி:**– பித்து ஆன்மீகம் என்பது?

**பதில்:**– உணர்ச்சி பூர்வமாக ஆகிவிடும் மக்களின் மனங்களைச் சமனப்படுத்துவது தான் ஆன்மீகம் என்பது.

*சோ.ரஜீ, உடுபிட்டி.*

கேள்வி:– சொல்லிச் சிரிக்க ஒரு ஜோக் சொல்லுங்களேன் பித்தா?

**பதில்:**–

ஒருவர்: எட்டாம் வகுப்பு தமிழ் புக் ''Book'' ஒன்று கொடுங்கள்.

மற்றொருவர்: எட்டாம் வகுப்பு தமிழ் புத்தம் இல்லையே

ஒருவர்: அப்படியென்றால் நாலாம் வகுப்பு தமிழ் தமிழ் புக் ''Book'' ரெண்டு தாங்களேன்.

*ச.மாலா – கொச்சிக்கடை*

கேள்வி:– பித்தா! என்னை ஒருவன் விடாது பின் தொடர்கின்றான். அது ஏன் பித்தா?

பதில்:– உமது பாதுகாப்பை உறுதிப்படுத்தி நீர் பக்குவமாக வெளிநாடு பாசலாகும் வரை பாதுகாக்கத்தான்.

*ஜான்சி சிவசம்பு, முழங்காவில்*

**கேள்வி:**– என் அன்பின் பித்தா காதலிக்கும் முன் அக்கா தங்கை பற்றி நினைக்காத ஆண்கள் காதலித்தபின் அக்கா தங்கையைக் காரணம் காட்டி மாயமாக மறைவது ஏன்?

**பதில்:**– அப்பா ஆயிடுவோம் என்ற பயத்தினாலோ என்னவோ.



## பித்தனின் கேள்வி

கேள்வி:– பெண்களை பீடித்திருப்பது பணமா? குணமா?

## வாசகர் பதில்கள்

*க.ஜீவன் – ஹட்டன்.*

குணமே – நற்குணமுடைய பல பெண்கள் தங்கள் பெற்றோரோடு கணவரோடு, பிள்ளைகளோடு, மாமன், மாமியாரோடு ஒற்றுமையாக வாழ்கிறார்களே.

*சி.தர்மராஜ் – தேக்கவத்தை.*

பண ஆசை பிடித்ததன் காரணத்தால் மாப்பிள்ளை எவ்வளவு வயது கூடினாலும் அது பற்றிக் கவலைப்படாது வெளிநாட்டு மாப்பிள்ளை வேணுமென்று அடம்பிடிக்கிறார்கள்.

*வி.வளர்மதி – விசுவமடு.*

சில பெண்களிடம் நற்குணத்தின் பண்பை பார்க்கிறோம். ஆனால், பல பெண்களிடம் பணத்திமிரின் பந்தாவைப் பார்க்கிறோம். பித்தா... சிலரைவிட பலர் என்பதே அதிகம். இதிலிருந்து என்ன தெரிகிறது. பணமே என்பது புரிகிறதா?

*வ.விஜிமயூரா – யாழ்.பல்கலைக்கழகம்.*

பணமே! பல பெண்கள் ஏழையாக இருக்கும் பொழுது நற்குண முடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பணமுள்ளவர்களாக ஆகும்பொழுது நிலவுக்கே டோர்ச் பிடிக்கிறார்கள்.

*ஜோ.அபிராமி – கொழும்பு.*

குணமே... இதற்கு எடுத்துக்காட்டாக எவ்வளவோ சொல்லலாம். அதில் ஒன்று அன்னை திரேசா.... என் பதில் தவறா பித்தா?

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான –
குறும்பான –
யதார்த்தமான –
பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜூலை 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



கேள்வி:– அன்றையகாலப் பாடல்களிலா அல்லது இன்றைய காலப் பாடல்களிலா ஆபாசம் கலந்துள்ளது?

**பதில்**–இரண்டுகாலகட்டங்களிலும்உண்டு.

அன்றைய காலம்: மடல் வாழை தொடையிருக்க மச்சம் ஒன்று அதிலிருக்க என்பதும் இன்றைகாலம்: தொடவேண்டும் உச்சத்தைவிடவேண்டும் அச்சத்தை. அதிகாலை சேலை சொல்லுமடி மிச்சத்தை என்பதுமே ஆபாசம் தான்.

**இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்பவேண்டிய முகவரி.**

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

அரிசி மூடைகள் அருகில் இருக்கையில் சோறின்றி மடிந்த சோகம் நடந்தது.

சொற்ப வரி ஒன்றுக்குள் உள்ள அற்புதங்களைப் பார்த்தீர்களா? தேசத்தின் விடியலுக்காக தேகம் வருத்தி தியாகமான அன்னை பூபதிக்கு அக்கா கஸ்தூரி தன் தேகம் வருத்தி தேசம் காத்த காலத்தில் படைத்த ஒரு படையல் அது.

# விலை போகாத் தலைவன் வழிவந்த கலை இலக்கியவாதி கப்டன் கஸ்தூரி




தமிழ்த் தேசத் தலைவன் பிரபாகரனின் உயரிய நெறிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் உலகெங்கும் உலவாத அற்புதங்கள், அர்ப்பணிப்புகள், வீரம், திறமை என நடந்துகொண்டிருக்கும் காலத்தில் அவரின் கீழ் உருவான கலை, இலக்கிய புரட்சிகளும் புத்துயிர் பெற்று புத்திலக்கியக் கலை, இலக்கியம் ஒன்று தமிழ் மண்ணில் உலாவரக் காண்கின்றோம்.

இவற்றுள் ஒன்று தான் 1992 ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட "கஸ்தூரியின் ஆக்கங்கள்" என்ற நூல். இந்த நூலினை வெளியிடும் போது அவர் உயிரோடு இல்லா விட்டாலும் காலங்காலமாக அவளின் கவிதைகள், கதைகள், அவள் உயிர் மூச்சின் உணர்வை உணர்த்திக்கொண்டிருக்கும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

தியாக தீபம் திலீபன் அவர்கள் பன்னிரண்டு நாள் பசி கிடந்ததை பார்த்தும் மடியும் வரை மௌனமாய் நின்ற இந்தியாவுக்கு இவள் ஈட்டி எறிவதைப் பாருங்கள்.

*ராஜீவ் காந்தியே உங்களுக்கோர் தாழ்வான*
*வேண்டுகோள்*
*உங்கள் அகராதியில்*
*அகிம்சையை அழித்து*
*ஆக்கிரமிப்பு என எழுதிக்கொள்ளுங்கள்.*

11-07-1991 ஆம் ஆண்டு ஆனையிறவு பெருந்தளம் மீதான முற்றுகைச் சமரில் வீரச்சாவடைந்த கப்டன் கஸ்தூரி வல்லரசுகளைப் பற்றி வடிவாகத்தான் புரிந்து வைத்திருக்கிறாள் போலும் அதனால்தான்

*நீங்கள் நிலவில் வரலாறு படைக்க*
*மண்ணை மானபங்கம் செய்பவர்கள்*
*என்றும் உங்கள் தலையீடுகளால்*
*தரைமட்டமாகிப்போன தேசங்களே அதிகம்.*

என்று எழுதினாள்.

தீர்க்கதரிசனமும் சிறிதும் பொய்கலவா செம்மையான உண்மைகளையும் கொண்ட இவளின் நூலில் 05 சிறுகதைகள் அனைவரும் படிக்க வேண்டியவை. "நிர்ப்பந்தங்கள்" என்ற கதையில் சமூகத்தில் பெண்ணொருவரின் பாடுகளைப் படம் போல அவள் ஆக்கியுள்ளாள். வர்ணனைகள் ஏதுமற்ற சிறுகதைகளைப் படிக்கும் போது எந்தச் சிறுகதை எழுத்தாளனும் இது வல்லவோ சிறுகதை என்பான்.

"களத்திலிருந்து ஒரு கடிதம்" என்ற கடிதத்தில் தம்பியின் மண் பற்றற்ற தன்மையை இவள் கண்டிக்கும் விதம் கண்ணீர் வரவைக்கும்.

*நகைச்சுவைக் கலப்போடு உள்ளதை*
*உள்ளபடி "நல்லூரும் நம்மவரும்" கவியில்*
*வள்ளிகளும் தெய்வானைகளும்*
*வடிவாக வந்ததனால்*
*கந்தக் கடவுள் அவர்கள்*
*கண்களுக்குப் படவில்லை*

என்கிறாள்.

தியாக தீபம் தீலிபன் அவர்களுக்குப் பின் யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக பணியாற்றிய மேஜர் பிரசாத் நினைவாக எழுதிய கவி உண்மையானதை உணருங்கள்.

ஒரு நாள்
உன் போன்றோரின் இறப்புக்களின் பின்னால் இந்தியப்படை வெளியேறும்.

இவரது நூலுக்கு முன்னுரை எழுதிய பாரதி அவர்களும் விடுதலைப் போரில் மேஜர் பாரதியாக விதையானாள். "காதோடு சொல்லிவிடு" என்ற பெயரில் இவரது ஆக்கங்கள் நூலாக உள்ளது.

கஸ்தூரி அக்கா. இவள் எழுதியவை வெறும் கவிதைகள் அல்ல. தீர்க்கதரிசனச் சிதறல்களும் தான். 31-07-1965 இல் ஊரெழுவில் அவதரித்த வசந்தி கணேசன் (கப்டன் கஸ்தூரி)

*திலீபனண்ணா*
*நான் நினைக்கவேயில்லை*
*உயிரோடு உங்களுக்கு*
*என் கையால் கவி எழுதி*

எனத் தொடரும் கவிதை அவள் உயிரோடு இல்லாததை அறிந்து எத்தனை துடிதுடிக்கும். அன்னையாய் எம்மை அரவணைக்கும் தலைவன் இவள் போன்றோர் எண்ணத்தை ஈடேற்றுவான். இலக்கிய உலகில் எழுச்சி மிகு சுழற்சியாய் இந்த கஸ்தூரியின் ஆக்கங்கள் கண்சிமிட்டும். அவளின் "மறைந்தவர்களே நீங்கள் மடலர்கள் அல்லர்" என்ற கவிதையில் இடம்பெறும் இந்தச் சிறு உரசல் தசாப்தம் கடந்த பின் இப்போது எரிவது புரிகிறதா?

அப்போது
வல்லரசு வழிவிடும்
இலங்கை அரசு
இரண்டாகப் பிரியும்
தமிழர்க் கொரு
தனியரசு உருவாகும்
இது கஸ்தூரிக்கா...
கவிதை எழுதிய
கவிதையொன்று — என்
கவிதைக்குக் கருப்பொருளானது
உருப்பெறும் ஈழத்தில்
அவள்
எழுத்தும் ஈட்டியானது.

யோ. புரட்சி



கண்டி மலையக் கலை கலாசார சங்கத்தின் ஆதரவில் புஸ்பதான சமித்தி மண்டபத்தில் "இரத்னதீப" விருது வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் இடம் பெற்றது. தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள்கலந்துகொண்டு விருதுகளைப் பெறுவதை படத்தில் காணலாம். (க203)

# அரச நாடக விழாவுக்கு சுற்றில் 27 நாடகங்கள்

2004 ஆம் ஆண்டுக்கான அரச நாடக விழாவுக்காக முதன் சுற்றின் பொருட்டு அனுப்பப்பட்ட 71 முழுநீள நாடகங்களுள் இரண்டாவது சுற்றுக்கென 33 நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 3 நாடகங்கள் தயாரிக்கப்படவில்லை என நெறியாளர்கள் அறிவித்திருந்தமையாலும், மேலும் 3 நாடகங்களின் நெறியாளர்கள் நாடகவிழா சம்பந்தமான கலந்துரையாடலில் கலந்து கொள்ளாமையாலும் அவை போட்டியினின்றும் விலக்கப்பட்டுள்ளன.

மீதி 27 நாடகங்களும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிவரை மேடையேற்றப்பட உள்ளன,

இரவு 7 மணிக்கு கொழும்பு ஜோன்டி சில்வா அரங்கில் இந்த நாடகங்கள் மேடையேற்றப்படும்.

இந்த நாடக விழா சிங்கள நாடகக்குழுவினால் நடத்தப்படுகின்றது என்பதும், இரண்டு வருடங்களாக காணாமற்போயுள்ள தமிழ் நாடகக்குழு 2003, 2004 வருடங்களுக்காக தமிழ் நாடக விழாவினை நடத்த வில்லை என்பதும் விசேடமாக இங்க கவனிக்கத்தக்கதாகும்.

வல்லைபூரான்



வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயதர்மகர்த்தா பொன். வல்லிபுரம் அவர்களின் ஏற்பாட்டில் சாதனைக் கலைஞர் சோக்கல்லோ சண்முகத்தின் வில்லிசை நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். (படப்பிடிப்பு எம் உதயகுமார்)

# இசையும் அதன் சிறப்பும்

பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டான ஒலியினை த்வனி என்கிறோம். அந்த த்வனியின் கிளையாகத் தோன்றியதே நாதம். செவிக்கு இனிய ஓசையே நாதம். இறைவனே அந்த நாத வடிவமாக இருக்கின்றான் என்கின்றன புராணங்கள்.

அதனால்தான் இறைவன் திருப்புகழை நாத விந்துகலாதி நமோ நமோ என்று அருணகிரி சுவாமிகள் பாடியுள்ளார். நாதத்துகள்கள் என்பவை தான் ஸ்வரங்கள். ஸ்வரங்கள் என்பது தனக்கு தானே சுயமாக ரஞ்சகமாக ஒலிக்கப்படுவது. இசை சங்கீதம் என்று வழங்கப்படுகின்ற நாத சேர்க்கை இனிய ஓசையின் சுருக்கமே நல்ல; பாடலாகும். (சம்+கீதம்) சம் என்றால் நல்ல கீதம் என்றால் பாடல் என்று பொருள்படும்.

இசை ஒவ்வொருநாட்டின் பாரம்பரியத்தினையும் பண்பாட்டினையும் வெளிப்படுத்தும் கலை அம்சமாகும். இசை தெய்வீகமானது. இந்த இசையினை தெய்வங்களே இசைப்பது போல் புராண இதிகாசங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளதால் இசையின் சிறப்பு மேலும் அதிகமாகிறது.

சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், ஸரஸ்வதி தேவியாரின் கையில் வீணையும் இருப்பதில் கருத்துள்ளது.


தெய்வீகமான இசையை பாடியும் கேட்டும் இன்புறுவோமாக.

திருமதி மீனா சர்மா



துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் சமீபத்தில் ஆங்கில தின விழா நடைபெற்றது. மாணவர்கள் ஆங்கிலப் பாடல் இசைப்பதையும், இன ஐக்கியத்தை வலியுறுத்தும் நாடகம் ஒன்றை மேடையேற்றுவதையும் படங்களில் காணலாம். (258)

# என் மனைவிக்கு மட்டும்!



விவசாயி ஒருவரின் மனைவி இறந்து விட்டார். அவள் மீது உயிரையே வைத்திருந்தான் விவசாயி. எனவே, தன்னுடைய மனைவி மேல்உலகிலும் சென்று சிறப்பாகவாழ வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதனால், பௌத்த துறவி ஒருவரைத் தன் வீட்டிற்கு வரவழைத்தான் விவசாயி.

அவரை வணங்கிய அவன், "இறந்து போன என் மனைவி மேல் உலகில் நன்மைகள் பெற சில மந்திரங்களைச் சொல்லுங்கள்" என்று வேண்டினான்.

அவரும் நீண்ட நேரம் மந்திரங்களைச் சொல்லி முடித்தார்.

"துறவியாரே! தாங்கள் சொன்ன மந்திரங்களால் என் மனைவி நன்மை பெறுவாளா?" என்றார் துறவி.

"உன் மனைவி மட்டும் அல்ல. இங்கிருந்து மேல் உலகம் சென்ற எல்லாரும் இந்த மந்திரங்களால் பயன் பெறுவர்" என்றார்.

எல்லாரும் பயன் பெறுவார்களா? சாமர்த்தியமே போதாத. என் மனைவியை அடுத்துள்ள மற்றவர்கள் ஏமாற்றி எல்லா நன்மைகளையும் பெற்றுக் கொள்வார்கள். என் மனைவிக்கு எதுவுமே கிடைத்து இருக்காது. அதனால் என் மனைவிக்காக மட்டும் இன்னொரு முறை எல்லா மந்திரங்களையும் சொல்லுங்கள்." என்று வேண்டினான்.

"அன்பனே! பௌத்த துறவி எல்லாரும் நலமாக இருக்க வேண்டும் என்றுதான் வேண்டுவார்; நினைப்பார், எல்லோருக்கும் பொதுவாகத்தான் ஆசி வழங்குவார்" என்றார் துறவி.

"துறவியாரே! எல்லாருக்கும் வேண்டுவது அருமையான கொள்கைதான். ஆனால், அதில் விதி விலக்கு இருக்க வேண்டும். எங்கள் பக்கத்து வீட்டுக்காரன் அண்மையில் இறந்து போனான். அவன் கொடியவன். எங்களுக்கு மிகுந்த தொல்லை தந்தவன். தங்கள் மந்திரங்களோ வாழ்த்துக்களோ அவனுக்குச் சென்று சேரக் கூடாது; அவன் மேலே போய் கஷ்டப்படணும்" என்று உறுதியுடன் சொன்னான் விவசாயி.

என்ன செய்வார் துறவி. அங்கிருந்து நடையைக் கட்டினார்.

சிறுவர்களே நீங்களும் எப்போதுமே எல்லோருக்கும் நன்மை கிடைக்கும் செயல்களிலேயே ஈடுபட வேண்டும். கடவுள் நமக்கு மழை, வெய்யில் போன்றவற்றைத் தருகின்றார். ஆனால் அவற்றை நல்லவர் மட்டும் அடையலாம் கெட்டவர் அடையக் கூடாது என்ற பாகுபாடு காட்டுவதில்லை. எனவே நீங்களும் அதுபோல் நடந்து கொள்ள வேண்டும்.

# விஞ்ஞான விளக்கம்

1) காசித்தும்பை தாவரம் பல நிறங்களையுடைய பூக்களை தோற்றுவிக்கின்றது.

இத் தாவரம் அயன் மகரந்த சேர்க்கையை மேற்கொள்ள வென வண்டுகள், பூச்சிகள் போன்றவற்றை கவருவதற்காக பல நிறங்களைக் கொண்ட பூக்களை தோற்றுவிக்கின்றது.

2) சாடிகளில் வளர்க்கப்படும் தாவரங்களை இரவு வேளைகளில் இருட்டிலுள்ளே வைத்தல் கூடாது.

பகல் வேளைகளில் தாவரங்கள் ஒளித்தொகுப்பைச் செய்வதனால் ஒளித்தொகுப்பின் பக்க விளைவாக ஒட்சிசன் வெளியேற்றப்படுகிறது. ஆனால் இரவு வேளைகளில் தாவரங்கள் சுவாசிக்கின்றன. இதன் விளைவாக காபனீர்ரொட்சைட் வெளியேற்றப் படுகின்றது. எனவே இதைத் தவிர்ப்பதற்காக தாவரங்கள் இரவு வேளைகளில் வெளியே வைக்கப்படுகின்றது.

3) பனிக்கட்டியை நீரில் போடும் போது மிதக்கின்றது. ஆனால் பனிக்கட்டியை அற்க கோலில் போடும் போது அது அமிழ்கிறது.

பனிக்கட்டி நீரிலும் அடர்த்தி குறைந்தது அதனால் நீரில் மிதக்கின்றது. அற்க கோல் பனிக்கட்டியிலும் அடர்த்தி குறைந்தது. அதனால் பனிக்கட்டி அற்க கோலில் அமிழ்கின்றது.

4) அடுப்பை ஊதுவதால் எரிகின்றது. மெழுகு திரியை ஊதுவதால் அது அணைகின்றது.

அடுப்புக்கு ஒட்சிசன் கிடைப்பதினால் அது எரிகின்றது. ஆனால் மெழுகு திரியை ஊதும் போது அதனுடன் தொடர்புற்றிருக்கும் மெழுகு ஆவி தொடர்பை இழக்கின்றது. இதனால் அணைந்து விடுகின்றது.

5) சவர்க்காரம் தயாரிக்க அலுமினியப் பாத்திரங்களை பயன்படுத்தக் கூடாது.

சவர்க்கார தயாரிப்பின் போது எரிசோடா பயன்படுத்தப்படுகின்றது. இது ஒரு வன்காரமாகும். இதனால் அலுமினியப் பாத்திரம் அரிப்புக்கு உள்ளாக்கப்படும். எனவே சவர்க்கார தயாரிப்பின் போது அலுமினியப்பாத்திரம் பயன்படுத்தக் கூடாது.

*பொன்னம்பலம்—சயிந்தினி*
*யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.*

# பொது அறிவுத் துளிகள்

1) சூரிய குடும்பம் என்றால் என்ன ?

சூரியனும் அதனைச் சுற்றியுள்ள கோள்களும், துணைக் கோள்களும் சேர்ந்த சமூகம்.

2) வளி மண்டலத்தின் முக்கிய கூறு என்ன ?

ஐதரசன்

3) சந்திரனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் யாது?

238,460 மைல்

4) அதிக துணைக் கோள்கள் உள்ள கோள் யாது ? வியாழன்

5) சூரியக் குடும்பத்திலுள்ள கோள்களின் இடம் அதன் பாதைகள் மாறாமல் இருப்பதற்கு காரணம்?

சீரிய ஈர்ப்புத்தன்மை

6) சூரியனுக்கு தூரத்திலுள்ள கோள் எது ? வியாழன்

7) மிகச் சிறிய கோள் எது ? புதன்

8) சூரியனுக்கு அண்மையிலுள்ள கோள் எது ? புதன்

*ம.தர்ஷிகா — தரம்—9B*
*யாழ்/ஸ் கந்தவரோதயாக்கல்லூரி*

# சிறார்களின் கைவண்ணம்



ஜே. கௌசிகா
தரம் 5
மட்டக்குளி



அ. சரண்யா
தரம் 9
மு/ மகா வித்தியா.



மதன்



ஆர். ரவிசங்கர்
சென். பீற்றஸ் கல்லூரி




சி. சாயிதா
யா/வட
இந்து மகளிர்
கல்லூரி



ஆர். ஆர். சங்கர்
கொழும்பு

# சிறார்களின் சிந்தனைக்கு



அருகே முதலாவதாக நிறம் தீட்டப்பட்ட படத்தைப் பாருங்கள். அப் படமே நிறம் தீட்டப் படாத நிலையில் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு காணப் படுகின்றது. அவற்றை ஒழுங்கு படுத்தி நிறந்தீட்டி பாருங்கள்.

நீங்கள் நிறந் தீட்டிய படத்தை ஒரு தபால் அட்டையில் ஒட்டி எமது முகவரிக்கு அனுப்பினால் நாம் அதில் சிறந்த வர்ணம் தீட்டப்பட்ட படத்தில் மூன்றினை சிறுவர் பகுதியில் பிரசுரிப்போம்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"சிறுவர் பகுதி"
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி
மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# நூல்களின் ஆசிரியர்கள்

| | |
|---|---|
| சிலப்பதிகாரம் | - இளங்கோ அடிகள் |
| பெரிய புராணம் | - சேக்கிழார் |
| திருவாசகம் | - மணிவாசகர் |
| குறிஞ்சிப்பாட்டு | - கபிலர் |
| நன்னூல் | - பவனந்தி முனிவர் |
| வெற்றிவேற்கை | - அதிவீரமா |

*கௌசிக்கா.*
*தரம் - 5 கல்கிசை*
*கி. ச. பா*

# பழமொழிகள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

மந்திரம் கால் மதி முக்கால்.

பல்லுப் போனால் சொல்லுப் போச்சு

புலி பசித்தாலும் புல் தின்னாது.

*கோகுலராஜ் தரம்—6*
*கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை.*
*வெள்ளவத்தை.*

# காந்தி தாத்தாவின் குறிப்புகள்

மகாத்மா காந்தி கி.பி 1869 ஆம் ஆண்டில் கத்தியவார் பிரதேசத்தில் போர்பந்தர் என்னும் இடத்தில் காபா காந்திக்கு மகனாக பிறந்தார். அவருக்கு மோகன் தாஸ் கரம் சாண்ட் காந்தி எனப் பெயர் சூட்டப்பட்டது.

பிற்காலத்தில் காந்திஜி, பாபுஜி என்ற பெயர்களால் கௌரவமாக அழைக்கப்பட்டார்.

அவரது தந்தை ராஜஸ்தானி நீதி மன்றத்தில் அங்கத்தவராக இருந்ததோடு, ராஜ கோட் அரசியல் அமைச்சராகவும் சேவை புரிந்தார் . அவரது தாயார் உயர்ந்த பண்புகளும், கடவுள் பக்தியும் உடையவராக விளங்கினார்.

மகாத்மா காந்தி "சத்திய சோதனை" எனும் நூலில் தனது வரலாற்றை எழுதியுள்ளார்.

இவரிடம். நேர்மை, சத்தியம், கருணை, எளிமை ஆகிய உயர் பண்புகள் காணப்பட்டன.

ஆகவே

அப் பண்புகளை நாமும் பின்பற்றுவோம்.

*- ஜேம்ஸ் வரதராஜா -*

# × காலை உணவில் ×
# கவனமாய் இருங்கள்!

நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பது எமது ஒவ்வொருவரதும் விருப்பமே. ஆனால், பெரும்பாலும் நாம் ஒவ்வொருவரும் அதற்கேற்றவாறு உணவருந்துகிறோமா என்று கேட்டால் பதில் எவ்வாறு அமையும் என்பது எம் எல்லாருக்குமே தெரியும்.

சமீப காலமாக நடத்தப்பட்ட ஆய்வொன்றில் காலை உணவு எவ்வளவு முக்கியமானது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்து கூறியிருக்கிறார்கள். காலை உணவைத் தவறாமல் சாப்பிடுவோர் விட்டமின் ஏ, டீ மற்றும் இரும்பு, கல்சியம் போன்றவற்றை அதிக அளவில் உண்கிறார்கள். இதனால் ஊட்டச்சத்துக் குறைகளான இரும்புச்சத்து, கல்சியக்குறைவு, எலும்புமெலிதல், களைப்பு, மனச்சோர்வு போன்ற பலவித நோய்களில் இருந்து தப்பித்துக் கொள்கிறார்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.



காலையிலும் மதியமும் சாப்பிடுவதற்கு இடையே குறைந்த நேர இடைவெளியே உள்ளது. இதனால் காலை உணவு கண்டிப்பாக சாப்பிட வேண்டும். இதன் மூலம் எமது ஆற்றலை அதிகரித்துக்கொள்ளலாம். ஆனால் மதியம் சாப்பிடலாம் என்றுவிட்டுவிட்டால் பல் வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும்.

எப்போதுமே இரவில் முன்கூட்டியே சாப்பிட்டு விடுங்கள். வேளை தவறிச் சாப்பிடுதல், போதுமான உறக்கமின்மை, உடற்பயிற்சியின்மை போன்றவற்றால் காலை உணவு தள்ளிப்போகிறது.

காலையில் பசித்திருக்கும் குழந்தை கவனச்சிதறல் எனும் பிரச்சினையால் பாதிக்கப்படுகிறது. இதனால் குழந்தைகள் கட்டாயம் காலை நேரத்தில் ஆரோக்கியமான உணவு உண்ண வேண்டும் என பெற்றோர் வற்புறுத்த வேண்டும். காலையில் குழந்தைகளுக்கு பழங்கள் மற்றும் பால், பாலாடைப் பொருட்கள் கொடுப்பது சிறந்தது. குழந்தைகள் எதை விரும்புகிறார்களோ அதை உணவாகச் செய்து கொடுங்கள்.

பொதுவாக காலை உணவுதான் திருப்தியாக இருக்க வேண்டும் என்றும், மதிய உணவு மிதமாகவும், இரவில் மிகவும் குறைவாகவும் இருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இரவில் பட்டினியாகப் படுத்துக்கொண்டால் மூளைக்குத் தேவையான குளுக்கோஸ் அளவு காலை நேரத்தில் குறைந்திருக்கும். இது தொடர்ந்தால் நினைவாற்றல் குறைந்துவிடும். காலை நேரத்தில் சர்க்கரை நிறைந்த பொருட்களை சாப்பிட்டுவிட்டுப் பாடசாலை செல்லும் குழந்தைகள் பாடத்தில் பிறரை விட சுறுசுறுப்பாக இருப்பதாக அமெரிக்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குளுக்கோஸ் குறைவு, காலையில் சாப்பிடாது இருத்தல் ஆகியவை குழந்தைகளை மிகவும் பாதிப்படையச் செய்துவிடும்.

குழந்தைகளின் நினைவாற்றலில் விட்டமின் பி 6 மற்றும் பி 12 ஆகியவை முக்கிய பங்காற்றுகின்றன. விட்டமின் பி குறையுள்ள குழந்தைகளுக்கு மூளை தொடர்பான பாதிப்புக்கள் குறிப்பாக மனச்சோர்வு, வலிப்பு, நினைவிழப்பு போன்றவை உண்டாவதாகத் தெரிய வந்துள்ளது. விட்டமின் பி 12 சத்து முட்டை மற்றும் பாலில் உள்ளது. விட்டமின் பி 6 முழுத் தானியங்கள், வாழைப்பழம் போன்றவற்றில் உள்ளது. ஆகவே காலை உணவில் கவனமாயிருங்கள். உங்கள் ஆரோக்கியம் உங்களை விட்டு எங்கே போய்விடப்போகிறது...?

# அலுவலகத்தில் நீங்கள் எப்படி...?

அலுவலகத்துப்போகும் பெண்களின் இன்றைய தலையாய பிரச்சினையே நேரமின்மை என்பது தான். குடும்பத் தலைவி என்றால் கணவர், குழந்தைகளின் தேவைகளை கவனித்துவிட்டு, பின்பு தன்னைக் கவனிக்க நேரமில்லாமல் அலுவலகம் செல்வார். இதில் வேதனைக்குரிய விடயம் என்னவெனில் பல பெண்கள் நேரமில்லாத காரணத்தால் காலை உணவைக்கூடச் சாப்பிடாது செல்வதுதான்.

இதனால் பயணக் களைப்புடன் பசியும் சேர்ந்துகொள்வதால் பலவீனத்துடன் தான் காலைப் பணிகளை ஆரம்பிக்க முடியும்.

சில பெண்கள் வீட்டில் இருப்பது போலவே வெளியில் செல்லும் போதும் சாதாரணமாகக் காட்சியளிப்பார்கள். இது அவர்களாக விருப்பப்பட்டு மேற்கொள்வதில்லை.



விலை உயர்வோ, குறைவோ பளீர் தோற்றம் தரும் உடைகளை தேர்ந்தெடுங்கள். இந்த வகையில் நேர்த்தியாக உடையணிந்து அலுவலகம் போய் வருகிற பெண்கள் தங்கள் வேலைகளிலும் சிறந்து விளங்குவதாக நிர்வாகம் கருதும். இதனால் பதவியுயர்வு தேடி வரும். தோற்றம், புன்னகை, ஆடையில் வசீகரம் என்பது வெற்றிக்கான அஸ்திரங்கள்.

அலுவலக சிப்பந்தி வரை அன்பு பாராட்டுங்கள். நேசிப்பதில் எனக்கு உயர்வு தாழ்வில்லை என்கிற அந்த ஒரு குணமே உங்களை உயரத்தில் வைத்துவிடக்கூடும்.

மற்றவர்களிடம் நட்புணர்வுடன் பழகுதல் நல்ல பலனைக் கொடுக்கும். ஐயோ அந்த சிடுமூஞ்சியுடன் யார் பேச முடியும் என்று சக ஊழியர்கள் பயப்படுகின்ற அளவுக்கு உங்கள் நடவடிக்கை அமைந்து விடக் கூடாது.

தவறுகள் நேருவது சகஜம். உங்கள் தவறுக்கு மற்றவர் மீது பழிபோடுவதைத் தவிருங்கள். தவறை ஒப்புக்கொள்கிறவருக்கு நேர்மையானவர் என்ற பெயரும் கிடைக்கும். இந்தக்குணம் வெளிப்படையாகத் தெரியும் பட்சத்தில் அலுவலகம் பொறுப்புகளை நம்பி உங்களிடம் ஒப்படைக்கத் தயங்காது.

விஞ்ஞான வளர்ச்சியில் தொழில்நுட்பம் பெருகிவிட்டது. பேனாவில் எழுதிக்கொண்டிருந்தவர்கள் இப்பொழுது கம்பியூட்டரில் இயங்கும் காலம். இந்த கால மாற்றங்களுக்கு நீங்களும் ஈடுகொடுங்கள்.

இறுதியாக இந்த 3 விடயங்கள் உங்களிடம் இருக்கின்றனவா என்று பாருங்கள்.

*உங்களுக்குக் கீழே வேலை பார்ப்பவர்களுக்கு நீங்கள் ஒரு நல்ல முன்னுதாரணமாய் இருக்கிறீர்களா?

*சக ஊழியர்களுக்குப் பிரச்சினை என்று வரும்போது அவர்கள் விடயத்தில் உங்களை அவர்கள் சுலபமாக அணுகும் அளவுக்கு நீங்கள் மென்மையானவரா?

*அப்படி உங்களிடம் உதவி பெற்றவர்களின் அலுவலகத் தவறுகளுக்காக அவர்களை நீங்கள் உரிமையுடன் கண்டிக்கும் இடத்தில் இருக்கிறீர்களா?

இம் மூன்றிலும் ஓ.கே என்பவர்கள் அலுவலகப் பணியில் ஜொலிக்கலாம். ஒரே சமயத்தில் அலுவலகத்திலும் வீட்டிலும் நல்ல பெயர் வாங்கும் பெண்களால் அலுவலகத்துக்கும் பெருமை. வீட்டுக்கும் பெருமை அல்லவா?

**இவ்வார பொன்மொழி**

பேச்சு வெள்ளி போன்றது.
மௌனம் பொன் போன்றது.

# உங்கள் அழகை மேலும் மெருகூட்ட வேண்டுமா...?

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். முகத்தை வைத்துக்கொண்டே ஒருவரின் வயதைக் கணித்துவிட இயலும். எனவே உங்கள் முகத்தை ஒழுங்காகப் பராமரித்தீர்களானால் உங்கள் உண்மையான வயதைக் கண்டு பிடிக்கவே முடியாமல் போகும்.

முதலில் மேக் அப் ஐ கலைத்துவிட்டு சூடான துணியால் முகத்தைத் துடைக்கவும். கழுத்தை நேராக இருக்குமாறு வைத்துத் தரையில் உட்கார்ந்து கழுத்தைக் கொஞ்சம்—கொஞ்சமாக சாய்க்கவும். அதே போன்று மெதுவாக மூச்சை உள்ளே இழுத்துவிட்டுக் கொண்டு கழுத்தை மேலே உயர்த்தவும். இரு புருவங்களுக்கும் மேலே ஒற்றை விரல்களால் சில நிமிடம் வரை அழுத்திக்கொண்டேயிருந்து சிறிது நேரத்தின் பின் விடவும்.

நாற்காலியில் உட்கார்ந்து இரு தோள்களையும் தளர விடவும். அதே நிலையில் அந்தந்தத் தோள்களின் மேல் வைத்துக் கைகளை சுழற்றிக்கொண்டே கழுத்தை இடமாகவும், வலமாகவும் சாய்க்கவும். இவ்வாறு ஒவ்வொரு புறமும் 10 முறை செய்யவும்.

*முகத் தசைகளுக்கான பயிற்சி*

ஏ எனும் ஒலியை வேகமாக உச்சரிக்கவும். அதே போன்று ஈ, யூ மற்றும் ஓ எனும் ஒலிகளை எழுப்பவும். இப்பொழுது வாயை நன்றாகத் திறந்து உதடுகளை உட்புறம் மடக்கவும். இப்படியே கொஞ்ச நேரம் இருக்கவும். இப் பயிற்சியை 5 முறை செய்யவும். இப்பொழுது உதடுகளை புன்னகைப்பது போல் செய்யவும். இதையும் 5 முறை செய்யவும்.

*கண்களுக்கான பயிற்சி*



களைப்பைப் போக்க அடிக்கடி கண்களைச் சிமிட்டவும். 5 நொடிகளுக்குப்பிறகு சாதாரண நிலைக்கு மாறவும். 10 முறை இவ்வாறு செய்யவும். இப்பொழுது கண்களின் ஓரங்களில் மென்மையாக அழுத்தவும். இதனால் கண்களின் களைப்பு நீங்கி புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

முகத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அஷ்ட கோணலாக்கி மீண்டும் சாதாரண நிலைக்கு மாறவும். இதை 10 முறை செய்யவும். இதனால் உங்கள் முகம் ஒரு புதுப் பொலிவையும், அழகையும் பெறும். இப்பொழுது நெற்றியின் நடுவில், இரு கைகளின் அடிப்புறத்தை வைத்து இலேசாக அழுத்தி மேலும் கீழுமாகப் பார்க்கவும். இதையும் 10 முறை செய்யவும்.

*கன்னங்களுக்கான பயிற்சி*

வாயை சிறிது திறந்து, மேல் உதட்டை இடது புறம் இலேசாகத் தூக்கவும். சில நொடிகளுக்குப்பிறகு மீண்டும் சாதாரண நிலைக்கு மாறவும். இதை 5 முறை வலது புறமும், இடது புறமுமாகச் செய்யவும். இதனால் கன்னச் சருமம் செழிப்புறுவதோடு இளமை மாறா அழகுடன் முகம் காட்சியளிக்கும்.

கண்களைச்சுற்றி சுருக்கங்கள் விழுவதால் விரைவாக வயதாகிவிட்டது போன்ற தோற்றம் ஏற்படும். கீழ்க்கண்ட பயிற்சியின் மூலம் கறுப்பு வளையங்கள் நீங்க வாய்ப்புள்ளது. முதலில் நேராகப் பார்த்து பின்பு கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையைத் தூக்கி மேலே பார்த்து, பிறகு கீழே பார்க்கவும். இதே போன்று வலது புறமும், இடது புறமும் பார்க்கவும்.

விரல்களின் அடிப்புறத்தால் முகம் முழுக்க மெதுவாக அழுத்தினால் முகத்தில் உள்ள தளர்ச்சி நீங்கும்.

என்ன சகோதரிகளே, இப்போதே ஆரம்பித்துவிட்டீர்களா உங்களை அழகுபடுத்தும் முயற்சியை? முயற்சி செய்யுங்கள். முடியாதது என்று என்னதான் இருக்கின்றது?

## பெண்
சசி

## சமையல் குறிப்பு

1 தம்ளர் பச்சை அரிசி, 1 தம்ளர் புழுங்கல் அரிசி, 1ஸ்பூன் வெந்தயம், 2 ஸ்பூன் உழுந்து கலந்து 4 மணி நேரம் ஊற வைத்து, அதனுடன் 1/4 கிலோ பழுத்த தக்காளி, காய்ந்த மிளகாய், உப்பு, பெருங்காயம் சேர்த்து மென்மையாக அரைத்து உடனே வார்த்தால் சூப்பர் சுவையுடன் சிவப்புத் தோசை தயார்!

அடை மா அதிகம் புளித்துவிட்டால் கவலை வேண்டாம். இட்லி தட்டில் இட்லி போல் விட்டு 7 நிமிடம் வேக வைத்து உதிர்த்து, கடுகு, மஞ்சள் பொடி, கடலைப் பருப்பு, உழுத்தம்பருப்பு, வெங்காயம், கருவேப்பிலை தாளித்து, தேவையான அளவு உப்புப் போட அடைகாரப்புட்டு ரெடி.

பிஞ்சு இஞ்சிகளை தோல் நீக்கிச்சுத்தம் செய்து சம அளவுக்குக் கொஞ்சம் குறைத்து வெல்லம் சேர்த்து அரைத்து நெய் விட்டு நன்றாகச் சுருள வதக்கி எடுத்து வைக்கவும். இந்த இஞ்சி இலேகியம் உடம்புக்கு மிகவும் சிறந்தது. ஜீரண சக்தியைப் பெருக்கும். வயிறு மந்தம், உப்புசம் என்று வரும்போது, துளி வாயில் போட்டுக்கொள்ளலாம்.

தோசை நன்றாக மெல்லியதாக வர வேண்டுமென்றால் சிறிதளவு சவ்வரிசி சேர்த்து அரைத்தால் பளபளவென்று சுவையான தோசை வரும்.

# இந்தியாவுக்கும் பரவுகின்றது மேற்கத்தைய கலாசாரம்!

'கேர்ள் பிரண்ட்' என்ற ஹிந்தித் திரைப் படம் சமீபத்தில் வெளியாகி இந்தியா முழுவதுமே அதிர்ச்சி அலைகளை கிளப்பியிருக்கிறது. ஒரு பால் உறவை மையப்படுத்தி எடுக்கப்பட்ட படம் அது.

''இரண்டு பெண்கள் மிகநெருக்கமாக உறவாடுவதாக காட்டப்படுவது எமது கலாசாரத்தையே குழிதோண்டிப் புதைப்பது போல் இருக்கிறது. இப்படிப்பட்ட படங்களை அனுமதிக்க மாட்டோம்'' என்று சொல்லி, மும்பையில் இந்தத் திரைப்படம் வெளியான தியேட்டர்களுக்கு முன்னால் போராட்டம் நடத்துகிறது சிவசேனா கட்சி. ஒரு தியேட்டர் கொளுத்தப்பட்டு விட்டது.

''வளர்ந்த நாடுகளே வெறுக்கும் முறையற்ற உறவை, ஆணும் பெண்ணுமான குடும்ப அமைப்பில் மாறா நம்பிக்கை கொண்ட இந்தியாவில் திணிப்பது எந்தவகையில் நியாயம்?'' என்று கொதிக்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்ஸன்.

இப்படி ஒரு திரைப்படத்துக்கே பெரும் எதிர்ப்பு எழுந்திருக்கும் நிலையில், இரண்டு பெண்கள் கணவன் – மனைவியாகவே வாழ்கிறார்கள். நீதிமன்றம் அவர்களுக்கு சட்டபூர்வமான அனுமதியும் தந்திருக்கிறது. இது ஒன்றும் அமெரிக்காவில் அல்ல. இந்தியாவின் கேரள மாநிலத்தில் தான்.

திருவனந்தபுரம் அருகே வசிக்கும் நந்துவும் ஷீலாவும்தான் அந்த ஜோடி!

''காதலுக்கு கண்ணில்லை என்றுதான் கேட்டிருக்கிறேன். என் பெண்ணுக்கு அறிவே இல்லாமல் போச்சு'' என்று நந்துவின் பெற்றோரும், ''எங்களைப் பார்த்து ஊரே சிரிக்கும்படி பண்ணிவிட்டாள்'' என்று ஷீலாவின் பெற்றோரும் அவமானத்தால் கூனிக் குறுகிப் போயிருக்க, ''அப்படி எதுவும் நாங்கள் தப்பாகச் செய்யவில்லை'' என்று தீர்மானமான குரலில் சொல்கிறது இந்த ஜோடி.

கடந்த ஆண்டு இவர்களின் காதல் வெளியே தெரிந்ததுமே சலசலப்பு எழுந்தது. ஆனால், அதைப்பற்றி எல்லாம் கவலையேபடாமல் போராட, கடைசியில் நீதிமன்றமே இவர்கள் இணைந்து வாழ அனுமதி அளித்துவிட்டது!

அசல் 18 வயதுப் பையன் மாதிரி இருக்கிறார் நந்து. அவருக்கு நேர்மாறு ஷீலா! பெண்மைக்கே உரிய அடக்கம், மென்மை, பய உணர்வோடு இருக்கிறார்.

நந்து முழுக்க முழுக்க ஒரு ஆணைப் போல் பாவனை செய்கிறார். பேச்சிலும் ஒருவேகம், ஆதிக்கம் தெரிகிறது. ''எங்கள் வீட்டில் ஆண் – பெண் வித்தியாசமில்லாமல்தான் எங்களை வளர்த்தாங்க. நான் ஷீலாவை காதலிக்கிற விஷயம் தெரிஞ்சதும் அப்பா கத்தினாங்க. பிடிக்கலை, வீட்டை விட்டு வெளியே வந்துட்டேன். ஆனா, திடுதிப்பென்று ஷீலாவைக் கூட்டிக்கிட்டுப் போவேன் என்று யாரும் நினைச்சுப் பார்க்கல. எங்களோட காதல்ல எந்த தப்பும் இல்லை என்று நம்புகிறோம். அதை இந்த சமூகம் விமர்சனம் பண்ணினா அதைப் பற்றியும் நாங்கள் கவலைப்படுகிறதாய் இல்லை...'' என்று எடுத்த எடுப்பிலேயே ஆவேசமாகப் பேசினார்.



நந்துவுடன் ஷீலா

''சிவனுக்கும், மகா விஷ்ணுவுக்கும் உருவானவர்தானே ஐயப்பன்? அப்படி உருவான கடவுளை கும்பிடுகிற இந்த சமூகம் எங்களை எந்த முகத்தோடு விமர்சனம் பண்ணுது? பகவான் கிருஷ்ணனுக்கும் அர்ஜுனுக்கும்கூட அப்படி ஒரு ஆசை இருந்ததே?'' – என்று வேறு ஒரே போடாய்ப் போடுகிறார்கள்.

''நாங்கள் இரண்டு பேருமே திருப்தியாக இருக்கிறோம். நட்பாக ஒரு சங்கம் ஆரம்பித்திருக்கிறோம். உள்ளம் ஒன்றாவும் உருவம் வேறாவும் இருந்து எங்களை மாதிரி அவஸ்தைப்படுபவர்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறோம்'' என்றார் நந்து.

நந்து பேசுவதையே அமைதியாக பார்த்துக் கொண்டிருந்த ஷீலா, வாய் திறந்தார்..

''நான் படிச்சுக்கிட்டு இருந்த போது, ஒரு கல்யாணத்தில்தான் நந்துவை சந்தித்தேன். முதலில் பார்த்தவுடன் பையன் என்றுதான் நினைத்தேன். அப்புறம்தான் பொண் என்று தெரிஞ்சது. பழகினோம். நல்ல தோழிகளானோம். அடிக்கடி சந்தித்துப் பேசவும், நட்பு காதலா மாறிடுச்சி...'' என்று விவரித்தார்.

''என் வீட்டில் விஷயம் தெரிஞ்சதும் பெரிய அட்டகாசம். என்னை வெளியே துரத்தி விட்டாங்க. கவலையே படலை; எனக்கு தோள் கொடுக்க நந்து இருந்தா'' என்று சொன்னவர் தாங்கள் சந்தித்த போராட்டங்களை அடுக்கினார்.

''முதலில் என் அப்பாதான் பொலிஸில் புகார் கொடுத்தார். இயற்கைக்கு விரோதமான குற்றம் செய்ததாக எம் மீது பொலிஸ் வழக்கு பதிவு செய்தது. ஆனால், வழக்குப் பதிவு செய்ததில் இருந்த தவறைச் சுட்டிக்காட்டி நீதிபதி எங்களை விடுவித்தார்.

அதன் பின்னர் ஊர்க்காரங்களும், எங்கள் வீட்டுக்காரர்களும் சேர்ந்து நந்து போதை மருந்துக்கு அடிமை என்று பொய்ச் செய்தியை பரப்பினாங்கள். கள்ளக் கடத்தலில் எங்களுக்கு பங்கு இருக்கிறது என்று குற்றம் சுமத்தி ஜெயிலில் வைக்கப் பார்த்தார்கள். அப்போதுதான் 'சகயாத்திரிகா' என்று இயக்கம் இருக்கிறது எங்களுக்குத் தெரிந்தது. அதில் உறுப்பினரா இருக்கும் டாக்டர் ஜெயஸ்ரீயும், மைத்திரேயனும் எங்களுக்கு உதவினார்கள். அவர்கள் மட்டும் இல்லாவிடில் நாங்கள் எப்போதோ தற்கொலை செய்திருப்போம்..!'' என்றார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 116

சொற்சிலம்பம் 116 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜூலை 19ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூலை 26ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆவணி 02ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.114க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 116

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 114

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 து | 3 கா | ப் | 4 பு | ■ | 5 ச | 6 கா |
| 7 க | ட் | டை | ■ | 8 த | 9 க | வ | ல் |
| 10 வ | ட | ■ | 11 சி | ன் | ன | ம் | ■ |
| 12 த | ர் | 13 ம | ம் | ■ | வு | ■ | 14 அ |
| ர் | ■ | 15 க | ம | ம | ■ | 16 க | ல |
| ■ | 17 பா | ர | ம் | ■ | 18 மு | ட | ம் |
| 19 ச | க | ம் | ■ | 20 | லா | ■ | ப |
| 21 பை | ல் | ■ | 22 பு | ல | ம் | ப | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 116

**இடமிருந்து வலம்**

1. பொருந்தாத தன்மை. 'அலர்ஜி' என்று கூறுவர்.
2. வானி.
6. கெட்டவன்.
7. பூவுலகு.
9. பங்கு.
11. நஞ்சு
12. திருமணமாகா இளம்பெண்.
13. விழி / கண் திற.
14. இணங்க / பொருந்த.
15. அழுது அரற்று.
16. சிரித்தல் / புன்னகை பூத்தல்.
18. இல்லை.
19. சரஸ்வதி.
21. வெடித்துத் தொல்லை தருவது.
22. கதையில் கதாநாயகனின் எதிரி.

**மேலிருந்து கீழ்**

1. பொறுப்பாக வழங்கு / கையளி.
2. போக்குவரத்துச் சாதனம்.
3. மத்தி / நடுவில் உள்ளது.
4. அன்பு செலுத்துபவன்.
5. அழிவால் வருவது. இது மிக்கவனே பலவான்.
8. ஒரு திசை.
10. தலை தாழ்த்தி / உடல் வளைதல்.
12. உப்பளம் / கோல்.
13. காடும் காடு சார்ந்த இடமும்.
15. சேர்ந்ததால் வருவது.
16. வழங்கு / கொடு.
17. மெல்லிய உலோகப் பட்டை.
18. தாவித்திரியும் சிறிய பிராணி.
20. நீர்த்தேக்கம்.

## சொற்சிலம்பம் - 113 பரிசு பெறுவோர்.

1. சி.லாவண்யா,
21/1, 3ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
2. க.ஜெயபாலன்,
யாழ்/இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
3. ஜே.ஷெரின்,
வாட் இல—3, சாம்பல் தீவு,
திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. எம்.அனோஜ்,
அரசடி,
ஆனைக்கோட்டை.
2. பா.இராஜேஸ்வரி,
18/5, குடியிருப்பு,
வவுனியா.
3. ஹியூபட் செலர்,
மாமாங்கம்,
மட்டக்களப்பு.
4. வின்சன் அன்சலோ,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
5. க.வத்சலா,
வட்டு இந்துக்கல்லூரி,
சித்தன்கேணி.
6. க.தங்கரசி,
இடைக்காடு,
அச்சுவேலி.
7. திருமதி.பி.குமாரலிங்கம்,
கொழும்பு வீதி,
கண்டி.
8. ஆர்.செபஸ்ரினா,
சாம்பல் தீவு,
திருகோணமலை.
9. என்.ஜெயவதனி,
வித்தியாலய வீதி,
திருகோணமலை.
10. சன்ரா விஜயகுமார்,
புதிய கல்முனை வீதி,
மட்டக்களப்பு.

# ஐரோப்பியக் கிண்ணத்தைக் கைப்பற்றியது கிரீஸ்

ஐரோப்பியக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் இறுதியாட்டத்தில் கிரீஸ் 1—0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வீழ்த்தி முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது.




16 முன்னணி அணிகள் பங்கேற்ற ஐரோப்பியக் கால்பந்துத் தொடர் போர்த்துக்கலில் நடந்தது. கடந்த மாதம் 12ஆம் திகதி முதல் நடைபெற்று வந்த இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் முதல்முறையாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியிருந்த அணிகளான போர்த்துக்கலும், கிரீஸும் மோதின. இந்த இறுதியாட்டத்தைக் காண இருநாட்டுப் பிரதமர்களும் மைதானத்திற்கு வந்திருந்தனர்.

போர்த்துக்கல் — கிரீஸ் அணிகள் ஏற்கனவே 'லீக்' ஆட்டத்தில் மோதியிருந்தன. இதில் கிரீஸ் 1—0 என்ற கோல்கணக்கில்வெற்றி பெற்றிருந்தது. 'லீக்' ஆட்டத்தில் ஏற்கனவே கிரீஸ் வென்றிருந்ததால் புத்துணர்ச்சியுடன் அந்த அணி களமிறங்கியது. அதேபோல் போர்த்துக்கல் அணியும் சொந்தமண்ணில் ஆடுவதால் உள்ளூர் ரசிகர்களின் பலத்த ஆதரவுடன் களமிறங்கியது.

பலத்த ஆரவாரத்துடன் ஆரம்பித்த இந்த இறுதியாட்டத்தின் ஆரம்பம் முதலே போர்த்துக்கல் அணியே ஆதிக்கம் செலுத்தி ஆடியது. போர்த்துக்கல் வீரர்கள் 14 மற்றும் 17ஆவது நிமிடங்களில் கோல் கம்பத்தை நோக்கி அடித்த பந்தை கிரீஸ் கோல்காப்பாளர் கோல் விழாமல் தடுத்து நிறுத்தினார். இது மட்டுமல்லாமல் அந்த அணியினருக்கு மேலும் கோல் அடிக்க பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், அதிர்ஷ்டம் கைகூடவில்லை. இதன்படி ஆட்டத்தின் முதல் இடைவேளையில் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்கவில்லை.




ஆட்டத்தின் 2ஆவது இடைவேளையில் கிரீஸ் அணியினர் சுதாரித்துக்கொண்டு ஆடினர். இதன் பயனாக ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் கிரீஸ் அதன் முதல் கோலை அடித்தது. அந்த அணிவீரர் சாரிஸ்டீஸ் இந்தக் கோலை அடித்து கிரீஸை முன்னிலைப் பெறச் செய்தார்.

கிரீஸ் 1—0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து போர்த்துக்கல் அணி ஆக்ரோஷமாக ஆடியது. இதனால், அந்த அணியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே பெரும்பாலும் பந்து இருந்தது. பதில் கோல் போட போர்த்துக்கல் அணியினர் கோல் கம்பத்தை நோக்கிப் பலமுறை படையெடுத்தும் பலன் கிடைக்கவில்லை. மேலும், போர்த்துக்கல் அணியினரின் கோல் அடிக்கும் வாய்ப்பைக் கிரீஸ் கோல் காப்பாளர் பலமுறை தடுத்து நிறுத்தினார். இறுதியில் ஆட்ட நேரம் முடிவடையும் வரை போர்த்துக்கல் அணியினர் கோல் எதுவும் அடிக்காததால் கிரீஸ் 1—0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 'சாம்பியன்' பட்டத்தை முதல் முறையாக வென்றது.



# பிரிட்டிஷ் இளவரசருக்கு வலைவீசும் தாத்தியானா

'டி.வி' யில் விம்பிள்டன் டெனிஸ் தொடர் பார்த்திருக்கிறீர்களா? மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். அழகழகாய் நிறையப் பெண்கள் 'ரிப்பன்' கட்டிய மாதிரி வித்தியாச வடிவில் உடையணிந்து டெனிஸ் ஆடுவார்கள். விம்பிள்டன் மைதானத்தை ஒரு தடவை சுற்றிப்பார்க்கலாமா?



காப்ரிலா சபாடினி, அன்ன கோர்னிகோவா.... என்று டெனிஸ் அரங்கில் கவர்ச்சிக்கு பஞ்சமே இருக்காது. அந்த வரிசையில் தற்போது 'லேட்டஸ்ட்' புயல் தத்தியானா காலோவின். தற்போது நடைபெற்று முடிந்த விம்பிள்டன் தொடரை 'டீ.வி' யில் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். மிகவும் குட்டையான ஒரு கீழாடை அணிந்து அமர்க்களம் செய்தார் இந்த பிரெஞ்ச் பெண் ( ஆனால், இவர் பிறந்து ரஷ்யாவாம்)


16 வயது தான் ஆகின்றது. பயங்கர சுறுசுறுப்பு. புகைப்படப்பிடிப்பாளர்கள் எல்லோரும் புகைப்படம் எடுக்க இவரைத்தான் விரட்டினார்கள். விம்பிள்டனின் மூன்றாவது சுற்று முடிந்ததும் நிருபர்களை சந்தித்தார் தத்தியானா. "நீங்கள் ஸ்வீட் சிக்ஸ்டீன்.... பாய் பிரெண்ட்ஸ் நிறைய இருக்கிறார்களா? என நிருபர்களிடமிருந்து ஆசையாக கேள்விகள் எழுந்தன. அதற்கு தத்தியானாவின் பதில்களைக் கேட்டு ஆடிப்போனார்கள் நிருபர்கள்.

"பாய் பிரெண்ட் யாரும் வைத்துக் கொள்ளவில்லை ஏன் தெரியுமா.....? பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸிற்காக நான் காத்திருக்கிறேன். *ஆமாம்! வில்லியம்ஸ்தான் என் பேவரைட்!"* என்று ஒரு போடுபோட்டார். (லண்டனில் இப்படி கவர்ச்சி உடையணிந்து டெனிஸ் ஆடவது கூட வில்லியம்ஸ் கவனத்தைக் கவர்வதற்குதானோ.... என்வோ? அரண்மனைக்காரர்கள் எதற்கும் கொஞ்சம் உஷாராய் இருந்தால் நல்லது!) தத்தியானா விருப்பப்படியே, அவரது 'பாய் பிரெண்டாக' வில்லியம்ஸ் கிடைப்பதற்கு நாம் வாழ்த்துவோம்.

அவர் வில்லியம்ஸை நினைத்து உருக.... வில்லியம்ஸ் வடிவில் வினைவந்தது. விம்பிள்டன் தொடரின் 4ஆவது சுற்றில் தத்தியானாவை வீழ்த்தினார் செரீனா வில்லியம்ஸ். மிகவும் சோகமாக வெளியேறினார் தத்தியானா. "செரீனாவை வெல்லது சுலபமல்ல ஆனாலும் தோற்று விடுவேனோ என்று பயந்து கொண்டு தான் கலமிறங்கினேன்.... அதேபோல் தோல்வி அடைத்தேன்." என்று கண்ணை கசக்கியபடியே பறந்தது அந்த பிரெஞ்ச் புயல்.

# லக்ஷ்மிபதி பாலாஜிக்கு கபில்தேவ் கொடுத்த டிப்ஸ்!

இந்தியக் கிரிக்கெட் அணியில் புதிய புயல் போல் நுழைந்து கலக்கிக் கொண்டிருப்பவர் தமிழகத்தைச் சேர்ந்த லக்ஷ்மிபதி பாலாஜி இந்தியக் கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போது இந்திய வீரர்களின் ஆட்டம் பலரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் இருந்தது. குறிப்பாக, பாலாஜியின் பந்து வீச்சு பாகிஸ்தான் அணியினரையே கலங்க வைத்தது.



பாகிஸ்தான் பயணத்துக்குப் பிறகு, இந்திய அணியில்தொடர்ந்து இடம் பெற வேண்டும் என்பதற்காக கடும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் பாலாஜி. சமீபத்தில் பெங்களூரில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு என சிறப்பு பயிற்சி முகாமொன்று நடைபெற்றது. இதில் முன்னாள் அணித்தலைவரே வேகப்பந்து வீச்சாளருமான கபில்தேவ் கலந்து கொண்டு பயிற்சிகளை அளித்தார். இந்தப்பயிற்சி முகாமில் பாலாஜியும் இடம் பிடித்துஇருந்தார்.

பயிற்சி முகாமில் பாலாஜியிடம் கபில்தேவ் மிகவும் பிரியமாக இருந்தார். பாலாஜியும் கபில்தேவிடம் இருந்து பல்வேறு விதமான பந்து வீச்சு நுணுக்கங்களை கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

திறமையான வேகப்பந்து வீச்சாளராக திகழ ஒரு வீரர் என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும், என பாலாஜிக்கு கபில்தேவ் சொல்லிக் கொடுத்தார். அவற்றை மற்ற இளம் வீரர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் பாலாஜி இவ்வாறு விவரித்தார்:—

கபில்தேவ் கொடுத்த டிப்ஸ்பீகளில் சில...

*வேகப்பந்து வீச்சாளராக வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் மனதில் ஓடிக் கொண்டே இருக்கவேண்டும்.

*வீரருக்கும், கிரிக்கெட்பந்திற்கும் இடையே இணை பிரியாத பந்தம் இருக்கவேண்டும். இதற்காக தன்னுடன் எப்போதும் கிரிக்கெட் பந்தை வைத்திருக்க வேண்டும்.

* அடிக்கடி பந்தை எடுத்து கையில் வைத்துக்கொள்ள வேண்டும். அதை தொட்டு, தடவி, சுழற்றி பந்து வீசிக் கொண்டே இருக்கவேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வருவதன் மூலம் நாம் விரும்பும் வகையில் பந்தை சுழன்று வீசச்செய்ய முடியும்.

*கிரிக்கெட் பந்தை குழந்தை மாதிரி கொஞ்ச வேண்டும், அப்போது தான் அதனுடன் நமக்கும் நெருக்கமான பந்தம் வளரும். அவ்வேளையிலேயே சிறந்த வேகப்பந்து வீச்சாளராக வளர முடியும்.

சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்களில் 434 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்திருந்த கபில்தேவ் சொல்லும் இந்த யோசனைகள் இளைய தலைமுறைக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

# அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஐ.சி.சி சூப்பர் சீரிஸ்

'சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கிரிக்கெட் தொடரான ஐ.சி.சி 'சூப்பர் சீரிஸ்' கிரிக்கெட் தொடர், அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

3 ஒரு நாள் ஆட்டங்கள், 6 நாட்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டமொன்றும் கொண்ட 'ரெஸ்ட் ஆப்திவெல்ட் லெவன்' அணி பங்குபெறும் 'ஐ.சி.சி. சூப்பர் சீரிஸ்' தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற உள்ளது.

அடுத்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெறவிருக்கும் இந்தத் தொடரை நடத்த இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய இரு நாடுகளும் வேண்டுகோள் விடுத்திருந்தன. 1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்குப் பின்னர், சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சார்பாக அவுஸ்திரேலியாவில் நடைபெறும் முதல் போட்டி இதுவாகும். இந்திய அணியின் சார்பாக வேல்ட்லெவன் அணியில் சச்சின், டிராவிட், கங்குலி, ஆகியோர் பங்கு பெற வாய்ப்பு உள்ளது.

மேலும் இலங்கை அணி சார்பாக ஜெயசூரிய, முரளிதரன் மற்றும் சமிந்த வாஸ் ஆகியோர் இடம் பெறவும் வாய்ப்புண்டு.

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதியன்று ஒரு நாள் ஆட்டத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் அணியுடன் 'ரெஸ்ட்ஆப்வேலட்' அணி அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 5,7 மற்றும் 9 ஆகிய திகதிகளில் விளையாட உள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்பரல் முதலாம் திகதியில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆகிய இரண்டு ஆட்டங்களிலும் அவுஸ்திரேலிய அணி முதலிடத்தில் இருப்பது ஏறக்குறைய உறுதியான நிலையில் இருப்பதால் இந்தத் தொடரை அவுஸ்திரேலியாவில் நடத்த இதுவே காரணம் என சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

மேலும் டெஸ்ட் ஆட்டத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் அணியுடன் ஒக்டோபர் 14 ஆம் திகதி சிட்னியில் நடைபெற இருக்கும் 6 நாட்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் 'ரெஸ்ட் ஆப்வெல்ட்' அணி மோத உள்ளது.

இந்தத் தொடரில் கலந்துகொள்ள உள்ள 'ரெஸ்ட்ஆப் வேல்ட்' அணியில் அடங்கும் வீரர்கள் விசேட தேர்வுக் கமிட்டியினால் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

# முப்பதாயிரம் நியமனங்கள் மலையகத்துக்கு எத்தனை?



## மலையகக் கண்ணோட்டம்

அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத் துறை அமைச்சருமான மங்கள சமரவீர கடந்த வாரம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை வெளியிட்டார். அதாவது இம் மாதத்தில் முப்பதாயிரம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதே அந்த செய்தி. அதில் ஒரு விசேஷம் என்னவென்றால் ஜீ.சி.ஈ. சாதாரணம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் கூறினார்.

இதைக் கேட்கவும் — பத்திரிகைகளில் வாசிக்கவும் நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால், இது மாகாண சபைத் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகப் போடப்பட்ட ஒரு தேர்தல் குண்டா என்பதும் கேள்விக்குரியதாகி உள்ளது.

அப்படியே வழங்கினாலும் அதில் மலையக இளைஞர், யுவதிகளுக்கு எத்தனை வீதம் பங்கு கிடைக்கும்? எத்தனை பேருக்கு தொழில் வழங்கப் போகின்றார்கள்? காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்த மலையக இளைஞர்களுக்கு இதுவும் ஒரு கானல்நீர் போல்தான் ஆகிவிடுமா?

அமைச்சர்கள் மங்கள சமரவீர இதனை அறிவிக்கும் முன், அதாவது ஒரு மாதத்தின் முன் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் மலையக இளைஞர், யுவதிகளிடமிருந்து பொதுவான விண்ணப்பங்களைப் பெற்றிருந்தார்.

அந்த விண்ணப்பத்தில் ஜீ.சி.ஈ. உயர்தரம், சாதாரண தரம் சித்தி அடைந்தவர்களின் விவரங்கள் கோரப்பட்டிருந்தன. மேலும் அவரவர் எத்தகைய தொழில்களை விரும்புகின்றனர் என்றும் கேட்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகங்களுக்கும், கல்வியியல் கல்லூரிக்கும் செல்ல முடியாத நிலையில் இருக்கும் 12 ஆயிரம் மலையக இளைஞர் யுவதிகள் இதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

மலையகத்தைப் பொறுத்தவரை தமிழ் பாடசாலைகளில் 18 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்றன.

மாவட்டக் கச்சேரிகள், பிரதேச செயலகங்கள் என்பவற்றில் தமிழ் எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

மேலும் மலையகத்தில் தமிழ் கிராம சேவகர்கள் நியமனம் கண்துடைப்பாகவே இருக்கின்றது. அப்படியே சமுர்த்தி அதிகாரிகள் நியமனமும்.

இந்த அமைச்சர்களும் அரசாங்கமும் தோட்டப்புற இளைஞர்களை ஓரம் கட்டமாட்டோம் பெருந்தோட்டத்துறையை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம் என்று அடிக்கடி கூறுகின்றனர்.

இது வெறும் மேடைப் பேச்சாகவும், பத்திரிகைச் செய்தியாகவும் மட்டும்இருந்து விடக் கூடாது. அதனை செயற்படுத்த வேண்டும்.

பெருந்தோட்டத்துறைகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கலாநிதி பிரதாப் இராமானுஜம் நியமிக்கப்பட்டுள்ளார். எந்தக் கட்சி அரசாங்கமா இருந்தாலும் கறைபடியாத கரங்களுடன் நேர்மையாகவும் துணிச்சலுடனும் செயற்படக் கூடிய வல்லமை கொண்டவர். அவர் மலையக இந்திய வம்சாவளி வந்தவர். கலாநிதி பிரதாப் இராமானுஜத்தின் தந்தையார் முதலாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு மலையக மக்களுக்காக பெருஞ்சேவையாற்றியவர்.

அவருடைய தாயார் வைத்திய கலாநிதி சரோஜினி இராமானுஜம் மலையகத்தில் பெருந்தொண்டாற்றியவர். வைத்தியத் துறையில் மட்டுமல்ல சமூகத் தொண்டிலும் சமயத் தொண்டிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சைவ மங்கையர் கழகத்தின் தலைவியாக செயற்பட்டு அதன் வரலாற்றில் தனியான முத்திரை பதித்து விட்டுச் சென்றவர்.

இப்படி மலையக சமுதாயத்துக்காகவே தமது வாழ்நாளை செலவிட்ட ஒரு தியாகப் பரம்பரையில் பிறந்த கலாநிதி பிரதாப் இராமானுஜம் பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளராக வந்திருப்பது மலையக சமுதாயத்துக்குஒரு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது.

அமைச்சர்கள் தேர்தல் வந்தால் இன்று இருப்பார் நாளை போவார் என்ற வரவிலக்கணத்துக்குள் அமைபவர்கள். ஆனால், செயலாளர்கள் நிரந்தரமானவர்கள். அமைச்சின் பொறுப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களும் இந்த அமைச்சர்களே. இதில்சந்தேகம்இல்லை.

பெருந்தோட்டத்துறை அமைச்சினால் கோரப்பட்ட விண்ணப்பங்களும் கலாநிதி பிரதாப் இராமானுஜத்தின் பெயரிலேயே கோரப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனை செயல்படுத்த வேண்டியவரும் அவரே. இன்றை அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எவருமே அமைச்சரவையில் இல்லை. அமைச்சரவையில் குரல் எழுப்பவும் முடியாத நிலை. முன்பு அமைச்சர்களாக இருந்தபோது மட்டும் எதைச் சாதித்து கிழித்து விட்டார்கள் என்பது பழைய கதை. எனவே ஜீ.சீ.ஈ. உயர்தர, சாதாரண தர தகுதியுடைய முப்பதாயிரம் பேருக்கு உடனடி தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது.

எனவே இந்த முப்பதாயிரம் நியமனங்களில் மலையக இளைஞர் யுவதிகளுக்கு விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் ஒதுக்கப்பட வேண்டும். மலையகத் தலைவர்களுக்கு கிடைக்கும் பங்கைத் தட்டிப் பறிக்கவோ அல்லது வெளியார் ஊடுருவல்களுக்கோ இடமளிக்காமல் மலையக இளைஞர், யுவதிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். அரசியல் தலையீடுகளின்றி தகுதியடையவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படவேண்டும். காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்ததுபோல் இம்முறையும் ஏமாற்றப்படக் கூடாது. நியமனங்களா? இல்லை ஏமாற்றமா? பொறுத்திருந்து பார்ப்போம்.



## சொல்லாதே இது இரகசியம்!

இலங்கைத்தீவின் மறு பெயரையே தனதாக்கிக்கொண்ட அந்தத் தோட்டத் தமிழ்ப் பாடசாலையில் பாடம் நடக்கிறதோ இல்லையோ, ஆசிரியர்கள் வருகின்றார்களோ இல்லையோ, தின வரவும், பாடப்பதிவேடும் ஒழுங்காகப் பதிந்திருக்கும். ஏன் என்றால்,வாரம் ஒரு முறை ஒரே நாளில் ஒழுங்கு முறையாகப் பதிந்துவிடுவார்களாம்.

இப்பாடசாலையில் படிக்கும் ஒரு மாணவன் மூன்று மாதங்களுக்கு மேலாக இரத்தினக்கல் வர்த்தக பூமியில் பெரிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றாராம். இவரும் பாடசாலைக்கு வந்ததாக தினவரவு கூறுகின்றதாம்.

இது ஒன்று போதாதா அந்த உயர் கல்வி அதிகாரிகளுக்கு. இந்தப்பாடசாலைக்குப் பொறுப்பான தாய்க்குலம் வாரம் ஒரு முறை தனியாக வந்துதரிசனம் தர வேண்டும் என்பது வாடிக்கையாகிவிட்டதாம்.

அண்மையில் ஒருநாள் தாய்க்குலத்துக்கு தவிர்க்க முடியாத அலுவல். இதனால் தனது துணைவனிடம் ஒரு பைலைக் கொடுத்து, இதைக் கொண்டுபோய் அதிகாரியிடம் கொடுத்துவிட்டு இந்த வாரம் மீட்டிங்கிற்கு வர முடியவில்லை என்று சொல்லிவிட்டு வாருங்கள் என்று தூது அனுப்பியதாம்.

அவசரமான மீட்டிங் போல, என்று கருதிய பதியும் அவசரமாகப் போயும் பஸ் கிடைக்கவில்லை. தாமதமாகி அதிகாரியின் வீட்டு மணியைஅடித்தாராம்.

ஒருமுறை அடிப்பதற்குப் பதிலாக மூன்று முறை அழுத்திவிட்டாராம். பாவம். இந்தப்பதிக்குத் தெரியாது மூன்று முறை அடிப்பதுதான் இரகசிய சிக்னல் என்று.

ஆகா தாய்க்குலம் வந்துவிட்டது என்ற கணிப்பில் தாய்க்குலத்தின் பெயரைச் சொல்லி "அடியே கள்ளி எங்கே வராமல் ஏமாத்திவிடுவாயோ என்று பார்த்தேன். உனக்காக ஸ்பெசல் வச்சிருக்கேன். வரப் பிந்தியதால் முதல் ரவுண்டை ஏற்றிவிட்டேன். கெதியா வா. போன வாரத்தில் விட்ட குறையும் முடித்துவிடலாம்." என்று கூறிக் கொண்டே கதவைத்திறந்தாராம்.

இதை எல்லாம் கேட்டு ஆத்திரமடைந்த பதி பைல் கட்டை அந்த அதிகாரியின் முகத்தில் வீசிவிட்டு புயல்போல் திரும்பினாராம். இதன் எதிரொலி தாய்க்குலத்தின் கூந்தல் விஜய் கட் போல் ஆகிவிட்டதாம். உயிருக்கு வந்தது மயிருடன் போனதே என்று தாய்க் குலத்துக்கும் ஒரு திருப்தியாம்.



## டேஸ்க்கடை தணிகாசலம்

நீண்ட இடைவெளிக்குப் பின் தணிகாசலம் அண்ணரை பார்க்க கல்விப்பணிப் பாளர் இராசாத்தி வந்திருந்தாள். இருவரும் பேசிக் கொண்டே கோயிலடிக்கு வந்து விட்டனர். அப்போது சிறிதும் எதிர்பாராத வேளையில் கதிரேசன் துரையும் அங்கு வந்து சேர்ந்தார்.

"வணக்கம் அண்ணே, குட் மோர்னிங் இராசாத்தி" என்று கூறிக் கொண்டே வந்தார் கதிரேசன் துரை.

"வணக்கம் தம்பி" "குட் மோர்ணிங் கதிர்" என தணி அண்ணனும் இராசாத்தியும் பதில் மரியாதை செலுத்தினர்.

"அண்ணன் என்ன காலையிலேயே இரண்டு பேரும் தீவிரமாக விவாதம் பண்ணிக்கிட்டு வாரீங்க, ஏதாவது விஷேசமா?" என்றான் கதிரேசன் துரை.

"ஆமாம் கதிர் நான் நடை, உடை பாவனையா இருக்கிற நேரமே ஒங்க ரெண்டு பேருக்கும் ஒரு விசேஷம் நடத்தி வைக்கலாம் என்று துடிக்கிறேன். ஆனால், நீங்க ரெண்டு பேரும் பிடிவாதமா தட்டிக் கழித்துக் கொண்டே வாரீங்க" என்று ஒரு போடு போட்டார் தணி அண்ணன்.

"அண்ணனோட கவலை நீடிக்காது. கூடிய சீக்கிரமே உங்கள் ஆசையை நிறைவேற்றுவோம்" என்றார் கதிரேசன்.


"அடே அப்பா அப்படியா சங்கதி! ரொம்ப சந்தோசம். இந்த இராசாத்திக்குட்டி ஒரு வார்த்தை கூட சொல்லலியே" என்று செல்லமாகக் கடிந்து கொண்டார் தணி அண்ணன்.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் முகம் சிவக்க மௌனமானார் இராசாத்தி. என்னதான் பெரிய கல்விப் பணிப்பாளர் என்றாலும் அவளும் ஒரு பெண் தானே!

"சரி சரி இப்பவாவது ஒரு முடிவுக்குவந்தீங்களே! அதுவே பெரிய சந்தோஷம். இனி நடக்க வேண்டிய காரியத்தைப் பார்க்கவேண்டியது தான்" என மகிழ்ச்சியில் மிதந்தார் தணி அண்ணன்.

"அண்ணே இப்ப நான் ஒரு முக்கியமான விசயமாகத்தான் உங்களைப் பார்க்க வந்தேன். இந்த பேப்பரைப் பாருங்க" என்று பேப்பரை நீட்டினாள் இராசாத்தி.

"அப்படி என்ன அம்மா பேப்பர்ல போட்டு இருக்கு?" என்று கேட்டுக் கொண்டே பேப்பரைப் புரட்டினார் தணி அண்ணன்.



"என்ன இராசாத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.மார் மலையகத்தில் வந்து தேர்தல் பிரசாரம் செய்வதைப் பற்றிப் போட்டு இருந்தாங்களே! அதையா சொல்றீங்க" என்றார் கதிரேசன் துரை.

"ஆமாம் கதிர் அதைப் பத்தித்தான் சொல்ல வந்தேன்" என்றார் இராசாத்தி.

"இது என்ன அம்மா பெரிய வயிற்றெரிச்சல் புடிச்ச கதையா இல்ல இருக்கு. நாடாளுமன்றத்தில எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றாய் சேர்ந்து கை ஒப்பம் போடுராங்க. இங்க வந்த பொறவு முருங்க மரத்தில ஏறிக்கிறாங்களே."

"ஆமாங்க அண்ணே. ஒருத்தர் சொல்லி இருக்கார் பாருங்க, வடக்கு கிழக்குப் பகுதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலையகத்தில் வந்து தேர்தல் பிரசாரம் செய்வது உணர்ச்சியைத் தூண்டிவிடுவதாக இருக்கின்றதாம். இது ஓரம் கட்டப்பட்ட ஒரு அரசியல் வாதியின் புலம்பல்" என்று கிண்டலடித்தாள் இராசாத்தி.

"அதோட அவர் நின்று விடவில்லை. இப்படியான பேச்சுக்களால் இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு விடுவார்கள். மலையகத்தில் அமைதி கெடும் என்று இல்லையா ஒப்பாரி வைத்துள்ளார்" எனச் சுட்டிக் காட்டினார் கதிரேசன்.

"நீங்கள் ரெண்டு பேரும் சொல்லுரது சரிதான். இந்த ஆசாமியை தான் ஒரு காலத்தில ஓட ஓட விரட்டினாங்கள். ஆள் வச்சி அடிச்சாங்க. மொகத்தையே அலங்கோலம் பண்ணினாங்க. காசு கொடுத்து பதவியையே வாங்கியவர் என்றும் ஒரு கதை. இப்ப என்னடா என்றால் தம்பிக்கு சப்போட்டா பேசுறதா நெனைச்சு அண்ணரை சாடுகின்றார்.

இவர் ஒரு கொள்கை இல்லாத ஆளு என்று சின்னப் பிள்ளைகள் கூட நக்கல் அடிக்கிறாங்கள். இது தெரியாதா?" என்றார் தணி அண்ணன்.

"அண்ணே இன்னும் ஒரு விடயத்தைப் பாருங்கள். இன்னும் ஒரு தலைவர் சொல்கிறார் வடபகுதி எம்.பிமாரின் பேச்சை வைத்து அரசியல் நடத்துகின்றார்கள்" என்று சுட்டிக் காட்டினார் இராசாத்தி.

"அம்மா நீ சொல்லுறதும் சரிதான். இந்த தலைவர் ஆனா அந்தமடம், போனா சந்தை மடம்னு பேசுவர். தனக்கு வசதியா எது படுதோ அதை செய்து போட்டு மக்கள் தீர்ப்பு என்று மழுப்பிவிடுவார். இவங்களுக்கு எல்லாம் எதையும் புதிதாக செய்யத் தெரியாது. ஆனால், காலம் காலமா மத்தவங்களை இழக்காரமாகவும், கீழ்த்தரமாகவும் விமர்சனம் செய்வதில் மட்டும் கெட்டிக் காரர்கள்" என்றார் தணி அண்ணன்.

"எது எப்படியோங்க அண்ணே இந்த தேர்தல் முடிஞ்சகைக்கு யானையின் காலையே வாரிவிடப் போராங்க. ஏன்னா அவுங்களுக்கு தேவை மந்திரிப்பதவிதானே!" என சூடாக கொடுத்தார் கதிரேசன்துரை.

"அண்ணே இதில சந்தேகப்பட ஒன்னுமே இல்லை. ஒரு கத்துக்குட்டி வெளிப்படையாகவே சொல்லி இருக்கு, பத்தாம் திகதி மாலை 4 மணிக்கு மாகாணசபை தேர்தல் முடிந்தவுடன் யானை சின்னத்தை மறந்து விடுவோம் என்று."

"என்னம்மா செய்வது? எல்லாம் இந்த மலையக மக்களோட தலைவிதி. அவுங்களை ஈடு வைத்து பதவிக்கு வராங்க. அப்புறம் ஏறிவந்த ஏணியை உதைப்பது போல் கலரை மாத்திக்கிராங்க. அவுங்களுக்கு ஆண்டவன்தான் தண்டனை கொடுக்க வேண்டும். ஏமாறும் சனங்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களுக்கு கொண்டாட்டம்தான். எது எப்படியோ நம்ப ஈழவேந்தன் ஐயா மலையகத்தை ஒரு கலக்கு கலக்கி விட்டார். அவரைக் கண்டு, அவரது பேச்சைக் கேட்டு ஒரு புது யுகம் ஆரம்பிக்க போகிறதுமட்டும் உண்மை" எனக் கூறி மூவரும் தணி அண்ணன் வீட்டை நோக்கி சென்றனர்.

உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!
யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085
**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667
**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

LWL **லங்கா வோல்டைல் லிமிரெட்,**
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450
நீடித்து நிலைக்கும் அழகுமயம்







# வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும்
சுவைமிக்க விட்டமின் பானம்

**Hungry Plus**

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




**ஹங்ரி பிளஸ்**
பசியைத் தூண்டும்...
இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011-2470290

# திருமண காலத்திற்கான

# ஜெனா சிற்பக் கலைக்கூடம்



* லண்டன் மாநகரில் உள்ள
ஆலயங்களுக்கு 7 தேர்களை
3 வருடத்தில் அமைத்தவர்கள்.
* சித்திரத் தேர்கள்
* தங்கத் தேர்கள் * வாகனங்கள்
* முத்து மணவறைகள்
* பூ மணவறைகள் (Plastic)

மணவறைகள், சித்திரத் தேர்கள், வாகனங்கள்
முதலியவற்றை வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்வதில்
இலங்கையின் முன்னணி நிறுவனம்

பிரதான உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும்

# JENA HANDICRAFT

**S. JEYAKANTHAN**
284-285, Modera Street, Colombo - 15.
Tel.: (011) 2 522956, 2 527820. Mobile: 0777 396608.
E-mail: s.jeyakanthan@hotmail.com



இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜூலை 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.